
www.padippakam.com

யுனெஸ்கோ
# கூரியர்
அக்டோபர்—1988 தனிப்பிரதி ரூ. 2-00




## உலக மரபுச் செல்வம்

அனைவரின் மரபுரிமை

படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: யுனெஸ்கோ/வேரான்ட்ஸாஃப்

**சிகிரியா (இலங்கை)**

பண்டைய நகரான சிகிரியா மாபெரும் சிவப்பு அடுக்குப் பாறையின் அடிவாரத்திலுள்ளது. அப்பாறையின் உச்சியில் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் முதலாம் காசியப்ப மன்னர் ஓர் அரண்மனையைக் கட்டினார். (வான்தோற்றம், முன் அட்டை). அதற்குச் செல்வதற்குப் பாறையின் முகப்பில் ஒரு படிக்கட்டு செதுக்கப்பட்டிருந்தது. அப்படிக்கட்டு பாறையின் அடிவாரத்திலிருந்த ஒரு பெரிய பதுங்கிய சிங்கச் சிலையின் முன்பக்கமிருந்துதொடங்கியது. அச்சிங்கத்தின்பாதங்களே இப்போதுள்ளன(மேலே). அச்சிங்கத்தின் பெயரையே அப்பாறையும், பிறகு அந்நகரும் பெற்றன. மன்னர் இறந்தபின், முன்னால் அங்கு வாழ்ந்த பௌத்த துறவிகளிடம் ''சிங்க மலை ' கொடுக்கப்பட்டது. நாளடைவில் அதை யாரும் கவனிக்வில்லை. அரண்மனையின் அழிபாடுகளும் அதன் நன்னீர்த் தொட்டிகளும் கண்ணைக் கவர்கின்றன. நகரின் கீழ்பகுதியில் உயர்குடி மக்கள் வாழ்ந்த இடங்களில் எழிலார்ந்த அடுக்குத் தளத்தோட்டங்களும். படர்ந்த செடிகள் அகற்றப்பட்ட கட்டிட அழிபாடுகளும் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக பாறையின் மேற்கு முகப்பில் பாதி உயரத்தில் காணப்படும் பாறை ஓவியங்களே சிகிரியாவுக்குப் புகழ் தருபவை. அவ்வோவியங்களில் ''முகில் மங்கையர்'' எனப்படும் 21 அழகிய நங்கைகள் உள்ளனர். அவை அஜந்தாவின் சுவரோவியங்கள்போல் அழகுள்ளவை. 1982இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இப்பகுதிக்கு இடையறாத கவனம் தேவை. அகழாய்வு, மற்றும் பகுதி முன்னேற்றம் போன்ற திட்டங்களை யுனெஸ்கோ தொடங்கியுள்ளது. 1978இல் ஏற்பட்ட புயலாலும் அரிப்பு பூச்சிகளின் தாக்குதல் ஆகியவற்றாலும் ஊறுபட்ட ஓவியங்களைப் பேணும் பணி இப்போது நடந்துவருகின்றது. ஓவியங்கள் தீட்டப்பெற்ற சுண்ணாம்பைத் திண்மையாக்குவதற்காக, பூச்சிகள் தோண்டிய துளைகளுள் செயற்கைப் பிசின் பீச்சப்படுகின்றது.

அட்டை: ஒளிப்படம் ஆர். சிங் © ஏ.என்.ஏ, பாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியப் பண்பாட்டில் தமிழ்நாட்டின் பங்கு

நடன. காசிநாதன்

இந்தியத் திருநாட்டின் கலை, பண்பாட்டு ஏற்றத்திற்குப் பல கலை, கலாச்சார தாக்குதல்கள் துணை புரிந்து வருகின்றன என்பதைக் கலை வல்லுநர்கள் ஒப்புக்கொள்கின்றனர். குறிப்பாகத் தமிழ்நாட்டுக் கலை, கலாச்சாரத் தொடர்பு இந்தியத் திருநாட்டின் கலை, கலாச்சார வளர்ச்சிக்கு பெரும் அளவு உதவியிருக்கின்றது என்பது கீழ்க்காணும் உண்மைகளால் புலப்படுகிறது.

இந்தியாவின் வரலாற்றை ஆராய முற்படுவோமானால் பழையகற்காலம் தொட்டு தொடங்குதல் வேண்டும். அந்தப் பழைய கற்காலம் தொட்டே தென் இந்தியாவின் தென் கோடியில் உள்ள தமிழகத்திற்கும், வடஇந்தியாவின் வட கோடியில் உள்ள காஷ்மீரத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பது பண்டைய வரலாற்றினை ஆய்வு செய்யும் அறிஞர்கள் கூறுகின்ற கருத்தாகும். தமிழகத்தின் வடபகுதியான செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அத்திரம்பாக்கம் என்னும் இடத்தில் பெருமளவில் காணப்பெறும் பழங்கற்காலக் கருவிகளின் உருவங்களிலும், காஷ்மீரத்தில் உள்ள சோஹான் பள்ளத்தாக்கில் கிடைக்கப்பெறும் பழம் கற்காலக் கருவிகளின் உருவங்களிலும் சில ஒற்றுமைத் தன்மை காணப்படுகின்றன. இவ்வொற்றுமை அக்காலத்தில் தமிழகத்தின் பண்பாடும், காஷ்மீர தேசத்தின் பண்பாடும் ஒருங்கிணைந்து இருந்தது என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. இத்தன்மை தமிழகக் கலாச்சாரத் தாக்குதலால் ஏற்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

கற்கால வரலாற்றையடுத்து நாம் அறியக்கூடியது மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிக வரலாறேயாகும். மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் திராவிடர்களின் முன்னோர்கள் (Proto Dravidians) என்று பின்லாந்து, மற்றும் ரஷ்ய அறிஞர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்திய நாட்டின் மேற்குப் பகுதியினை அடுத்துள்ள பகுதியான பலுசிஸ்தானத்தின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் "பிராஹுயி" என்னும் மொழியினைப் பேசுவதாகவும், அம்மொழி திராவிட மொழியினைச் சார்ந்தது என்றும் ஆராய்ச்சி வல்லுநர்களால் கூறப்படுகிறது. அவ்வாறெனில் திராவிடர்களின் முன்னோர்கள் மொஹஞ்சதாரோ, ஹரப்பா, பலுசிஸ்தானம் போன்ற பகுதிகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. திராவிடர்களின் முன்னோரின் திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, தூய்மை காத்தல், சுகாதாரம் பேணுதல், சிவன் வழிபாடு, தாய் வழிபாடு போன்ற பல பண்பாட்டுக்கூறுகளை நாம் மொஹஞ்சதாரோ ஹரப்பாவில் காண முடிந்துள்ளது. அவர்களுடைய அந்தக் கலாச்சாரத் தன்மை பிற்காலத்தில் அப்பகுதியிலும், அதனையொட்டிய வட இந்தியப் பகுதியிலும் தாக்கி முழுமைபெற்றிருக்கிறது என்பதை பிற்காலத்தில் அங்கு வந்து குடியேறிய ஆரியர் நாகரிகத்திலும், மற்றும் பிற பிற்கால மன்னர்களுடைய நாகரிகங்களிலும் கண்டுணர முடிகிறது. ஆரியர்களின் கருவூலம் என்று கருதப்படும் நான்கு வேதங்களிலும் திராவிடர்களின் கலாச்சாரத்தினுடைய தாக்குதல் காண முடிகிறது என்று வேதங்களை நுணுகி ஆய்ந்த மொழி வல்லார் தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக ரிக் வேதத்தில் சில திராவிட சொற்களை இனம் கண்டு பர்ரோ மற்றும் யமனோ என்ற மொழி நூல் வல்லுநர்கள் தெரியப்படுத்தியிருக்கின்றனர். மயில், களம், வலம், பழம் முதலிய திராவிடச் சொற்களில் இருந்து எழுந்த ஆரிய சொற்களை ரிக் வேதத்தில் அவர்கள் இனம் கண்டு கூறியுள்ளனர். மேலும் ஏலம், பல்லி, புற்று, மலை, நீர், மாலை முதலிய திராவிட சொற்களில் இருந்து எழுந்த அரிய சொற்களை பிற வைதிக நூல்களிலும், இதிகாசங்களிலும் தெரிவித்துள்ளனர். ஆதலால் திராவிடர்களின் கலாச்சாரம் ஆரியர்களுடைய கலாச்சாரத்தோடு சில வகைகளில் ஒன்றி இணைந்து இருக்கிறது என்பதை நாம் கண்டுணர முடிகிறது. ரிக் வேத சூக்தம் 1-ல் 'ஹரியூபிய' என்னும் இடத்தில் இந்திரன் உதவியினால் ஒரு ஆரிய அரசன் தன் பகைவர்களை முறியடித்தான் என்று குறிப்பிட்டிருக்கிறது. இந்த 'ஹரியூபிய' என்பது ஹரப்பாவைக் குறிக்கும் என்று கருதப்படுகிறது. மேலும் தாசர்கள் என்று ரிக் வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளவர் சிந்துவெளி மக்களே என்றும் கூறுகின்றனர்.

சிந்துவெளி நாகரிகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உருவ எழுத்துக்கள் திராவிட மொழிக்கூட்டை, குறிப்பாக தமிழைச் சார்ந்தது என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இந்தியில் கிடைத்திருக்கின்ற மிகப் பழைய எழுத்து ஹரப்பன் நாகரிக உருவ எழுத்தேயாகும். இந்த எழுத்தில் இருந்துதான் 'பிராமி' எழுத்து வளர்ச்சிப் பெற்றிருக்கக்கூடும் என்று அறிஞர்களால் கருதப்படுகிறது. ஹரப்பன் நாகரிகத்தையடுத்து இந்தியாவுக்கு வந்த ஆரிய இனத்தவருக்கு எழுத்து என்ற ஒன்று இல்லையென்று நம்பப்படுகிறது. அவர்கள் காலத்திய வேதங்கள் அனைத்தும் மனப்பாடமாக்கியே பயிலப்பட்டது என்று கூறப்படுகிறது.

தமிழகத்தில் கி.மு. 4-3ஆம் நூற்றாண்டில் இருந்தே தமிழ் எழுத்தை எழுதக்கூடிய எழுத்து ஒன்று வழக்கில் இருந்து வந்தது. அந்த எழுத்து "தமிழி" என்றும் "திராவிடி" என்றும் பௌத்த, சமண இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே காலத்திலோ அல்லது அதற்குச் சற்றுப் பிந்தைய காலத்திலோ வட இந்தியாவில் 'பிராமி' எழுத்து வழக்கில் இருந்திருக்கிறது. மௌரியப் பேரரசன் அசோகன் காலத்தில் தான் இந்த எழுத்து நிரம்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எழுத்தைப் பற்றிய ஆய்வு செய்யும் அறிஞர்கள் அசோகன் காலத்தில் தான் இந்தப் 'பிராமி' எழுத்து உருவாக்கப்பட்டது என்று கருதுகிறார்கள். அவ்வாறெனில் அதற்கு முன்பே தமிழகத்தில் வழக்கில் இருந்ததாகக் கருதப்படும் 'தமிழி' எழுத்தில் இருந்து 'பிராமி' எழுத்து வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது இதற்கு ஆதாரமாக ஹரப்பன் உருவ எழுத்து திராவிடர்களின் முன்னோர்களைச் சார்ந்தது என்று கருதுவதாலும், அந்த எழுத்தின் வளர்ச்சியே தமிழகத்தில் வழங்கிய "தமிழி" எழுத்து என்பதாலும், அந்த "தமிழி" எழுத்தின் சம காலத்திலோ அல்லது அதற்குச் சற்று பிந்திய காலத்திலோ பிராமி எழுத்து தோன்றியது என்று கருதப்படுவதாலும் 'பிராமி' எழுத்து தமிழி எழுத்தில் இருந்து வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்று அவர்கள் காரணம் கூறுகிறார்கள். எது எவ்வாறாயினும் ஹரப்பன் கால எழுத்தில் இருந்துதான் இந்தியாவில் உள்ள அனைத்து எழுத்துக்களும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆதலால் ஹரப்பன் கால நாகரிகத்தின் சொந்தக்காரர்களான திராவிடர்களின் முன்னோர்களின் எழுத்துதான் இன்று பல எழுத்துக்களாக மலர்ச்சி பெற்று இந்தியாவின் பல பாகங்களிலும் வழங்கப்பெற்று வருகிறது. ஆதலால் ஹரப்பன் காலத்து மக்களின் பண்பாட்டுத் தாக்கமே இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை நாம் உணரலாம். அதற்குப் பிறகு சங்க காலத்தில் முடியுடை மூவேந்தரும் இமயம் வரை படையெடுத்து சென்று தங்கள் இலச்சினைகளான வில், புலி, கயல், சின்னங்களைப் பொறித்து வந்துள்ளதாக இலக்கியங்கள் கூறுகின்றன. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் தக்கணத்தை ஆட்சி புரிந்த சாதவாகன மன்னர்கள் தாம் வெளியிட்டுள்ள காசுகளில் தமிழி எழுத்தில் தமிழ் மொழியில் தங்கள் பெயரை பொறித்துள்ளனர். இவை தமிழ்நாட்டுக் கலாச்சாரம் பிற பகுதிகளுக்கும் பரவியதை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. கி.பி .8ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்திலேயே வளர்ச்சி அடைந்த கட்டிடக் கலையின் தாக்கத்தை தக்கண பீடபூமியை ஆட்சிசெய்த சாளுக்கிய வேந்தர்களின் கலை பாணியில் காண முடிகிறது. எல்லோராவில் மலையைச் செதுக்கி அமைத்து இருக்கும் கைலாசநாதர் ஆலயம், காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவர் காலத்தைச் சேர்ந்த கைலாசநாதர் ஆலயத்தை மிகவும் ஒத்து காணப்படுகிறது.

கி.பி. 8·ஆம் நூற்றாண்டில் இந்திய நாட்டின் தென் கோடியில் உள்ள

(தொடர்ச்சி IVஆம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# கூரியர்

* தமிழ் உட்பட 35 உலக மொழிகளில் வெளிவந்து அறிவுப் புரட்சி செய்துவரும் ஒரே சர்வதேச மாத இதழாக மலர்கிறது!

* சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி, கலை, பண்பாடு, தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளைப் பற்றி உலக அறிஞர்கள், எழுதும் கருத்துக் களஞ்சியமான ஆய்வுக் கட்டுரைகள்!

* எல்லா வயதினருக்கும் ஏற்ற, ஆவலைத் தூண்டும் அரிய செய்திகள், படங்கள், விளக்கங்கள், வண்ணப் படைப்புகள் இதழ்தோறும்.

* தமிழின் தனிப பெரும் ஆற்றலைத் தரணிக்குணர்த்தி, 'தமிழ் ஓர் அறிவியல் மொழி' என்பதை செயல்பூர்வமாக நிலைநாட்டி, அதன் வளர்ச்சிக்கு வழி காட்டும் தனிப் பெரும் தமிழ் ஏடு!

* சர்வதேசக் கண்ணோட்டத்தில் உலகைக் காட்டும் பலகணியாக தமிழில் வெளி வந்து கொண்டிருக்கும் இவ்விதழ் இல்லந்தோறும் இடம்பெற வேண்டிய சிந்தனைக் கருவூலம் ஆகும்.

# கூரியர்

*இதழின் விலை ரூ. 2/-*

*தனிப்பட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 21/-*

*கல்வி நிலையங்களுக்கும் நூலகங்களுக்கும் சலுகைச் சந்தா ரூ. 19/-*

*தமிழகமெங்கும் ஏஜெண்டுகள் தேவை*

**விபரங்களுக்கு எழுதுக :**

**யுனெஸ்கோ கூரியர்**

**தென் மொழிகள் புத்தக நிறுவனம்**

**18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை**

**சேத்துப்பட்டு. சென்னை-600 031**





படிப்பகம்

www.padippakam.com

அக்டோபர் 1988
OCTOBER 1988

4

அனைவரின் மரபுரிமை
-ஃபெட்ரிக்கோ மேயர்
யுனெஸ்கோ தலைமை இயக்குநர்

5

உலகின் காடுகள்
-அலிசன் ஜாலி

12

பண்டைய நகர்களைப் பேணுதல்
-மூனிர் பூஷனாக்கி

16

மீண்ட காலம்
*பண்பாட்டுப் பகுதிகளையும் கட்டிடங்களையும் காட்டும் ஒரு வரலாற்றுக் காட்சி*
-ஜார்ஜ் மிச்செல்

27

புனித உணர்வு
*புனித இடங்கள் பேணும் பண்பு நெறிகள்*
-ஓலக் கிராபர்

32

உலக மரபுச்செல்வம் எனும் கருத்து
-மிஷேல் பாரந்த்

34

செயல்படும் கருத்து
*உலக மரபுச்செல்வ ஒப்பந்தமும் அது செயல்படும் வகையும்*

37

உலக மரபுச்செல்வப் பட்டியல

# ஆசிரியர் மடல்

பல ஆண்டுகளாக யுனெஸ்கோ பண்பாட்டு, மற்றும் இயற்கை மரபுச் செல்வங்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வந்துள்ளது. இச்செல்வங்கள் கடந்த கால நாகரிகங்கள் படைத்த எழில் கட்டிடங்களும் பகுதிகளும், மக்கள் வாழ்ந்து தம் பண்பாட்டுத் தனித்தன்மையை உருவாக்கிய இயற்கைச் சூழலுமாகும். இப்பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு நியூபியாவின் கட்டிடங்களைக் காக்கும் பன்னாட்டு முயற்சி. 1960 இல் யுனெஸ்கோ தொடங்கிய இம்முயற்சி கடந்த காலத்தின் அரிய சின்னங்கள் சிலவற்றை வருங்காலத் தலைமுறையினருக்குக் காப்பாற்றித் தந்துள்ளது.

1972இல் யுனெஸ்கோ பொது மாநாடு உலக மரபுச் செல்வ ஒப்பந்தத்தை ஏற்றது இவ்வரலாற்றில் ஒரு புதிய தொடக்கமாக இருந்தது. இவ்வொப்பந்தம் உலகப் பண்பாட்டு. மற்றும் இயற்கை மரபுச் செல்வங்கள் மனுக்குலம் முழுவதற்கும் சொந்தமென முதன் முதலாக உறுதிப்படுத்தியதுடன், உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெறும் அரிய இடங்களையும் கட டிடங்களையும் காப்பது ஒவ்வொருவரின் கடமை என்பதையும் வலியுறுத்தியது. இதனால் நாடுகளிடையே ஒரு புதிய வகை கூட்டுறவையும் ஒருமைப்பாட்டையும் யுனெஸ்கோ உருவாக்கியுள்ளது. இதை வளர்ப்பது யுனெஸ்கோவின் பணி.

எட்டு ஆண்டுகளுக்கு முன் 1980 ஆகஸ்டில் "யுனெஸ்கோ கூரியர்" இத்திட்டம்பற்றி ஒரு தனி இதழ் வெளியிட்டது. இன்றைய இதழ் இதை இன்று வரை விளக்குகிறது. இது உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பல்வேறு இடங்களைக் குறிப்பிடுவதுடன், அவற்றுள் சிலவற்றைப் பற்றிக் குறுகிய விளக்கமும் தருகின்றது. பட்டியலில் இடம்பெற்றவற்றில் எண்ணிக்கை மிகுதியானதால் (65 நாடுகளிலுள்ள 288 செல்வங்கள்), போதுமான அளவு அவற்றைப் பற்றி விளக்க இயலவில்லை (சிறந்த பண்பாட்டு, இயற்கை மரபுச் செல்வங்களுள்ள நாடுகள் சில இவ்வொப்பந்தத்தில் பங்கு பெறவில்லை. ஆகவே இவ்விதழில் அவை இடம் பெறவில்லை). செல்வங்களைத் தெரிந்தெடுப்பதில் இரு அடிப்படைகளைப் பின்பற்றியிருக்கிறோம். 1980 ஆகஸ்ட் இதழில் இடம் பெற்றவை (இரண்டைத் தவிர) இங்கு இடம் பெறவில்லை. இரண்டாவது, மக்களுக்கு நன்கு தெரியாத இடங்களையும் கட்டிடங்களையும்பற்றி இங்கு விளக்கியிருக்கிறோம். அவை புகழ்மிகு பிற செல்வங்களைப் போல் எழிலார்ந்தவையாக இருப்பினும், உலகின் கவனத்தை போதிய அளவு ஈர்க்கவில்லை.

கூரியர்
உலகைக் காட்டும் பலகணி
மாதந்தோறும் 35 மொழிகளில் வெளிவரும் இதழ்

| | | | |
|---|---|---|---|
| தமிழ், | ஹீப்ரு | கிரோட் | கிரீக் |
| ஆங்கிலம் | பெர்சியன் | செர்ப் | சிங்களம் |
| ஃபிரெஞ்சு | டச்சு | ஸ்லோவென் | பின்னிஷ் |
| ஸ்பானிஷ் | போர்ச்சுகீஸ் | ஜப்பானிஸ் | ஸ்வீடிஷ் |
| ரஷ்யன் | துர்க்கீஸ் | மாசிடோனியன் | பாஸ்க் |
| ஜெர்மன் | உருது | | தாய் |
| அராபிக் | கட்டலான் | செர்போ-கிரோட் | வியத்நாமி |
| இத்தாலியன் | மலேசியன் | | பஸ்துு |
| ஹிந்தி | கொரியன் | சீனம் | ஹௌசா |
| | சுவாஹிலி | பல்கேரியன் | |

தலைமை இதழாசிரியர்: எதுவார்து கிளிசான்

தமிழ்ப் பதிப்பு ஆசிரியர்: மணவை முஸ்தபா



படிப்பகம்

www.padippakam.com

# அனைவரின் மரபுரிமை

:.பெடரிக்கோ மேயர்
யுனெஸ்கோ தலைமை-இயக்குநர்

ஒவ்வொரு நாட்டின் பண்பாட்டு மரபுச் செல்வமும் அதன் நுண்ணறிவின் பல்லாயிரம் இயல்புகளை வெளிப்படுத்துகின்றது. அம்மரபுச் செல்வம் அந்நாடு பல நூற்றாண்டுகளாக உருவாக்கிவந்த அனைத்தையும், வருங்காலத்தில் உருவாக்க வல்ல உள்ளாற்றலையும் இணைக்கும் புதிர்போன்ற பிணைப்பையும் வெளிப்படுத்துகின்றது. அம்மரபுச் செல்வத்தைப் பேணுதல் ஒரு நாட்டின் உயிர்த் திறத்திலும் படைப்பாற்றலிலும் அடங்கியுள்ள செயலாகும்.

ஒரு நாட்டின் இயற்கைச் சூழலும் அதன் பண்பாட்டுத் தனித்தன்மையை வளர்க்கின்றது. மனிதனின் கலைப் படைப்புகள் நிலக்காட்சிகளைச் சார்ந்துள்ளன. அக்காட்சிகள் அகத்தூண்டுதலாகவும் எழிலூக்கமாகவும் அமைகின்றன. இயற்கைச் செல்வம் பண்பாட்டுச் செல்வத்தை நிறைவிக்கின்றது. இவை இரண்டும் இணைபிரியாதவை. இயற்கைச் செல்வம் அறிவியலுக்கும், தாவர, விலங்கு இனங்களைக் காப்பதற்கும் மிகவும் முக்கியமானது. இவ்வினங்கள் ஈடு செய்ய முடியாத வளங்களாகும்; இவை நாம் இவ்வுலகில் வாழ்வதற்கு இன்றியமையாதவை.

மரபுச் செல்வமானது கட்டிடச் சின்னங்கள், அவற்றின் தொகுதிகள், இயற்கை நிலக்காட்சிகள், அல்லது இயற்கைப் புகலிடங்களாக இருக்கலாம். இவை இடையறாது ஊறுபடும்நிலையிலுள்ளன. காலப்போக்கில் ஏற்படும் தேய்வு, பொறுப்பற்ற மனிதனின் செயல், அரிப்பு, ஈரப்பதம், மாசுபாடு, மட்டுமீறிய நகரப் பெருக்கம், பெருந்திரளான சுற்றுலாப் பயணிகள் வருகை ஆகியவற்றால் இந்த ஊறுபாடுகள் ஏற்படுகின்றன.

எங்கும் கடுமையாக வளர்ந்து வரும் இத்தகைய இடர்களுக்கிடையே, இம்மரபுச் செல்வங்களைக் காக்க வேண்டுமெனும் புதிய உணர்வும், பேணிப் பாதுகாக்கும் பணியில் முழுவதும் ஒத்துழைக்க வேண்டுமெனும் புதிய ஆவலும் உலக அளவில் இப்போது எழுந்துள்ளன.

பல்வேறு அரசுகள் இதற்காகச் செய்துவரும் சட்ட, நிதி, தொழில் நுட்ப, நிருவாக முயற்சிகளுக்கு யுனெஸ்கோ பெருமளவில் ஊக்கமும் ஆதரவும் நல்கிவருகின்றது.

உலகப் பண்பாட்டு, மற்றும் இயற்கைச் செல்வங்களைப் பாதுகாப்பதற்கான விதிகளை வகுத்துள்ளது யுனெஸ்கோவின் முக்கிய முயற்சிகளுள் ஒன்றாகும். அவற்றைப் பேணுவது அவை இருக்கும் அரசுகளின் தனிப் பொறுப்பன்று, மனுக்குலத்தின் பொதுப் பொறுப்பாகும் எனும் புதுக்கருத்தின் அடிப்படையில் இவ்விதிகள் அமைந்துள்ளன. மனுக்குலமே உலகின் இயற்கை, மற்றும் பண்பாட்டு வரலாற்றின் பெரும் படைப்புகளின் காப்பாளராகும்.

1972இல் யுனெஸ்கோவின் பொது மாநாட்டில் நிறைவேறிய இவ்விதிகள் 21 உறுப்பு நாடுகளடங்கிய குழுவை நிறுவியது. இக்குழு "உலக மரபுச் செல்வ பட்டியலில்" இடம்பெறத்தக்க அரிய பண்பாட்டு, இயற்கைச் செல்வங்களைக் குறிப்பிட்ட அடிப்படைகளுக்கேற்ப ஆயும் பொறுப்புடையது.

இவ்விதிகளை ஏற்றுக்கொண்ட அரசுகள் இத்தகைய அரிய செல்வங்களெனத் தாங்கள் கருதுவனவற்றை குழுவுக்குத் தெரியப்படுத்தும். இவ்வாறு செய்யும்போது அவ்வரசுகள் இச்செல்வங்களைப் பாதுகாக்கும் பொறுப்பேற்கின்றன. ஆனால், இவற்றைக் குழு ஏற்றுக்கொள்ளுமெனில், இவ்விதிகளுக்கேற்ப உலக மரபுச்செல்வ நிதி எனும் அடிப்படையில் அவ்வரசுகள் பன்னாட்டுச் சமுதாயத்திலிருந்து சில வகை உதவிகள் பெற இயலும்.

இவ்விதிகளை ஏற்றுக்கொண்ட அரசுகள் தரும் நிதியும், பிற அரசுகள், நிறுவனங்கள், மற்றும் தனி மனிதர் வழங்கும் நன்கொடையும், தேவையான நாடுகளுக்குப் பொருளும் தொழில்நுட்ப உதவியும் அளிக்க உதவும். தனித்திறமையுள்ள அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கவும் இவை உதவும்.

102 அரசுகள் இவ்விதிகளை ஏற்றுள்ளன என்பதும், 288 மரபுச் செல்வங்கள் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன என்பதும் கடந்த 15 ஆண்டுகளில் இவ்வொப்பந்தம் பெற்றுள்ள வெற்றியைக் காட்டுகின்றன. ஒருநாள் இப்பட்டியல் உலகளாவியதாக இருக்குமெனவும், எல்லா நாடுகளும், மனுக்குலம் முழுவதும் பாதுகாக்க வேண்டிய அரிய இயற்கை, மற்றும் பண்பாட்டுச் செல்வங்கள் இப்பட்டியலில் இடம்பெறுமெனவும் நம்பலாம்.

இக்குழு பண்பாட்டு, இயற்கைச் செல்வங்களின் வெறும் பட்டியலை மட்டும் தயாரிப்பதில்லை. இது தயாரிக்கும் உலகப் பட்டியல் மண்டலச் சார்புள்ள, குறிப்பிட்ட பொருள்பற்றிய முழுப் பட்டியலாகும். இது பண்பாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதையும், இட, கால வகையில் சூழலமைப்புகள் ஒன்றையொன்று முழுமையாக்குவதையும் காட்டும்.

ஒளிப்படம்: ஜே. டெ வெர்காரா © இன்காஃபோ, மாட்ரிட்




அலிசன் ஜாலி



படிப்பகம்

www.padippakam.com



**தாய்ஷான் மலை**
**(சீன மக்கள் குடியரசு)**

தாய் ஷான் மலை அதன் பண்பாட்டு, மற்றும் இயற்கை இயல்புகளுக்காக 1987இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. இம்மலை கிழக்கு சீனாவில் ஏற்பட்ட பண்டைய புவியமைப்பியல் மாற்றத்திற்கு ஒரு முக்கிய எடுத்துக்காட்டு. வேல்ஸ்-கம்பர்லாந்து தொல்லுயிரூழிக் காலப் படிவங்கள் இங்கு மலிந்துள்ளன 462வகை மூலிகைகள் இங்குள்ளன; சில மரங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியவை. சீனாவின் பண்பாட்டு மரபுச் செல்வத்தைக் காட்டும் 22 ஆலயங்கள் 97 பண்டைய அழிபாடுகள், 819 கற்பாளங்கள், 1,018 பாறை கல்பொறிப்புகள் இங்குள்ளன. இங்கு சீன நாகரிகப் பிறப்பிடங்களுள் ஒன்றில் 400,000 ஆண்டுகளுக்கு முந்திய மனித வாழ்க்கைபற்றிய சான்று கிடைத்துள்ளது. புதிய கற்காலத்தில் (5,000-6,000 ஆண்டுகளுக்கு முன்) தாவ'ன் கூ. லாங்ஷான் எனும் பண்பாடுகள் முறையே இம்மலையின் வடக்கிலும் தெற்கிலும் செழித்தோங்கின. இங்கு கி, லு எனும் இரு அரசுகள் இருந்தன. கி.மு. 770-476-ஐச் சேர்ந்த அவற்றின் கலைப்பொருள்கள் கிடைத்துள்ளன. கி அரசு கட்டிய 500 கி.மீ. சுவரை இங்குக் காணலாம்.

# உலகின் காடுகள்

ஒரு முதியவர் செங்குத்தான மலையில் ஏறுகிறார். அடர்ந்த கருவாலி மரக்காடுகள் அவருக்குக் கீழே விதானம் அமைத்து விரிந்து நிற்கின்றன. அவர் செல்லும் பாதை அருகேயுள்ள பாறைப் பிளவுகளில் தேவதாரு மரங்களும், சிப்ரஸ் மரங்களும் கரணை வேர்களுடன் ஒட்டிக்கொண்டு ஊஞ்சலாடுகின்றன. முதியவரைத் தொடர்ந்தும் அவரது சீடர்களும் செல்கிறார்கள். அவர்களின் கால் தசைகள் சோர்ந்து துடிக்கின்றன. அவர்கள் மலை உச்சியிலுள்ள வண்ணந்தீட்டிய கோயிலை அடைகிறார்கள். அங்கே அவர்கள் தங்கள் அங்கிகளுக்குள் சுருண்டு முடங்கி உறங்குகிறார்கள். முதியவர் மீண்டும் விடியும் முன்பே எழுந்துவிடுகிறார். படுபாதாளத்திற்கு புறந்துருத்தி நிற்கும் ஒரு பாறையின் மேல் அவர் நின்றுபார்க்கிறார். அதள பாதாளத்தில் 200 கி.மீ. தூரத்திற்கு கிழக்குக் கடலை நோக்கி இடைவெளியற்ற நீண்ட சமவெளி விரிந்து கிடக்கிறது. சூரியன் எழுகிறான்; ஒரு செம்மணிக் கல்லினால் செய்த, மூடியும் பாதமும் கொண்ட ஒரு கிண்ணத்தினுள்ளே, அசையாக்காற்றின் அடுக்குகளினால் ஒளிக்கதிர் கோட்டமுற்று செந்தழல் வீசுகிறது. "இந்த உலகந்தான் எத்துணை சிறியது!" என்று முதியவர் வியந்துரைக்கிறார். அவர் உரைத்ததைச் சீடர்கள் உடனே எழுதிக் கொள்கிறார்கள்!

இது நிகழ்ந்து 25,00 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அந்த முதியவர்தான் கன்ஃபூசியஸ். அவர் ஏறி நின்று கண்ணால் உலகளந்த மலைதான் தாய்ஷான் மலை. சென்றஆண்டில், 1987 டிசம்பரில், சீன அரசின் பரிந்துரைக்கிணங்க, இந்ததாய்ஷான் மலை உலகப் பாரம்பரிய மனையாக அறிவிக்கப்பட்டது. ஆண்டுதோறும் இதன் உச்சிக்கு ஏறும் பல்லாயிரம் சீனர்களுக்கு இந்த மலை பெருமைக்குரிய சின்னம்; இன்று அது உலகக் கருவூலமுங்கூட.

உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்றுள்ள தொல்பொருள் மனைகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி, அவற்றின் இயற்கை அழகுக்காகவும், அறிவியல் முக்கியத்துவத்திற்காகவும் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் "அண்டத்தின் அன்னை" (சாகர்மாதா) என்றும், மேலைநாட்டவரால் "எவரெஸ்ட் சிகரம்" என்றும் அழைக்கப்படும் இமயம் போன்ற மலைகள், 'கிராண்டு கானியான்' போன்ற மாபெரும் சுருங்கைகள், ஆஸ்திரேலியாவின் 'கிரேட் பாரியர் ரீஃப்' போன்ற பிரம்மாண்டமான கடல் நீரடிப்பாறைகள் கொண்ட கடலோரங்கள் ஆகியவை இதில் அடங்கும். அல்ஜீரிய சகாராவிலுள்ள தசிலி-என்-ஆஜர் போன்றவை எளிதில் அணுக முடியாதவை. சில தொல்பொருள் மனைகளின் முக்கியத்துவம் இன்னும் நன்கு உணரப்படவில்லை. இதற்கு பரிணாமக் கோட்பாடு பற்றிய அறிவு



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: மைக்கில் காபல் © பார்க்ஸ், கனடா

தேவை. எடுத்துக்காட்டாக, மாளாவி ஏரியின் கரைகளில் மீனவர்களின் வலைகளில் படபடக்கும் வண்ண மீன்களின் வானவில் வரிசையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள இது அவசியம்.

பெரும்பாலான உலகப் பாரம்பரிய மனைகள் இயற்கையாகவே பேரழகு வாய்ந்தவை. இதனாலேயே இவற்றை மக்கள் தொன்று தொட்டு வணங்கி வருகிறார்கள். ஆஸ்திரேலியாவிலுள்ள "ஆயர்ஸ் ராக்" என்னும் மலையை அங்குள்ள ஆதிகுடிகள் தெய்வமாக வழிபடுகிறார்கள். பெருவிலுள்ள "மச்சுபிச்சு" மலையை இன்கா நாகரிக மக்கள் புனிதமானதாகப் போற்றினார்கள். கன்ஃபூசியஸ் மட்டுமின்றி, பெரும்பாலான சீனப் பேரரசர்களும், இக்காலச் சீனத் தலைவர்களுங்கூட, தாய்ஷான் மலை உச்சிக்கு ஏறியிருக்கிறார்கள். அங்கு கோயில்களும், பாலங்களும், 6,660 படிகளுடைய படிக்கட்டுகளும் கட்டப்பட்டுள்ளன; நடுகற்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

கீழே விவரிக்கப்பட்டுள்ள உலகம் பாரம்பரிய இயற்கை மனைகள் மூன்று வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. முதல்வகை, பெரும்பாலூட்டி விலங்குக் கூட்டங்கள் வாழ்ந்த இயற்கை வாழிடங்களைக் கொண்டவை. இவை இயற்கை எழில் கொழிக்கும் அற்புத அழகுக் களஞ்சியங்கள். இரண்டாவது வகையில், ஈரச்சாரல் நிலங்கள் அடங்கும்; உயிர்மண்டல ஒதுக்கிடங்கள் மூன்றாம் வகை. இந்த மூன்றாம் வகையில், மக்கள் மற்றும் இயற்கையின் தேவைகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் புதிய மேலாண்மைக் கோட்பாடு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## ■ பெரும் பாலூட்டி வாழிடங்கள்

**செரங்கட்டி தேசியப் பூங்கா.** இது தான்சானியாவில் உள்ளது. வேறெந்த நாட்டையும்விட தான்சானியா பல்வேறு பாதுகாப்புப் பணிகளுக்காகப் பெருமளவு நிலத்தை ஒதுக்கியிருக்கிறது. இந்தப் பூங்கா, 1981இல் உலகப் பாரம்பரிய மனையாக அறிவிக்கப்பட்டது. இதற்கு அருகிலேயே ஓல்டுவாய் சுருங்கையின் படுகைகளில் மனிதஇன மூதாதையர்களின் மண்டையோடுகளும், கையெலும்புகளும் காணப்படுகின்றன. அவர்கள் அறிந்திருந்த பாலூட்டி விலங்குகள் அனைத்தும் இன்று உயிர் வாழவில்லை. எனினும், அவை ஆஃப்ரிக்கச் சமவெளிகளில் உயிர் வாழ்ந்திருக்கவேண்டும்.

செரங்கட்டி தேசியப் பூங்காவின் பரப்பளவு 14,763 ச. கி. மீ. உலகிலேயே விலங்குகள் மிக அதிகமாக உயிர்வாழும் பகுதி இதுவாகும். மாரிப் பருவத்தில், தென் செரங்கட்டியின் சமவெளிகளிலுள்ள குறும்புல்லைக் காட்டெருமைகளும், வரிக்குதிரைகளும் மேயும். நவம்பரில் ஊதா மற்றும் மஞ்சள் நிறக் காட்டுமலர்களுக்கு மத்தியில் அவை துயில் கொள்ளும். பின்னர், புல், காய்ந்து கருகியதும், காட்டெருதுகள் அவற்றின் பசுக்களைச் சுற்றி வரத்தொடங்கும். மே மாதத்தில் கோடை உச்ச நிலையை எட்டும்போது, சமவெளிகள் வெப்பத்தால் தகிக்கும்; மஞ்சள் புழுதி பறக்கும்; காட்டெருதுகள் துணைகளுடன் நிழல்தரும் புகலிடம் தேடும்.

பின்னர், நமக்குப் புரியாத ஒரு சைகையின்பேரில், அனைத்து விலங்குகளுமே வடக்கு நோக்கி ஓடத் தொடங்கும். பல நாட்கள் வரை நாற்காற்பாய்ச்சலில் அவை வடக்கிலுள்ள நீர்க்கால் சதுப்புகளை அடையும். காட்டெருமைகள் நூற்றுக்கணக்கில் ஓடைக்கரைகளில் கூடி நிற்பதையும், ஆறுகளை நீந்திக் கடப்பதையும் காணலாம். ஆறுமாதக் கன்றுகள் தங்கள் பெற்றோரைத் தவறவிட்டுவிடாமல், ஓட்டமும் நடையுமாக உடன் செல்வதைக் காணலாம். அவற்றில் பல பாதி வழியிலேயே மாண்டு போகும்.

செரங்கட்டி போன்ற உலகின் வனப்பகுதிகளில் வாழும் இந்த மாபெரும் பாலூட்டி விலங்குகளின் விசித்திரமான நடத்தை குறித்து ஆராய்ந்து பல உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள், மிகவும் வியப்புக்குரியது யானைகள் எழுப்பும் விசித்திர ஒலியாகும். மற்றப் பாலூட்டிகளைப் போலவே, யானை

### காட்டெருமை தேசியப் பூங்கா (கனடா)

வட கனடாவில ஆல்பெர்ட்டாவிற்கும் வடமேற்குப் பகுதிக்குமிடையேயுள்ள எல்லையில் காட்டெருமைப் பூங்கா பரவியுள்ளது. இது உலகிலுள்ள மிகப் பெரிய தேசியப் பூங்காக்களுள் ஒன்று. அதன் வட சமவெளிகளில் ஓநாய், காட்டுப்பூனை, அமெரிக்க முயல், கருங்கரடி நீர்எலி, நீர்நாய் போன்ற விலங்குகள் உள்ளன. எல்லாவற்றிற்கும்மேலாக அதுகாட்டெருமைகளுக்குப் புகழ்பெற்றது. அங்கு 6000 காட்டெருமைகள், வாழ்கின்றன. வடஅமெரிக்கக்காட்டெருமைகளைப் பாதுகாப்பதற்காக 1922இல் இப்பூங்கா உருவானது. அங்கு காட்டெருமைகள் புகுத்தப்பட்டன. 1983இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெற்ற இது உலகின் மிகப்பெரிய உள்நாட்டு வடிநிலங்களுள் ஒன்றாகும். அங்கு அத்தபாஸகா பீஸ் ஆறுகள் அத்தபாஸ்கா ஏரியினுள் பாய்கின்றன. இடம்பெயரும் ஆயிரக்கணக்கான பறவைகள் அங்கு கூடுகின்றன. அங்கு குளிர் காலம் நீண்டது. கடுமையானது; கோடைகாலம் குறுகியது. வெப்பமானது. இவ்வெப்பத்தினால் காட்டுத்தீ பரவுகிறது. அதனால் பல வகையான செடியினங்கள் அங்கு தோன்றியுள்ளன.

### மாளாவி ஏரி தேசியப் பூங்கா

மிகுந்த ஆழமும் நீர்த்திரளுமுள்ள ஆஃப்ரிக்க ஏரிகளுள் மாளாவி ஏரி மிக முக்கியமானதாகும். அங்கு 500 வகை மீன்கள் உண்டு. அவற்றுள் 90% அப்பகுதியில் வாழும் இனங்கள். வண்ண முபுனா வகை பாறைகளில் வாழும் மீனினம். இதுவும் பிற பல இனங்களும் ஒரு சில நூறு மீன்கள்தாம் உண்டு முபுனா உட்பட இந்த ஏரியின் பல மீன்கள் இடம் பெயராதவை அவை சிலதீவுகளின் கரையோரங்களில் வாழ்கின்றன. மாளாவி ஏரி தேசியப் பூங்கா 94 கி மீ.$^2$ பரப்புள்ளது. அதில் மக்ளியர் முனைத் தீபகற்பம், 3 சிறு தலைநிலப்பகுதிகள், பல்வேறு அளவுள்ள 12 தீவுகள் உள்ளன. பூங்கா 7 கி.மீ $^2$ நீர்ப் பரப்பை மட்டும் பாதுகாத்த போதிலும், எல்லா நிலப்பகுதியிலுமுள்ள 100 மீ. ஏரி நீர் பாதுகாக்கப்படுவதால், மீன்களின் வாழுமிடங்கள் பாதுகாக்கப்படுகின்றன. 1980 இல் நிறுவப்பட்ட இப்பூங்காவில் பல இரும்புக்காலப் பகுதிகள் உள்ளன. இதன் இயற்கை வளத்திற்காக 1984இல் இது உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது இப்பூங்கா மாளாவி ஏரியின் 0.04% அளவு மட்டுமே இருப்பினும் முழு ஏரியின் வளப் பாதுகாப்பிற்கும் வழிவகுத்துள்ளது. மாளாவி ஏரி தேசியப் பூங்கா 1984இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

களும் சிக்கலான சமூகக் கட்டமைப்பை உடையவை. ஒரு தாய் யானையின் தலைமையில் பெண் யானைகள் ஆண் யானைகளிடமிருந்து விலகி, சுற்றித் திரியும். மிக அரிதாக இந்த இரு கூட்டங்களும் தொலையுணர்வு போன்ற உந்துதல் மூலம் ஒன்றையொன்று சந்திக்கின்றன. அப்போது, மனிதர் காதால் கேட்க முடியாத ஒரு தாழ்ந்த குரலில் இந்த யானைகள் குரல் எழுப்பி ஒன்றையொன்று அழைத்துக் கொள்கின்றன என்று கார்னல் பல்கலைக் கழகத்தைச் (அமெரிக்கா) சேர்ந்த டாக்டர் கேத்தரின் பெய்ன் கூறுகிறார். இந்த ஒலி பல கி.மீ. தொலைவுவரைக் கேட்குமாம்!


விலங்குக் கூட்டங்கள் பெருமளவில் காணப்படுவது ஆஃப்ரிக்கக் கண்டத்தில் மட்டுமன்று. வடஅமெரிக்கா சென்ற முதல் ஐரோப்பியர்கள், அங்கு சமவெளிகளில் 5 – 6 கோடி காட்டெருமைகள் அலைந்து திரிவதைக் கண்டனர். இவற்றின் ஒரு பகுதி இன்று கானடாவிலுள்ள **"வுட் காட்டெருமை தேசியப் பூங்கா"**வில் பாதுகாக்கப்படுகின்றன. 44,800 கி.மீ.$^2$ பரப்புடைய இந்தப் பூங்கா, உலகின் மிகப்பெரிய தேசியப் பூங்காவாகும். இங்கு 5,000-6,000 காட்டெருமைகள் உள்ளன. இவை இங்குள்ள சதுப்பு நிலங்களிலுள்ள உப்பு கரிக்கும் புல்லையும், காட்டு மலர்களையும் மேய்கின்றன. பீஸ் மற்றும் அத்தபாஸ்கா ஆறுகளின் மிகப்பெரிய கழிமுகத் தீவின் சேறுகளில் புரள்கின்றன. இங்கு இவற்றோடு பல்லாயிரம் நீர்க்கோழிகளும், நாரைகளும், கரடிகளும், நீர்நாய்களும், நீர் எலிகளும், ஓநாய்களும் சகவாழ்வு நடத்துகின்றன. இந்தப் பூங்காவில் ஆதியில் இருந்தவை காட்டில் வாழ்ந்த எருதுகள்தாம். இன்று வாழும் காட்டெருமைகள் சமவெளிகளிலிருந்து வந்தவை.

இன்னும் பல பெரும் பூங்காக்களுக்கும், பாலூட்டி விலங்குகளுக்கும் மனிதனின் தீவிர கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகின்றன. இவற்றுள் ஒன்று சூடான் எல்லையில், வடக்கு ஸைரிலுள்ள **"காராம்பா தேசியப் பூங்கா"** என்னும் காண்டாமிருகப் புகலிடமாகும். இதன் மொத்தப் பரப்பளவு 4,480 கி.மீ.$^2$ இதன் தென் பகுதியில் அடர்ந்த காடுகளும், வட பகுதியில் மரம் அருகிய வெப்ப மண்டலச் சமதளப்புல்வெளியும் உள்ளன. இங்குள்ள வெண்காண்டாமிருகங்கள் இப்பூங்காவின் தனிச்சிறப்பு. இந்த வெண்காண்டாமிருகங்களைப் பாதுகாப்பதற்காகவே 1938இல் இந்தப் புகலிடம் அமைக்கப்பட்டது. இங்கு 1960இல் 1,000 வெண்காண்டாமிருகங்கள் இருந்தன. 1980இல் இது உலகப் பாரம்பரிய மனையாக அறிவிக்கப்பட்டபோது, 20 ஆண்டுக் காலப் போரில் அழிந்தவை போக 12 வெண்காண்டாமிருகங்களே எஞ்சியிருந்தன.

இந்தக் காண்டாமிருகங்களின் கொம்புகளுக்கு நிறைய விலை கிடைக்கிறது. அதனால் திருட்டு வேட்டைக்காரர்கள் இவற்றைக் கள்ளத்தனமாக வேட்டையாடிவிடுகிறார்கள். மேலும், இவற்றைப் பிடிப்பதற்காக இவை மேயும் புல்வெளிகளுக்குத் தீயிட்டுப் புல்லை அழித்துவிடுகிறார்கள். இக்காரணங்களால் இவற்றின் எண்ணிக்கை பெருகாமலே இருந்து வந்தது. இன்று இந்தக் கள்ள வேட்டை தடுக்கப்பட்டுவிட்டது. ஒவ்வொரு காண்டாமிருகத்திற்கும் ஒரு வானொலிச் சைகைக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் அதன் நடமாட்டம் கண்காணிக்கப்படுகிறது. இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளினால் இப்போது இவற்றின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

ஆஃப்ரிக்கா கண்டத்தில் மட்டுமே போரினால் மக்கள் மட்டுமின்றி வன விலங்குகளும் அழிகின்றன. ஐரோப்பியக் காட்டெருமையின் கடைசிச் சுவடு 1919இல் கொல்லப்பட்டது. அது பியாலோவீசாக் காட்டில் வாழ்ந்துவந்தது. மத்திய காலத்தில் ஏற்பட்ட இரத்தக்களரிப் போர்களினால் இந்தக் காட்டின் பெரும்பகுதி அழிந்து எஞ்சியது மிகச் சிறிய பகுதியே. 15ஆம் நூற்றாண்டில் இது அரச குடும்பத்தினரின் வேட்டைப் பகுதியாக ஒதுக்கப்பட்டிருந்தது. இன்று இதன் மையப்பகுதி 47 கி.மீ.$^2$ பரப்புடையது. இன்று மத்திய ஐரோப்பாவிலுள்ள உண்மையான கன்னிக் கானகம் இது ஒன்றுதான்.

காட்டெருதுகள் என்பவை இன்றைய மாடுகளின் மூதாதை. இவை இன்று அற்றுப்போய்விட்டன. ஒரு காலத்தில் இக்காட்டெருதுகளுக்குக் காடுகள் புகலிடம் அளித்துவந்தன. அத்துடன் 18ஆம் நூற்றாண்டு வரை அங்கு தென் அமெரிக்கப் பெருமீன் வகைகள் வாழ்ந்து வந்தன. முதல் உலகப் போரின் தொடக்கத்தில் ஒரு காட்டெருமை மந்தையில் சில நூறு விலங்குகள் இருந்தன. படைவீரர்களும், திருட்டு வேட்டைக்காரர்களும் அவற்றை அடியோடு அழித்துவிட்டார்கள். பின்னர், 1923இல், இந்தக் காட்டெருது மந்தையை மீண்டும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் போலந்துப் பேராசிரியர் ஜான் ஸ்டோலோமன் ஆலோசனை கூறினார். பிரிட்டிஷ் ஜெர்மன், போலந்து, சுவீடன் விஞ்ஞானிகள் ஐரோப்பிய விலங்குக் காட்சி சாலைகளில் 54 காட்டெருமைகளைக் கண்டுபிடித்தார்கள். இவை பெரும்பாலும் கலப்பினப் பிறவிகளாகவே இருந்தன. இப்போது கவனமான தூய கலப்பு காரணமாகவும், மேய்ச்சல் மேலாண்மை காரணமாகவும் இன்று இந்த மந்தையில் விலங்குகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இன்று, உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள **பியாலோவீசாத் தேசியப் பூங்காவில்** சுமார் 500 காட்டெருமைகள் வாழ்கின்றன. இவை தவிர ஐரோப்பாவின் வேறு பகுதிகளில், காட்டெருமை இனப் பெருக்க மையங்கள் 200 உள்ளன.



ஒளிப்படம்: எம். ஹாவத், © ஜேவா-ஓப், பாரிஸ்



படிப்பகம்

www.padippakam.com

**ஈரச்சாரல் மனைகள் :**

நிலப்பற்றாக்குறை நிலவுவதைப் போலவே நீர்ப்பற்றாக்குறையும் நிலவுகிறது. உலகின் ஈரச்சாரல் நிலப்பகுதிகளில் பல்வேறு பயன்பாடுகளுக்கிடையே பெரும் போராட்டமே நடந்து வருகிறது. இந்தப் பிரிவில் விவரிக்கப்படும் ஐந்து உலகப் பாரம்பரிய மனைகள் இதனை விளக்கும். இவற்றில் இரண்டு ஏரிகள்; ஒன்று காட்டு ஆறு; இரண்டு தாழ்வான சதுப்பு நிலங்கள்.

மாளாவி ஏரி, இது 760 மீட்டருக்கு மேல் ஆழமுடையது. சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்புதான் பெரும் பிளவுப் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட ஒரு வெடிப்பு காரணமாக இது தோன்றியது. மலைச்சரிவுக்குக் கீழேயுள்ள பள்ளத்தாக்கு வளமானது; செழிப்பானது. ஏரியின் விளிம்பைச் சுற்றி சிறுசிறு பண்ணைகளும் கிராமங்களும் உள்ளன. இந்த ஏரியில் உலகில் வேறெங்கும் இல்லாத மீன்வகைகள் வாழ்கின்றன. இந்த மீன்களை மீனவர்கள் தங்களுடைய நாட்டுப்படகுகளில் சென்று வலைவீசிப் பிடிக்கிறார்கள்.

இந்த ஏரி தோன்றிய பிறகு இரண்டு முறை ஏற்பட்ட பிரளயங்களின் போது 12 ஆஃப்ரிக்க மீன் இனங்கள் இந்த ஏரிக்குள் வந்தன. இன்று இந்த இனங்களின் எண்ணிக்கை 500 முதல் 1,000வரையில்இருக்கக்கூடும். இங்குள்ள மீன் இனங்களில் பெரும்பாலானவை குடும்ப வாழ்வில் மிகுந்து ஈடுபாடு கொண்டவை. அவற்றின் இனம் இந்த அளவுக்குப் பெருகியிருப்பதற்கு இதுவே காரணம். மாளாவி ஏரிக்கரையைப் பாறைப்பாங்கான பகுதியாகவும், மணற்பாங்கான விரிகுடாப் பகுதியாகவும் இரண்டாகப் பிரிக்கலாம். பாறைப் பகுதியில் வாழும் மீன்கள் மணற்பகுதியைக் கடந்து அடுத்த பாறைகளுக்குச் செல்வதில்லை. மணற்பகுதியில் வாழ விரும்பும் மீன்கள் வெகுதூரம் செல்வதில்லை. இவ்வாறாக, இந்த ஏரி மீன்களின் இருவகை வாழிடங்களைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் வாழும் மீன்கள் வெவ்வேறு வகையானவை.

ஒரே ஏரி எவ்வாறு இரு தனித்தனி வாழிடங்களாகப் பிரிந்திருக்கிறது என்பதற்கு மாளாவி ஏரி சான்று, அதேசமயம், துனீசியாவிலுள்ள இச்கியூல் ஏரி இதற்கு நேர்மாறாக விளங்குகிறது. பல்வேறு உயிர் வாழிடங்களை இணைக்கும் ஒரு பன்னாட்டு நீர் நிலையாக இந்த ஏரி பயன்படுகிறது. குளிர்காலத்தில் வலசைவரும் நீர்க்கோழிகளுக்கு இது புகலிடம் அளிக்கிறது. ஐரோப்பாவிலுள்ள காட்டு வாத்து இனங்களும், குள்ள வாத்துகளும், அகல் அலகு வாத்துகளும் குளிர்காலத்தில் இந்த ஏரிக்குச் சென்றுவிடுகின்றன. ஒரு முறை எடுத்த கணக்கின்படி, 1,88,000 வாத்துகள் இங்கு வலசை வந்துள்ளன. கோடையில் வலசை வந்த பறவைகள் இங்கிருந்து சென்ற பின்னர், அரிதான வெண்தலை வாத்துகள் 600 மட்டுமே இங்கே தங்கி இனப்பெருக்கம் செய்தன. ஐரோப்பாவையும் வடஆஃப்ரிக்காவையும் சேர்ந்த ஏதேனுமொரு பறவையை ஏதேனுமொரு பருவத்தில் இங்கு காணலாம்.

இச்கியூல் ஏரியின் நீர்கூட தனிமைப்பட்டதாக இல்லை. இது மத்தியதரைக் கடலுக்கு அருகில் இருக்கிறது. மழைக்காலத்தில் ஆறுகளிலிருந்து வரும் நன்னீர் இந்த ஏரியை நிரப்புகிறது. எனினும், அருகிலுள்ள கடலின் உப்புநீர் கசிந்து இதில் வந்து கலந்துவிடுகிறது. இங்குள்ள நீர்வாழ் உயிரினங்கள் இந்த மாறுதல்களுக்



ஒளிப்படம் ஜே. பி. ஃபெரேரோ © ஜகானா, பாரிஸ்

**சியான் கான் (மெக்ஸிக்கோ)**

சியான் கான் உயிர்மண்டலப் புகலிடம் யூக்கட்டான் தீபகற்பத்தின் பண்டைய சுண்ணாமபுக்கல் சமவெளியில் கான்கன் சுற்றுலாப் பகுதிக்கு 150 கி.மீ தெற்கில் உள்ளது. 5 28,000 ஹெக்டேர் பரப்புள்ள இங்கு வெப்பமண்டல இலையுதிரா இலையுதிர் ஈரக் காடுகளும், சதுப்பு நிலங்களும், புதர்களும் உலகில் இரண்டாவது நீளமான பவளத்திட்டுகள் கடற்பகுதியும் உள்ளன. 1,200 செடி வகைகளும், 5 வகை பூனைகளும், கரிபிய கடற்பசுவும் ஜாஃப்ரே சிலந்திக் குரங்கும் போன்ற பல வகை வனவிலங்குகள் உள்ளன. சியான் கான் என்பதற்கு ''வானத்தின் பிறப்பு' என்பது பொருள். கி பி 5ஆம் நூற்றாண்டில் அங்கு வாழ்ந்த மாயர்கள் அப்பெயரை வழங்கினர் அங்கு 20 மாயர் அகழ்வாய்வுப் பகுதிகள் உள்ளன. இன்று ஏறக்குறைய 800 பேர் அங்கு வாழ்கின்றனர் அவர்களுள் சிலர் மாயா வழிவந்தோர் பலர் இறால் பிடித்து வாழ்கின்றனர். மீனவரின் எண்ணிக்கையையும் அவர்கள் பிடிக்கும் மீன்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்துவதற்காக கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. வேளாண்மைக்குத் தேவையான நிலத்தைக் குறைக்கப் புதியபயிர் முறைகளைப் பயன்படுத்தும் மாதிரிப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது 1987இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இப்பகுதி ஓர் உயிர்மண்டலப் புகலிடத்தில் பாதுகாப்பு, ஆராய்ச்சி, வளர்ச்சி ஆகியவை இணைந்திருப்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. வலப்புறம்: பெலிக்கான்களும் கடற் பறவைகளும்.

**சுந்தரவன தேசியப் பூங்கா (இந்தியா)**

இந்தியாவுக்கும் வங்காள தேசத்துக்குமிடையே 10, 000 கி.மீ. பரப்புள்ள நில மும் நீரும் அடங்கிய சுந்தர வனம்உலகின் மிகப்பெரியவடிநிலத் தின் ஒரு பகுதியாகும். இது கங்கை பிரம்மபுத்ரா, மேக்னா ஆகிய மு பெரும் ஆறுகள் கொண்டு சேர்த் வண்டல் மண்ணாலானது இந்தி யாவில் மேற்கு வங்காளத்திலுள்ள மையப்பகுதி 1984இல் சுந்தம்வன தேசியப் பூங்காவாக நிறுவப்பட் டது 1987இல் இது உலக மரபுச் செல்வப் பட்டியலில்இடம்பெற்றது புயலும் கடல்கொந்தளிப்பும் அடிக் கடி நிகழும் இடத்திலுள்ளதால் இது உள் நிலப்பகுதிகளை இந் இயற்கை அழிவுகளிலிருந்து தடு கினறது சமவெளியில் பரவிவிடு கொந்தளிக்கும் அலைகள் சில வேளை 75மீ. உயரம் எழும் தாழ்ந்த புதர்நிலம், உப்புநீர்க் கா கள், கடற்கரைக் காடுகள், மண் மேட்டுத் தாவரங்கள் ஆகியவற்றி பலவகை தாவரங்கள் உள்ளன முக்கியமாக இங்கு வங்காளப் பு கள் (இடப்புறம்) மிகுதியாக வா கின்றன. 1963இல் 264 பு கள் இருந்ததாக கணிக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் ஏஞ்சல் அராவ்ஜோ இன்காஸ் போ, மாட்ரிட

கேற்பத் தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொள்கின்றன. இப்போது ஆறுகளின் குறுக்கே அணைகட்டி பாசனத்திற்காக நீரைத் திருப்பி விடுவதால் இந்த ஏரியின் சமநிலை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அணைமதகுகளிலிருந்து ஒழுங்காக நீர்பாயச் செய்வதன் மூலம் இந்த அபாயத்தைத் தவிர்க்கலாம் என ஆராய்ச்சிகள் புலப்படுத்தியுள்ளன.

எனினும், சில சமயங்களில், ஈரச் சாரல் மனைகளுக்கு நேரடியாகவே ஆபத்து ஏற்படுகிறது. இதற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள "மேற்கு தாஸ்மேனியா கானகத் தேசியப் பூங்கா" சிறந்த எடுத்துக்காட்டு. இது 7,693 கி.மீ². பரப்புடையது. இங்கு உலகிலேயே மிகப்பெரிய மிதமழைக் காடுகள் உள்ளன. இங்கு படிகக்கல் சிகரங்களும் சுண்ணாம்புக்கல் அடிநிலக் குகைகளும், ஆழமான சுருங்கைகள் வழியே நுரை பொங்கப் பாய்ந்தோடும் ஆறுகளும் உள்ளன. இங்கு 2,000 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த 'ஹியூவான்' என்ற தேவதாரு மரங்களும் ஏராளமாக இருக்கின்றன. இங்குள்ள கோர்டோன் ஆற்றிலும், அதன் துணையாறாகிய ஃபிராங்க்லின் ஆற்றிலும் மின்விசை உற்பத்திக்காக அணைகட்டத் திட்டமிடப்பட்டது. தொன்மையான தேவதாரு மரங்களை வெட்டு மரத்திற்கு வெட்டிவிட மர வாணிகர்கள் விரும்பினார்கள். அதேசமயம், தாவரவியலறிஞர்கள், ஆண்டுதோறும் குறிப்பிட்ட பருவத்தில் இலை உதிர்க்கக்கூடிய புங்கமரக் காடுகளைப் பாதுகாக்க விரும்பினார்கள். இந்தப் புங்கமரக் காடுகள், ஆஸ்திரேலியாவும், தாஸ்மேனியாவும் அண்ட்டார்க்டிக்காவும் தென்அமெரிக்காவுடனும், ஆஃப்ரிக்காவுடனும் இணைந்திருந்தபோது மலிந்திருந்த புங்கமரக் காடுகளில் எஞ்சியிருப்பவையாகும். கோண்டுவானாலாந்தின் இந்தப் பெரிய தென்கண்டம் தான் தென் புங்கமரத்தின் தாயகம். இவை, கோர்டோன், ஃபிராங்க்ளின் ஆறுகளின் கீழ்நிலைப் பகுதிகளிலுள்ள மிகச் சில உயர்மட்ட மழை மண்டலங்களில் மட்டுமே இன்று உயிர் வாழ்கின்றன.

டிஜீட்ஜி தேசியப் பறவைப் புகலிடம். இது செனகால் ஆற்றின் கழிமுகப் பகுதியில் உள்ளது. இயற்கை அற்புதங்களின் பயன்பாடு குறித்து எந்த அளவுக்குக் கடுமையான முடிவுகள் எடுக்கவேண்டியுள்ளது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. செனகால் ஒரு சாகல் மண்டல நாடு. அதன் உட்பகுதி வறண்டது. குடிபெயரும் நாடோடிகளுக்கும், குடியமர்ந்த குடியானவர்களுக்குமிடையே நிலத்தைப் பகிர்ந்தளிப்பது அங்கு பெருஞ் சிக்கலாக உள்ளது. அத்துடன், நீர்ப்பாசனம் மற்றும் மின்விசை உற்பத்திக்கான நீர்த்தேவைகளையும் நிறைவு செய்யவேண்டியிருக்கிறது. இதற்கென செனகால் ஆற்றில் பெரிய பெரிய அணைகள் கட்டப்படுகின்றன. இதனால், டிஜீட்ஜி கழிமுகப் பூங்காவின் உயிரினச் சமநிலை சீர்குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பூங்காவிற்கு ஆண்டுதோறும் 30,00,000 பார்வையாளர்கள் வருகிறார்கள். வடஆசிய ஐரோப்பியப் பகுதியைச் சேர்ந்த பறவைகள்,2,000 கி. மீ. தூரம் பறந்து, சகாராவைக் கடந்து இங்கு வருகின்றன. 'பெலிக்கன்' என்னும் நீர்க்கோழிகளும், நாரைகளும், வாத்துகளும் இங்கே வாழ்கின்றன. பாலைவனப் பாலூட்டி விலங்குகளும் இங்கே வருகின்றன. காட்டு விலங்குகள் அற்றுப் போகாமல் உயிர்வாழக்கூடிய ஒரே சாகல் மண்டல இயற்கை வாழிடம் இதுவே. எனவே, அற்றுப் போய்க்கொண்டிருந்த "டோர்காஸ்" என்ற அராபிய மான்வகை இங்கு மீண்டும் வாழ்வளிக்கப்பட்டிருக்கிறது.

டிஜீட்ஜி கழிமுகப் பகுதி, பாலைப் பகுதி மக்களின் நீர்த்தேவைகளுக்கு உட்பட்டதாக இருக்கிறது. இந்தியாவில் கங்கையின் முகத்துவாரத்திலுள்ள "சுந்தர்வனம்" என்ற வெப்ப மண்டலச் சதுப்புக் காடுகள், மலைவாழ் மக்களின் விறகுத் தேவைகளுக்கும், சமவெளிகளில் வாழும் மக்களின் வெட்டுமரத் தேவைகளுக்கும் உட்பட்டதாக உள்ளது. இந்தியாவில் இப்போது கட்டுமான மரத்தின விலை மிக அதிகம். எஃகினைப் பயன்படுத்துவது மலிவாக உள்ளது. இமய மலைப் பகுதிகளில், கிராமவாசிகளின் தேவைக்காக இயற்கைக் காடுகளைப் பயன்படுத்துவதும் பணப்பயிராக தேவதாரு மரம் வளர்ப்பதும், சட்டப் போராட்டங்களுக்கும், கலவரங்களுக்கும், சமூக இயக்கங்களுக்கும் வழி வகுத்துள்ளன. சிப்கோ என்ற பெண்மணி, மரங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அவற்றை வெட்டி வீழ்த்துவதைத் தடுத்து நிறுத்தியிருக்கிறாள். சுந்தர்வனக் கழிமுகச் சதுப்புக்காடுகளின் பரப்பு 10,000 கி.மீ² இது இந்தியப் பகுதியையும், வங்காள தேசப் பகுதியை அளாவி நிற்கிறது. இந்தியப் பகுதி 2,600 கி.மீ² பரப்புடையது. இது ஓர் உலகப் பாரம்பரிய மனையாகும். இது "சுந்தர்வனத் தேசியப் பூங்கா" என்ற இயற்கை ஒதுக்கிடமாக அமைந்துள்ளது. இதுதான் இந்தியாவின் மிகப்பெரிய புலிகள் புகலிடமாகும். இது 1973இல் புலிகள் புகலிடமாக அமைக்கப்பட்டபோது அங்கு 153 புலிகள் வாழ்ந்தன 1994இல் இந்த எண்ணிக்கை



படிப்பகம்

www.padippakam.com

264-க்கு உயர்ந்தது. இந்த எண்ணிக்கை மேலும் பெருகி வருகிறது.

இந்த வெப்பமண்டலச் சதுப்பு வாழிடம், நிலம், கடல் இரு பகுதிகளையும் கொண்டது. சுந்தரவனத்தில் 'டால்ஃபின்' என்ற கடல் பன்றியில் ஐந்து இனங்களும், அருகிய உப்புநீர் முதலைகளும் வாழ்கின்றன. மற்ற இடங்களில் மறிமான்களையும், காட்டெருதுகளையும் வேட்டையாடும் புலிகள், இங்கு மீனையும், பல்லிகளையும். கடலாமைகளையும் வேட்டையாடி உண்பதைக் காணலாம். இந்தியாவின் புலிப்பாதுகாப்புத் திட்டம், இந்தியாவின் இயற்கை வாழிடத்தின் உயிர்நாடி புலிகள்தாம் என்பதை வலியுறுத்துகின்றன. சதுப்புக் காடுகளை விறகிற்காக மக்கள் வெட்டுகிறார்கள். அல்லது வேளாண்மைக்காகத் தீவுகளிலிருந்து நீர் வடிக்கப்படுகின்றன அல்லது ஆற்றின் வெள்ளப் பகுதிகள் எல்லாம் கட்டுப்படுத்தப்படுகின்றன என்றால், முதலில் அழிந்துபோவது புலிகளாகத்தான் இருக்கும்.

வெள்ளத்தை வடிப்பதன் காரணமாக உலகின் ஈரச்சாரல் நிலங்கள் பெரும் அபாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. அவற்றின் வளவசதிகள், வேளாண்மைக்கும் மின்விசை உற்பத்திக்கும் திருப்பி விடப்படலாம். உரம்போன்ற வேதியியல் பொருள்களின் கலப்பினால் அவற்றின் சுற்றுப்புறம் மாசுபடக்கூடும். இப்போது, இயற்கை மனை எதுவும் மனிதரின் ஆதிக்கத்திலிருந்து தனிமைப்படுத்தப்படவில்லை. போட்டாப் போட்டி வலுப்படுவதற்குமுன்பு பல்வேறு தேவைகளுக்கு ஏற்ற வகையில் மேலாண்மை முறைகளை வகுக்க முன்முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

## உயிர்மண்டல ஒதுக்கிடங்கள்: இயற்கையுடன் இணக்கம்

யுனெஸ்கோவின் ''மனிதன் மற்றும் உயிர்மண்டலத் திட்டத்தில்'' உயிரியல் ஒதுக்கிடங்களுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.மக்களின்தேவைகளையும் இயற்கை வாழிடங்களையும் இணக்கப்படுத்துவதே இதன் நோக்கம். உலகப் பாரம்பரிய இயற்கை மனைகளைப் பாதுகாப்பதற்கு இன்று இந்தப் பயன்பாடு உள்ளூர் மரபுகளைப் பொறுத்து அமையும். மெக்சிக்கோவின் யுக்கட்டான் தீபகற்பத்தில் **''சியான் கான் உயிர்மண்டல ஒதுக்கிடம்''** உள்ளது. இதன் பரப்பளவு 5,000 ச.கி.மீ. இதில் வெப்பமண்டல ஈரமரக்காடுகளும், உவர் நிலங்களும், சதுப்புக்காடுகளும், பவளத்திட்டுகளும் அடங்கியுள்ளன. இந்த ஒதுக்கிடத்தினுள் மாயா சிவப்பிந்தியர் வழிவந்த 800 பேர் வாழ்கிறார்கள். இவர்கள் இந்த மண்டலத்தை ''குவிண்டானா ரூ'' என அழைத்தனர். அவர்கள் கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் எழுப்பிய கோயில்களின் சிதைவுகளும் இங்கு உள்ளன. இன்றைய மாயா மக்கள் பெரும்பாலும் மீன்பிடித்து வாழ்கின்றனர். எனினும், அவர்கள் பண்டையச் சாகுபடி முறைகளைப் பயன்படுத்தி உழுதொழிலும் செய்கின்றனர். மருந்துக்காகவும், உணவுக்காகவும், வீடு கட்டவும் அவர்கள் செடி கொடிகளைச்சேகரிக்கிறார்கள். இந்த ஒதுக்கிடத்தை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் இங்கு உள்ளது. இந்த நிலையம் உள்ளூர் மக்களிடமிருந்தும் தகவல்களைச் சேகரித்துவருகிறது.

கோளத்தின் ஒவ்வொரு உயிர்மண்டலத்தின் மாதிரி வடிவங்களைப்

### செயின்ட் கில்டா (பிரிட்டன்)

இச்சிறிய தீவுக் கூட்டம் ஸ்காட்லாந்துக்கு 160 கி.மீ தொலைவில் அட்லாண்டிக் பெருங்கடலில் தனித்திருக்கின்றது. இது பண்டைய எரிமலையிலிருந்து தோன்றியது. இவை வெறும் பாறைகளாலான தீவுகள். சில பாறைகள் செங்குத்தாக கடலலைகளிலிருந்து 430 மீ உயர்ந்துள்ளன. ஐரோப்பாவிலே மிக உயர்ந்தஅரிய பாறைகள் இவை. இங்குள்ள சிறிய மர எலி, பாடும் பறவை தலைநிலப் பகுதியிலுள்ளவற்றிலிருந்து வேறுபட்டுள்ளன. இவற்றை வேறு எங்கும் காண இயலாது. கடற்பறவைகள் வட அட்லாண்டிக் பகுதியிலே இங்குதான் மிகுதி. எந்நேரமும் அங்கு 10 லட்சம் கடற்பறவைகளைக் காணலாம். தனித்திருந்தபோதிலும் வாழ்க்கை கடினமாக இருப்பினும் இங்கு 2,000 ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் முட்டைக்காகவும் இறைச்சிக்காகவும் கடற்பறவைகளை வேட்டையாடுகின்றனர் காடுகளில் வாழும் பண்டைய வகை ஆடுகளின் உரோமத்தை நெய்கின்றனர் 1930இல் அவர்கள் தலைநிலத்திற்குச் சென்றுவிட்டனர். 1986இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்ற செயின்ட் கில்டா இன்று பாதுகாக்கப்பெற்ற தேசிய இயற்கைப் புகலிடமாக இருக்கின்றது.


பெரும் ஸ்மோக்கி மலைத் தேசியப் பூங்கா, அமெரிக்கா



தேவிப்படம்: தாவ்டு © எ.எஸ். பாரிஸ்



படிப்பகம்



ஒளிப்படம் © ஸ்காட்லாந்து தேசிய நிறுவனம், எடின்பர்க்

பாதுகாத்து வைப்பதற்காக இந்த உயிர்மண்டல ஒதுக்கிடங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றுள் சில உள்ளூர் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பினும், உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கின்ற அளவுக்குச் சிறப்புடையனவாக இருப்பதில்லை. அமெரிக்காவில் மட்டும் 43 உயிர்மண்டல ஒதுக்கிடங்கள் உள்ளன. எனினும், இவற்றில் ஐந்து மட்டுமே உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை, எல்லோஸ்டோன், எவர்கிளேட்ஸ், ரெட்வுட், ஒலிம்பிக், கிரேட் ஸ்மோக்கி மவுண்டன் தேசியப் பூங்காக்கள் என்பனவாகும். வடகரோலினாவிலுள்ள கிரேட் ஸ்மோக்கி மலைத்தொடர், தொலைவிலிருந்து பார்க்கும்போது நீலநிறப்புகை மண்டலம் படர்ந்திருப்பதுபோல் காட்சி தரும். மத்திய சீனாவில் காணப்படும் தாவரங்களுடன் நெருங்கிய உறவுடைய பல தாவரங்கள் இங்கு காணப்படுகின்றன. நிலம் நீர் வாழும் பல பிராணிகளும் இங்கு வாழ்கின்றன. சலாமண்டர் என்ற பல்லி விலங்கினத்தில் 22 வகைகள் இங்கு உண்டு. இவற்றில் மிகப்பெரியது 75 செ. மீ. நீளமுடையது.

கருங்சூலி மரங்களும், மலைப் புன்னைகளும், வெள்ளைவால் மான்களும். கருங்கரடிகளும் நிறைந்த இந்தக் காடுகளில் மக்கள் சந்தடி இல்லாமலில்லை. இங்கு வாசிப்பவர்களை இங்கிருந்து விரட்டியடிப்பதோ, சுற்றுலாப் பயணிகளைக் கட்டுப்படுத்துவதோ இயலாத காரியம். இந்த மண்டலத்திற்குப் பொருளாதார ஆதாரமாக விளங்குவது சுற்றுலா வருமானமேயாகும். அந்த வருவாய் பாதிக்கப்படாத வகையில் இங்குக் கட்டிடங்களையும், காடழிப்பையும் கட்டுப்படுத்த வேண்டும். அனைத்திற்கும் மேலாக, உந்து ஊர்திகளிலிருந்தும், தொலைவிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்தும் வெளிப்படும் புகையினால் இந்த மண்ணின் தன்மையே மாறிவிடக்கூடும். பனியுகத்திலும் அழியாமல் இன்றுவரை உயிர்வாழும் இந்தக் காடுகள் அமிலமழையினால் அழிவுறுமானால் அது நமது கையாலாகாத்தனத்தையே காட்டும்.

இந்த உயிர்மண்டலங்களைப் பாதுகாப்பதற்கும் மேலாண்மை செய்வதற்கும் பல்வேறு வகையான உத்திகள் தேவை. சிலசமயம், மக்களுக்கு மாற்று வாழ்க்கை அமைத்துக் கொடுக்க அண்டை மண்டலத்தில் பெருமளவில் முதலீட்டுத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்கு மாறாகச் சிலசமயம் மரபு வாழ்க்கையின் ஆதார அடித்தளத்தை வலுப்படுத்த வேண்டியுள்ளது.

விரைவிலேயே, இதைவிடச் சிக்கலான உயிர்மண்டல ஒதுக்கிடங்களின் தொகுதிகளை அமைக்க வேண்டியிருக்கும். இந்தத் "தொகுதித் திட்டத்தின்படி ஓர் உயிர்மண்டல ஒதுக்கிடத்தின் அலுவற்பணிகளை ஆற்றுவதற்கு பல தனித்தனிப் பரப்பிடங்களின் மேலாண்மையை ஒருங்கிணைத்து, பல வகைப்பட்ட உயிரியல் மற்றும் சமூக – பொருளாதாரச் சூழல்கள் ஒரே உயிரியல் புவியியல் மாகாணமாக உருவாக்கப்படுகிறது. இத்தகைய புதுமையான பேரளவுப் பாதுகாப்புத் திட்டங்களினால், விரைவாக மாறிவரும் உலகில் தேவையான நெகிழ்திறன் கிடைக்கிறது.

புனித கில்டா, தசிலி-என்-ஆஜர், லா-ஆமிஸ்டா பூங்கா என்னும் மூன்று உலகப் பாரம்பரிய மனைகளும், உயிர்மண்டல ஒதுக்கிடங்களை எதிர்நோக்கும் அபாயங்களையும் வாய்ப்புகளையும் எடுத்துரைக்கின்றன.

**புனித கில்டா.** இங்கு உள்ளூர்ப் பண்பாடு உயிர் வாழவில்லை. இது ஸ்காத்லாந்திற்கு மேற்கில் 160 கி.மீ. தொலைவிலுள்ள ஒரு தீவுக்கூட்டம். இங்கு கடல் கவிந்து நோக்கும் செங்குத்தான பாறைகள் 430 மீட்டர் உயரம் வரை எழுந்து நிற்கின்றன. இவைதான் ஐரோப்பாவிலேயே உயரமானவை. இது மனிதன் உருவாக்கிய மிகப்பெரிய இயற்கை நிலக்காட்சியுமாகும். இங்கு 2 000 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் குடியமர்ந்தனர். இங்கு வைக்கிங்குகள் கி.பி. 1202இல் கடற் பயணமாகச் சென்றிருக்கின்றனர். இங்கு மக்கள் மிகக்கடினமாக வாழ்க்கை நடத்தினர். அவர்கள், கடற்பறவைகளை வேட்டையாடி உண்டனர். ஆடுகள் வளர்த்தனர். அவற்றின் மயிரில்' ஆடைகள் நெய்து கொண்டனர். 18ஆம் நூற்றாண்டு வரை இங்கு "கருங்கல் வீடுகளே" கட்டப்பட்டன. இவற்றின் வெளி அறையில் கால்நடைகளும், எருவும் வைக்கப்பட்டன.


(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

**அலிசான் ஜாலி** அமெரிக்கர்; விலங்கியலார்; 1987 முதல் பிரின்ஸ்டன் பல்கலைக்கழக வருகைப் பேராசிரியர்; "லெமூர் பிஹேவியர்: எ மடகாஸ்கர் ஃபீல்டு ஸ்டடி" சிகாகோ பல்கலைக்கழக அச்சகம், 1966; "எ வோர்ல்டு லைக் அவர் ஒன் மேன் அண்டு நேச்சர் இன் மடகாஸ்கர்", யேல் பல்கலைக்கழக அச்சகம், 1980; "தி இவல்யூஷன் ஆஃப் ம்ரைபேட் பிஹேவியர்", மாக்மில்லன், நியூயார்க், 2ஆம்பதிப்பு, 1985 போன்றவை இவ்வம்மையாரின் நூல்களுள் சில.



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: கேன்டி லோப்சினோ-ஜுவான் ஹிடால்கோ © இன்காஃபோ, மாட்ரிட்

# பண்டைய நகர்களைப் பேணுதல்

மூனிர் பூஷனாக்கி

உலகெங்கும் சுற்றுலாப் பயணிகளுக்கு இன்று கிடைத்துள்ள மிகப் பெரும் வாய்ப்புகளில் பேருவகையளிப்பது பண்டைய நகரங்களின் சிதைவுகளை காணும் வாய்ப்பும், புதிரில் புதைந்து கிடக்கும் பண்டைய நாகரிகங்கள் பற்றி ஓரளவுக்கேனும் தெரிந்துகொள்ளும் வாய்ப்புமேயாகும். பண்டையச் சிதைவுகளின் மத்தியில் நிற்கும்போது, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய அந்தப் பொற்காலத்தை எண்ணிப் பார்க்கிறோம். ஜெர்மன் கவிஞர் ஷில்லர் உணர்ச்சிப் பெருக்கில் கூறியது போல்,

"இழந்துபோன அனைத்தையும் நாம்
இனியும் காண முடியுமா?
கிரேக்கர்களே! ரோமன்களே!
மீண்டும் இங்கு வாருங்களே!
பண்டைப் பாம்பே மாநகரம்
புத்துயிர் பெற்றிங்கு வாராதா?
வீரன் ஹெர்குலஸ் நகரத்தை
புதிதாய்க் கட்டிட இயலாதா?"

என்று கூக்குரலிடத் தோன்றுகிறது.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும், இந்த நூற்றாண்டு முழுவதிலும் வரலாற்று அறிவியலும், தொல் பொருளியல் ஆராய்ச்சியும் தொல் பொருள் மனைகள் பற்றிய நமது அறிவு வளரப் பேருதவிபுரிந்திருக்கின்றன. ஆசியா மைனரிலுள்ள திராய், மெசப் போடேமியாவிலுள்ள நினவே போன்ற சில தொல்பொருள் மனைகள் பற்றி அறியப்படாமலிருந்த பல தகவல்கள் இன்று அறியப்பட்டிருக்கின்றன.

இன்றைய உலகில், பண்டையச் சின்னங்கள் குறித்து அறிந்துகொள்வதிலும், அவற்றைப் பேணிக்காப்பதிலும் தீவிர ஆர்வம் பெருக்கெடுத்திருக்கிறது. இல்லையெனில், எகிப்திலுள்ள புகழ்பெற்ற ஃபிலே மற்றும் அபுசிம்பல் கோயில்களை நைல் ஆற்றின் நீர்ப்பெருக்கிலிருந்து காப்பதற்காக 1960களில் உலகெங்கும் பன்னாட்டு பேரியக்கம் எழுந்ததற்கு வேறு என்ன காரணம் கூறமுடியும்?

இந்தப் பன்னாட்டு ஒருமைப்பாட்டு உணர்வுதான், யுனெஸ்கோ ஒரு பொது மானுடப் பாரம்பரியக் கோட்பாட்டை வகுத்து, பற்பல முக்கியத் தொல்பொருளியல் மனைகளை உள்ளடக்கிய ஓர் உலகப் பாரம்பரியப் பட்டியலை உருவாக்குவதற்கு உதவியது. அக்ஸம் (எத்தியோப்பியா), சான் சான் (பெரு), ஹம்பி (இந்தியா) சிகிரியா (இலங்கை), டியோட்டிஹுவாக்கன் (மெக்சிக்கோ) டிம்காட் (அல்ஜீரியா) போன்ற பெருமைக்குரிய நினைவுச் சின்னங்கள் இந்தப்



படிப்பகம்

www.padippakam.com

### டியோட்டிஹுவாக்கன் (மெக்சிகோ)

கொலம்பஸ் காலத்திற்கு முந்திய புனித நகரான டியோட்டிஹுவாக்கன் மெக்சிகோ நகருக்கு வடகிழக்கில் 50 கி.மீ. தொலைவிலுள்ள மலையிலுள்ளது. கி.பி. 1-3ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட இந்நகர் அதன் உச்சநிலையில் 36 கி மீ² பரப்புள்ளதாகவும், 2,00,000 மக்கள்தொகை உள்ளதாகவும் இருந்தது. அங்குள்ள உயர்ந்த வழிபாட்டு மையம் மெக்சிகோவின் பண்டைய நாகரிகக் கலையின் உச்சநிலையைக் காட்டுகிறது. அங்கு 350மீ² தனத்தில் 75மீ. உயரமுள்ள கதிரவன் பிரமிட் (இடப்புறம்) இருந்தது; 42மீ. உயரமுள்ள நிலா பிரமிடும், அஸ்டெக்குகளின் இறகுள்ள பாம்பாகிய குவெட்சால்கோட்டல் ஆலயமும் இருந்தன. எரிமலைப் பாறைகளாலான 4,000 வீடுகள் களிமண்ணால் அல்லது சுண்ணச் சாந்தினால் பூசப்பட்டிருந்தன. 6ஆம் நூற்றாண்டில் டியோட்டிஹுவாக்கன் பரந்த நிலப்பகுதியுடைய ஆற்றல்மிகு அரசாகத் திகழ்ந்தது. ஆனால் 650ஆம் ஆண்டில் நகர் எரிந்துவிட்டது. காரணம் இன்னும தெரியவில்லை. இறுதியில் அது கைவிடப்பட்டது. 14ஆம் நூற்றாண்டில் அஸ்டெக்குகள் பெரும் பிரமிட்களுள்ள அந்நகரின் அழிபாடுகளைக் கண்டுபிடித்தபோது, அதைக் கடவுளர் கட்டியதாகக் கருதினர். ஆகவே அதற்கு ''கடவுளரின் இடம்'' எனும் பொருள்படும் டியோட்டி ஹுவாக்கன் என்று பெயரிட்டனர். 1987இல் இப்பகுதி உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.


### அக்ஸம் (எத்தியோப்பியா)

எத்தியோப்பியாவின் டைகர் பகுதியிலுள்ள அக்ஸம் நகர் புகழ்மிகு பண்டைய அரசின் தலைநகராக இருந்தது. அவ்வரசும் அப்பெயரையே பெற்றது. அதை கி.பி. 3ஆம் நூற்றாண்டு கிரேக்க வாசகம் ''உலகின் மூன்றாம் முடியரசு' என்றது. ரோமானியரும் அக்ஸம் பற்றி அறிந்திருந்தனர். பரந்திருந்த அக்ஸம் நாகரிகத்தின் பல அடையாளங்கள் கிடைத்துள்ளன. செதுக்கப்பெற்ற மிகப்பெரிய தூபியான, 33மீ. உயரமுள்ள மாபெரும் நடுகல் (வலப்புறம்), எத்தியோப்பிய புராணங்கள் பொறிக்கப்பட்ட கல்தூண்கள், அரசர்களின் கல்லறைகள் போன்றவை இப்போதுள்ளன. ஒரு புதைமேட்டினடியில் ஷீபா அரசியின் கல்லறை இருப்பதாக ஒரு கதையுண்டு. மேற்குப் பகுதியில் கி.பி. 1000இல் கட்டப்பெற்ற 3 பண்டைய கோட்டைகளும், 18ஆம் நூற்றாண்டுப் பேராலயமும் உள்ளன. 1980இல் அக்ஸம் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.

பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்துக்கும் இன்று பொதுவாக இருப்பது ஒன்று. இவை எல்லாம் இன்று தொல்பொருள் மனைகளாகவே விளங்குகின்றன. அங்கே இப்போது மக்கள் வாழவில்லை. இவற்றின் வீதிகளில் இன்று கேட்பதெல்லாம் பார்வையாளர்களின் காலடி ஓசைதான். இவற்றை ''மாண்ட மாநகர்கள்'' என அழைக்கலாம். ஏனெனில், வரலாற்றின் ஏதோவொரு கட்டத்தில் ஏதோவொரு காரணத்தினால், ஒரு காலத்தில் உயிர்த்துடிப்புடன் திகழ்ந்த இந்த நகரங்கள் நாசமாகிப் போயின.

இந்தப் பண்டைய நகரங்கள் ஒவ்வொன்றும், உலகில் அவை இருந்த பகுதியில் மாபெரும் நகர்ப்புற நாகரிகங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கின. உதாரணமாக, அல்ஜீரியாவிலுள்ள டிட்காட் என்ற பண்டையக் குடியிருப்பு, உள்நாட்டு மக்களோடு ஒருங்கிணைந்த ரோமானிய நாகரிகத்தின் சிறப்பியல்புகளைப் பிரதிபலிக்கிறது.

இந்த நகரம் இன்றும் கட்டிடக் கலை மற்றும் நகரமைப்புக் கையேடுகளில் சமச்சீரான கட்டமைப்புக்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகிறது. இது கீழ்த்திசை மற்றும் கிரேக்க மரபுகள் ஒருங்கிணைந்த நகரமைப்புக் கோட்பாட்டின் விளைவாக உருப்பெற்றதாகும். ஒரு நகரம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் எனப் பண்டைய மக்களின் எண்ணத்தை இந்தக் கோட்பாடு உட்கொண்டிருந்தது. கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்கப் புவியியலறிஞர் பாசானியஸ், ''அரங்கு இல்லாத, பெருமன்றம் இல்லாத, மக்கள் மன்றம் இல்லாத, விளையாட்டரங்கம் இல்லாத ஓர் இடத்தை எவ்வாறு நான் 'நகரம்' என்று அழைப்பேன்?'' என்று கூறிய கூற்றினால் இதனை



ஒளிப்படம்: ரோலண்டு. சாப்ரினா மிஷேயாத் © ராஃபோ, பாரிஸ்



படிப்பகம்

www.padippakam.com

உணரலாம்.

டிம்காடைப் போலவே, ஆக்ஸம், சான் சான், ஹம்பி, சிகிரியா, டியோட்டிஹுவாக்கன் ஆகிய பண்டைய நகரங்களின் வடிவமைப்பும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும், பல்வேறு பண்பாட்டு மண்டலங்களை - பல்வேறு வரலாற்றுக் காலங்களைச் சேர்ந்தவை; உலகின் வெவ்வேறு பகுதிகளில் உள்ளவை. இந்தப் பண்டையச் செல்வங்களின் அழிபாடு மனிதகுலம் முழுவதற்குமே ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு. எனவே, இவற்றின் முக்கியத்துவத்தை இன்றைய உலகச் சமுதாயங்கள் நன்கு உணர்ந்துள்ளன. இன்றைய உலக மக்களுக்கு இவை விலை மதிப்பிட முடியாத பெருங் கருவூலமாகும்.

மனித வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், இந்தப் பண்டைய நகரங்கள் ஒவ்வொன்றும், அந்தக் காலத்திய மனித குலத்தின் நடவடிக்கைகளை - வளவசதிகளை - நம்பிக்கைகளை - அமைப்பு முறையினை - சுருங்கக் கூறின் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தது. எனவே, இந்த மனைகளைச் சீர்குலைத்து விடாமல், பேணிக்காப்பது பன்னாட்டுச் சமுதாயத்தின் கடமையாகும்.


பண்டைக் காலங்கள் பற்றிய ஆவண ஆதாரங்கள் மிக அரிது. எனினும், ஆக்ஸம் கல்லறைகள், சான் சான் கோயில்கள் போன்ற ஏராளமான பண்டையச் சின்னங்கள் மண்ணில் புதைந்திருந்தன அல்லது கண்ணுக்குப் புலனாகும்படி இருந்



ஒளிப்படங்கள் © புரிலோட், எ.பி.ஜ., பிராந்ஸ்

## டிம்காட் (அல்ஜீரியா)

டிம்காட் என்பது ரோமானிய நகரான தங்காடியின் இன்றைய பெயர். இது கி.பி.100இல் ட்ரோஜன் மன்னரால் ஒரேஸ் மலைக்குக் வடக்கே பாதுகாப்புப் பாசறையாக நிறுவப்பட்டது. தங்காடி விரைவாக வளர்ந்தது 5ஆம் நூற்றாண்டில் மிலேச்சர் படையெடுப்பின் பிறகு ஒரஸ் மலைவாசிகள் இதை அழித்தனர் 6ஆம் நூற்றாண்டில பைசாண்டிய ஆட்சியின் போது புதுப்பிக்கப்பட்டு. பிறகு கைவிடப்பட்டது. 1880இலிருந்து நடைபெற்ற அகழாய்வுகள் ரோமானிய நகர அமைப்புத் திட்டத்திற்கேற்ப அரிய முறையில் அமைந்த ஒரு நகரின் அழிபாடுகளைக் காட்டின. அங்கு சதுக்கம், ஜுப்பிட்டர், ஜுனோ மினர்வா ஆலயம், அரங்குகள், குளியலிடங்கள், ஆலயங்கள், அங்காடிகள், பொது நூலகம் ஆகியவை இருந்தன. 3ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவ சமயம் அங்கு புகுத்தப்பட்டதை அங்குள்ள ஆலய அழிபாடுகள் காட்டுகின்றன. அப்பகுதியைப பாதுகாப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. இன்னும் முழுவதும் அகழ்வாய்வு நிகழாத பகுதிகள் இருப்பதால் அதன் தொடக்கப் பரப்பை அறிய இயலவில்லை. 1982இல் டிம்காட் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது கீழே: வெற்றி வளைவின் பொதுத் தோற்றம் இடப்புறம்: வழிபாட்டுக் கல்.





படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் ஏ. லாராமெண்டி © இன்காஃபோ, மாட்ரிட்

**பெட்ரா (ஜோர்டன்)**

சாக்கடலுக்குத் தெற்கிலுள்ள இளஞ்சிவப்பு மணற்பாறைச் சரிவுகளில் செதுக்கவும் கட்டவும் பெற்ற இப்பண்டைய அராபிய நகர் நபாதீயேயன் அரசின் (கி.மு. 4-கி.பி. 2ஆம் நூற்றாண்டு) தலைநகராகும். இரு வாணிக வழிகளின் சந்திப்பிலிருந்த இது அராபிய சாம்பிராணி, இந்திய நறுமணப்பொருள், சீனப் பட்டு, எகிப்திய தங்கம், நியூபியத் தந்தம், அடிமைகள் ஆகிய வாணிகப் பொருள்களின் மையமாக இருந்தது. கி.மு. 1 - கி.பி.. 1ஆம் நூற்றாண்டில் பெட்ரா உயர் செழிப்புற்று எழில் கட்டிடங்களைக் கட்டத் தொடங்கியது. கி பி. 106இல் இது ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகி, இன்னும் வளர்ச்சிபுற்றது. மாற்று வாணிக வழிகள் தோன்றவே இதன் பொருளாதார்ம் சீர்குலைந்தது. பிறகு கிறிஸ்தவர்கள் இங்கு குடியேறினர். 2 கி.மீ. நீளமுள்ள குறுகிய கணவாய் வழியாகவே பெட்ராவுக்குச் செல்ல முடியும். இங்குள்ள மணற்பாறையில் வெட்டப்பெற்ற ஆலயங்கள், கல்லறைகள் மற்றும் அரண்மனைகளில் கீழ்நாட்டுமரபுகளும், கிரேக்க-ரோமானிய இயல்புகளும் இணைந்துள்ளன. பெட்ராவைப் பேணவும் அரண்மனைக் கல்லறையைப் புதுப்பிக்கவும் உலக மரபுச்செல்வக் குழு ஜோர்டன் அரசுக்கு நிதியுதவி செய்துள்ளது. 1985இல் பெட்ரா உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது மேலே: 'கன்னி மாடம்'': நகருக்கு வெளியேயுள்ள பாறையில் வெட்டப்பெற்ற கட்டிடம்; இது அரச கல்லறையாக இருந்திருக்கலாம். (2-3ஆம் நூற்றாண்டு).

தன. இவற்றை அகழ்ந்தெடுத்துக் கிடைத்த தகவல்கள் மூலம் அக்கால மக்களின் வாழ்க்கை முறை, தொழில், வழிபாட்டுமுறை ஆகியவை குறித்து அறிய முடிந்தது. இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அது அத்துணை எளிதான காரியமன்று. ஹம்பி, டியோட்ஹுவாக்கன் போன்ற பல நூறு ஹெக்டேர் பரப்பளவுடைய மனைகள் உள்ள ஒரு நாட்டில், அவற்றைக் கண்காணிப்பதிலும், பேணுவதில் பல சிக்கல்கள் எழுகின்றன. இவற்றை உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதன் மூலம் இவற்றை எதிர்நோக்கும் அபாயங்கள் குறைந்துள்ளன; எனினும், அந்த அபாயங்கள் அடியோடு நீங்கவில்லை.

இந்தப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கு பொறுப்புடையவர்கள்-குறிப்பாக உள்ளூர் நகரமைப்பு அதிகாரிகள்-இவற்றைப் பாதுகாப்பது நவீன வாழ்க்கை முறைக்குப் பொருந்தாத ஒரு வேலை எனக் கருதுகிறார்கள். இதனால், பல தலைசிறந்த தொல்பொருள் தொகுதிகள் அழிவை எதிர்நோக்கி இருக்கின்றன. உள்கட்டமைப்புகளை உருவாக்குவதும், சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்வதும், போதிய முன்னெச்சரிக்கையின்றி தொல்பொருள் மனைகளில் பொதுமக்களை அனுமதிப்பதும் தேசியப் பாதுகாப்பு அதிகாரிகள் எதிர்த்துப் போராடவேண்டிய அபாயங்களாக உள்ளன. அத்துடன் பழம் பொருள்களைக் கள்ளத்தனமாகத் திருடுபவர்களிடமிருந்தும் அவற்றைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது.

ஒரு தொல்பொருள் மனையை உலகப் பாரம்பரியப்பட்டியலில் சேர்ப்பதால், பன்னாட்டுச் சமுதாயத்தின் கருத்தை மதிக்கவேண்டும் என்ற கட்டாயத்தில் கொள்கை வகுப்பவர்கள் சற்றுச் சிந்திக்கிறார்கள். உலகின் பல இடங்களில், நகரமைப்பு வல்லுநர்களும், கட்டிடக் கலைஞர்களும், சுற்றுலா அதிகாரிகளும் பண்டையச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து தொல்பொருள் பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து திட்டமிட்டுச் செயல்படுவதைக் காண்கின்றோம். இதற்கு கார்த்தேஜ் தொல்பொருள் மனை சிறந்த எடுத்துக்காட்டு. இன்று இந்த மனைக்கு மிகுந்த விலைமதிப்பு இருந்து வந்தபோதிலும், இங்கு கட்டிடங்கள் கட்டுவது தவிர்க்கப்பட்டிருக்கியது, இந்த மனை ஒரு தொல்பொருள் மனையாக உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய தகவல்களைப் பெறும் நோக்கில் இதுவரை அகழ்ந்திடப்படாத தொல்பொருள் மனைகளில் அகழ்வு நடத்தும்போது மற்றொரு சிக்கல் எழுகிறது. தொல்பொருள்கள் மண்ணில் புதைந்திருக்கும்போது பாதுகாப்பாக இருக்கின்றன. மனைகளை அகழ்ந்தெடுக்கும்போது அவற்றுக்குத் தீங்கு ஏற்படக்கூடும்.

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

---

**மூனிக் பூஷனாக்கி** யுனெஸ்கோ பண்பாட்டு மரபுச்செல்வத் துறை அலுவலர்; வரலாற்றறிஞர், தொல்பொருளாய்வாளர்; அல்ஜீரிய தொல்பொருள் பணியின் முன்னாள் பாதுகாப்பாளர்; மத்தியதரைக்கடல் பகுதியில் பல அகழ்வாய்வுகளில் பணியாற்றியுள்ளார். 'சித்தே ஆந்திக்தால் ஷெரி'' (''அல்ஜியர்ஸ்'', 1978), ''பூய்ல் தெ லா நேக் ரோப்போல் ஒக்சி தெந்தால் தெதிப்பாசா'' (''அல்ஜியர்ஸ்'' 1976) போன்ற நூல்களும், தொல்பொருளாய்வுபற்றிய பிற கட்டுரைகளும் எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

# மீண்ட காலம்

### பண்பாட்டுப் பகுதிகளையும் கட்டிடங்களையும் காட்டும் ஒரு வரலாற்றுக் காட்சி


ஜார்ஜ் மிச்செல்

உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பண்பாட்டு மனைகளுக்கு ஆதார ஆவணங்கள் காட்டி, அவற்றை வகைப்படுத்தி, பகுப்பாய்வு செய்து, பயனுள்ள முறையில் மீட்டாக்கம் செய்ய இயலும். ஆனால், மனிதனின் தலைவிதியிலிருந்து அவற்றை ஒருபோதும் விலக்கி வைத்துவிட முடியாது. இந்த மனைகள், மனிதப் பெருமுயற்சிக்கும், உலக வரலாற்றின் கலைவேலைப்பாடுகளுக்கும் நிரந்தரச் சான்றுகள் ஆகும். மனிதனின் செயல்கள் அனைத்தும்-அவை மாண்பும் தெய்விகமும் வாய்ந்தவையாயினும், அவலமும் வீரமும் கொண்டவையாயினும்-இங்கே சித்திரிக்கப்பட்டுள்ளன. கடந்தகாலம் உயிர்வாழ்ந்து நிகழ்காலத்துடன் ஒருங்கிணைவதற்கு இந்தப் பண்பாட்டு மனைகள் கண்கூடான எடுத்துக்காட்டு. இந்தப் பாரம்பரியத்தின் உன்னத இயல்புகளை நன்குணர்ந்து, வருங்காலத்திற்காக அவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள முயற்சியே உலகப் பாரம்பரிய உடன்படிக்கை ஆகும்.

பண்டைக்காலத்துத் தலைசிறந்த நினைவுச் சின்னங்களும் நகரங்களும், அவை சிதைந்து போயிருந்தாலும், இன்றும் பயன்பட்டு வந்தாலும், ஆற்றல் வாய்ந்த தனிநபர்களின் வாழ்க்கையுடன் இரண்டற இணைந்துவிட்டவையாகும். இத்தகைய பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்களை எழுப்புவதற்கு பேரரசர்கள், இளவரசர்கள், போப்பாண்டவர்கள், பேராயர்கள் போன்ற பெருமளவுப் பொருளாதார வசதிபடைத்தவர்களால்தான் முடியும். உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பெரும்பாலான பண்பாட்டு மனைகள் அவற்றின் அழகியல் சிறப்பிற்காகவும், நகர்ப்புற அமைப்பியல்பிற்காகவும் இடம் பெற்றுள்ளபோதிலும், அவற்றின் வரலாற்றுப் பரிமாணங்களையும் மறப்பதற்கில்லை.

அரச குடும்பத்தினர் தங்களுக்காக அற்புதமான மாளிகைகளைக் கட்டினர். அவர்கள் சில சமயம் பல கற்பனை வடிவங்களைக் கட்டிடங்களாக வடித்தனர். அவர்கள் அமைத்த கட்டிட மரபு, கண்ணையும் கருத்தையும் கவர்வதாகவும், சில சமயம் அச்சுறுத்துவதாகவும் விளங்குகிறது. இங்கு கட்டிடக்கலை மண்ணுலக வாழ்வின் நோக்கங்களுக்குரியதாகத் தோன்றுகிறது. உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள அரண்மனைகள் இதற்குச் சான்று. சீனாவிலுள்ள மிங் அரசர்களின் அரண்மனைகள், இந்தியாவில் பத்தேபூர் சிக்ரியிலுள்ள முகலாய அரண்மனைகள், ஃபிரான்சிலுள்ள சாம்போர்டு, ஃபாண்டைன் புளோ, வர்சேல்ஸ் போன்ற மன்னர் அரண்மனைகள், பிரிட்டனிலுள்ள ஆங்கிலப் பிரபுக்களின் மாளிகைகள் ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவை. ஈரானிலுள்ள பெர்சிப்போலிஸ், மெக்சிகோவிலுள்ள டியோட்டிஹுவாக்கன், இந்தியாவிலுள்ள ஹம்பி, சீனாவின் பெருஞ்சுவர், வேல்ஸ்சிலுள்ள முதலாம் எட்வர்டு மன்னரின் மதிலரண்கள் ஆகியவை ஆதிக்க மையங்களாக விளங்கின.

உலக வரலாற்றில் எல்லாக் காலங்களிலுமே ஆதிக்க நாடுகள், ஆதிக்கத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு கட்டிடக் கலையை வளர்க்க முயன்றார்கள். அவர்களுடைய இராணுவ, நிருவாக, நீதி மற்றும் சடங்குமுறைக் கட்டுமானங்கள் அனைத்தும் கடந்தகாலப் பகட்டார்வத்தை நினைவூட்டுகின்றன; சில சமயம் அவை அடக்குமுறைக் காலத்தைப் பிரதிபலிக்கின்றன; எல்லாக் காலங்களிலும் அவர்களின் புகழ் வேட்கையினைக் குறிக்கின்றன. துருக்கியிலுள்ள இஸ்தான்புல், சிரியாவிலுள்ள ஆலப்போ, மொராக்கோவிலுள்ள ஃபெஸ் போன்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்களில் அமைந்திருக்கும் ஏராளமான கட்டிடங்கள், பல நூற்றாண்டுகளாக மாநகர்களில் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு அரசு ஆதரவு நல்கிவந்திருப்பதற்குச்



தனிப்படம் ஜே. டெ வெர்காரா © இன்காஃபோ, மாட்ரிட்


தனிப்படம் ஜூலியன் அலோன்சோ-எம்.ஜி. ஃபெர்னாண்டஸ் © இன்காஃபோ, மாட்ரிட்



படிப்பகம்

www.padippakam.com





### போட்டோசி (பொலீவியா)


ஆண்டீஸ்மலையில் 4,000 மீ. உயரத்திலுள்ள போட்டோசி எனும் குக்கிராமத்தில் 1540களில் புதிய உலகிலே வளமிக்க வெள்ளி எடுக்கப்பட்டபோது அதன் எதிர்காலம் முற்றிலும் மாறியது. 17ஆம் நூற்றாண்டில் புதிய நகரில் 1,60,000 புதிதாகக் குடியேறியவர்களும். கொத்தடிமைகளாகச் சுரங்க வேலைசெய்த 13,500 இந்தியரும் இருந்தனர். 1825இல் பொலிவியா விடுதலை பெற்றபின் சுரங்கத் தொழில் குறைந்தது. உலோகக் கலவை ஆலைகளுக்கு நீர் வழங்கிய அணைக்கட்டுகளையும், உயர் மேட்டுநிலத்திலும் பள்ளத்தாக்கிலுமிருந்த 5,000 சுரங்கங்களில் மிகப் பெரியவற்றையும் அங்கு காணலாம். நகரிலுள்ள கட்டிடங்களில் புதிய கலையியல்பும், மத்திய ஆண்டீஸ் பகுதியில் பரவியிருந்த இந்திய இயல்பும் கலந்துள்ளன. 20 ஆலயங்களும் உயர்குடி மக்களின் வீடுகளும் உள்ளன. அரச நாணய சாலையில் ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள வெள்ளி முத்திரையிடப்பட்டது; ஆகவே போட்டோசி 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியப் பொருளாதாரத்தின் அச்சாணியாக இருந்தது. கடந்த 10 ஆண்டுகளாக யுனெஸ்கோவும், ஐ.நா வளர்ச்சித் திட்டமும் போட்டோசியைப் பேணுவதற்கு பொலீவியா அரசுக்கு உதவிவருகின்றன. போட்டோசி 1987இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.

### வரலாற்றுச் சிறப்புள்ள குவபெக் (கனடா)

செயின்ட்லாரன்ஸ்நதிக்கு எதிரிலுள்ள மேட்டுநிலத்தில் 1608இல் சாமுவெல் தெ ஷாம்ப்ளெய்ன் நியூஃபிரான்சின் தலைநகரை நிறுவினார். இம்மேட்டுநிலம் பிறகு டயமண்டு முனை எனப்பட்டது. அட்லாண்டிக் பகுதி வாணிகத்திற்கு முக்கிய இடமான இந்நகர் 1759இல் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டது. விரைவில் அவ்வாட்சி கனடா முழுவதும் பரவியது. துறைமுக வாணிகம் காரணமாக குவபெக் விரைவாக வளர்ச்சியுற்றது; அங்கு வெவ்வேறு அலுவல்களுள்ள இரு நகர்கள் தோன்றின. பழைய கீழ் நகர் வணிக மாவட்டமானது. அங்கு 17. 18ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த வீடுகளும், வெற்றி அன்னையின் ஆலயமும் உள்ளன. குவபெக் அரண் அமைந்த வட அமெரிக்க குடியேற்ற நகராகவும், அக்கண்டத்தின் வரலாற்றில் முக்கிய கால நகராகவும் விளங்குகிறது. குவபெக்கின் வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி 1985இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெற்றது. இடப்புறம்: உயர்ந்து நிற்கும் அரண்மனை.

www.padippakam.com






ஒளிப்படம்: வில்லார்டு © ஏ.எ.எ., பாரிஸ்

## ஹம்பி (இந்தியா)


தக்காண பீடபூமியில் இன்றைய ஹம்பி எனும் கிராமத்தினருகில் 14ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் நிறுவப்பட்ட விஜயநகரம் தென்னிந்தியாவில் ஆட்சி செலுத்திய பரந்த இந்துப் பேரரசின் தலைநகராக இருந்தது. அவ்வரசு வடக்கிலிருந்து வந்த முஸ்லிம் படைகளை 200 ஆண்டுகளாகத் தடுத்து நின்றது. இயற்கைப் பாதுகாப்பு சூழ்ந்த அந்நகரைச் சுற்றி அவ்வரசர்கள் 7 அரண்கள் அமைத்திருந்தனர். அவை விளைநிலத்தையும் பாதுகாத்தன. அரசரும் ஏராளமான அலுவலர்களும் நகரின் நடுவில் கட்டிடத் தொகுதிகளில் வாழ்ந்தனர். விஜயநகரின் பெருகி வந்த ஆற்றல் வடக்கிலுள்ள முஸ்லிம் மன்னர்களின் கவனத்தைக் கவர்ந்தது. 1565இல் அவர்கள் அதைத் தாக்கி அழித்தனர். 1986இல் ஹம்பி உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெற்றது. அதன் அளவும் ஏராளமான கட்டிடங்களும் (500) அதைப் பாதுகாக்கும் முயற்சியை அரிதாக்குகின்றன. பழைய நகரின் தெருக்களில் இன்று கரும்பும் நெல்லும் வளர்கின்றன. புதிய கட்டிடங்கள் எழும்புவதால், அதன் பிற பகுதிகள் பாதிக்கப்படுகின்றன. ஹம்பி பயணிகள் வரும் ஒரு திருத்தலமாக இருப்பதால், அழிவினின்று அதைக் காக்கப் பயணிகளுக்கு வசதியளிக்க வேண்டியிருக்கின்றது. கம்பாதி ஆலயக் கோபுரத்தை ஒளிப்படத்தில் காணலாம்.

த்ஷுட்ஷ் தேசிய பறவைகளின் சரணாலயம் செனகால் (5ஆம் பக்கக் கட்டுரை காண்க).



ஒளிப்படம் ஜுவான் ஏ. ஃபெர்னாண்டஸ் © இன்காஃபோ பாரிஸ்

## நடுப்பக்கம்



ஒளிப்படம் : பாஸ்கல் மரேஷோ, பாரிஸ்

## பழைய நகரான சானா (ஏமன் அராபியக் குடியரசு)

மலை சூழ்ந்த சமவெளியிலுள்ள சானா (20ஆம் பக்கம்) கி.மு. 5ஆம் நூற்றாண்டிலே சாபா ஏமனி அரசின் அரணாக இருந்தது. அது வாணிக வழிகள் சந்திக்குமிடத்தில் இருந்தது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் அதன் இயற்கை அரண்களுக்குச் செங்கல் சுவர்கள் சேர்க்கப்பட்டன. அங்கோர் அரிய நகர் உருவானது. 6ஆம் நூற்றாண்டில் பாரசீகர் அதைப் பிடித்த பின் அது இஸ்லாம் சமயத்தைத் தழுவியது. அப்போது அங்கு வீடுகள், மசூதிகள், தோட்டங்கள், பொதுக் குளியலிடங்கள் ஏராளமாகத் தோன்றின. இவ்வரிய நகரின் கட்டிடங்கள் எல்லாம் களிமண் அல்லது செங்கலால் கட்டப்பெற்று, சுண்ணாம்பால் அழகுபடுத்தப் பெற்றிருந்தன. வரலாற்றுச் சிறப்புமிகு இந்நகரைப் பாதுகாப்பதில் சில இடர்ப்பாடுகள் உள்ளன. பண்டைய அமைப்புகளைத் தழுவவேண்டியிருக்கின்றது; மேலும் போதிய வசதிகள் இல்லை. நீர்வசதியும் இல்லை. கால்வாய்களில் நீர் கசிவதாலும், சாக்கடைகள் நல்ல நிலையில் இல்லாததாலும் கட்டிடங்களின் அடிப்படைகள் நலிவுறுகின்றன. நன்கு பேணப்படாத சாலைகளில் அடிக்கடி செல்லும் உந்துவண்டிகள் எழுப்பும் தூசியும் ஊறுபாடு செய்கின்றது. பழைய நகரான சானாவை ஏமன் காப்பதற்கு உதவி செய்வதற்காக 1984இல் யுனெஸ்கோ ஒரு பன்னாட்டு முயற்சியைத் தொடங்கியது. சுகாதார வசதியளித்தல், வீடுகளின் அடிப்படைகளை உறுதிப்படுத்துதல், சாலைகளில் மேல்பூச்சிடுதல், வரலாற்றுச் சின்னங்களைப் புதுப்பித்தல் இத்திட்டத்தின் நோக்கங்கள். சானாவில் சுற்றுலா வசதியைப் பெருக்கவும் முயற்சி நடைபெறுகின்றது. 1986இல் சானா உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.



ஒளிப்படம்: ஜே.எம். பாரிஸ் © இன்காஃபோ, மாட்ரிட்

## தலமங்கா ராங்கே-லா அமிஸ்டாட் (கோஸ்டா ரீக்கா)

5 00,00( ஹெக்டேர் பரப்புள்ள இந்த உயிர்மண்டலப் புகலிடம் மத்திய அமெரிக்காவின் வனவிலங்குகளின் சரணாலயமாகும். இப்பகுதியின் தட்பவெப்பநிலை, மண்வளம், (கடல் மட்டம் முதல 3,819மீ.வரை) உயரம் ஆகியவை மிகுதியாக வேறுபடுவதாலும், வட, தென் அமெரிக்கப் பகுதிகளை இணைக்கும் "நிலப்பால"மாக இது இருப்பதாலும் இதன் தாவர, விலங்குயிர்கள் பல வகையாக உள்ளன. இப்பகுதியில் 8 வகை உயிரினப் பகுதிகள் உள்ளன. இதன் இயற்கை வளப் பட்டியல் இன்னும் முழுமையாகவில்லை. ஆயினும் 13 வகை பாலூட்டிகளும், 15 வகை பறவைகளும், 10 வகை ஊர்வன: நில, நீர் வாழ் உயிரினங்களும் இங்கிருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. 1983இல் இது உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. உள்ளே நுழைவது அரிதாகையாலும், செங்குத்தான மலைச்சரிவுகள் வேளாண்மைக்கு ஏற்றனவல்ல என்பதாலும் மனிதர் குடியேற்றம் அரிதாக இருக்கின்றது. ஆயினும் கி.மு. 500-லிருந்து நிலையான பண்பாடு நிலவியதாகத் தொல்பொருளாய்வு காட்டுகின்றது. இன்று 10,000 இந்தியர் அங்கு மரபான வாழ்க்கை வாழ்கின்றனர். இவ்வாறாக தலமங்கா ராங்கே-லா அமிஸ்டாட் உயிர்மண்டலப் புகலிடம் மத்திய அமெரிக்காவின் பண்பாட்டு மரபைச் காப்பதுடன், இப்பகுதியின் இயற்கை வளங்கள் பற்றிய அரிய விவரங்களையும் தருகின்றது.



படிப்பகம்


www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com





ஒளிப்படம் ஏ லாராமெண்டி © இன்காஃபோ மாட்ரிட்

## உலுரு (அயர்ஸ் பாறை-மலை ஒல்கா) தேசியப் பூங்கா (ஆஸ்திரேலியா)



மத்திய ஆஸ்திரேலியாவில் ஆலிஸ் ஊற்றுகளுக்கு 300 கி.மீ. தென்மேற்கிலுள்ள இப்பரந்த மண்வெளியில் இரு அரிய புவியமைப்புகள் உள்ளன. அயர்ஸ் பாறை மாபெரும் உருண்டையான, சிவப்பு மணற்பாறையாலான ஒரே கல்லாகும். இதன் சுற்றளவு 9.4 கி.மீ. பளபளப்பான சரிவுகள் நிலத்திலிருந்து 340மீ.உயரமுள்ளன. அடிப்பகுதியிலுள்ள குகைகள் ஆஸ்திரேலியப் பழங்குடிகளுக்குப் புனிதமான இடமாகும். உள்ளே பாறை ஓவியங்கள் உள்ளன. அவற்றுள் சில 10,000 ஆண்டுகளுக்கு முந்தியவை. ஒல்காஸின் 36 செங்குத்தான பாறை முகடுகள் 3,500 ஹெக்டேர் வரை பரவியுள்ளன. அவை பாலை நிலத்திலிருந்து 546 மீ. உயரமுள்ளன. உலுரு தேசியப் பூங்காவில் அரிதான அல்லது அழியும் நிலையிலுள்ள செடிகளும் விலங்குகளும் உள்ளன. தடித்த புல் தவிர, வயிற்றில் பையுள்ள அரிய விலங்குகள் உட்பட 20 வகை பாலூட்டிகள் அங்குள்ளன. வெளியிலிருந்து புகுத்தப்பட்ட செந்நரி, பூனை, வீட்டு எலி ஐரோப்பிய முயல், காட்டுநாய், ஒட்டகம் போன்ற பாலூட்டிகள் அவற்றுடன் போட்டியிடுகின்றன. ஏறக்குறைய 80 பழங்குடி கூட்டங்கள் அங்கு வாழ்கின்றனர். அவர்கள் வேட்டையாடியும், சேகரித்தும் பிழைக்கின்றனர். இப்பூங்காவிற்கான திட்டம் இயற்கை மற்றும் பண்பாட்டு மரபுச் செல்வங்களைக் காப்பதுடன், பழங்குடிகளின் பண்பாட்டையும் பாதுகாக்க விழைகின்றது. அவர்களின் மரபான வாழ்க்கையின் தேவைகளையும், வளர்ந்து வரும் சுற்றுலா வசதிகளின் தேவைகளையும் இணைக்கவேண்டியிருக்கின்றது. 1987இல் உலுரு தேசியப் பூங்கா உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெற்றது.




ஒளிப்படம்: மிஷேல் எஸ்கோபார்-வெரோனிக்ஹெமரி © இன்காஃபோ, மாட்ரிட்

## டெல்பி (கிரீஸ்)



காரிந்த் வளைகுடாவிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள பர்னாசஸ் மலையின் தென்மேற்குச் சரிவிலுள்ள எழிலார்ந்த பாறை அரங்கில் அப்போலாவின் ஆலய அழிபாடுகள் உள்ளன. இது பண்டைய கிரீஸின் புகழ்மிகு ஆலயமாகும். டெல்ஃபியில் அப்போலோ வழிபாடு நடந்தது. அழிபாடுகளின் அளவு டெல்ஃபியின் சமய, அரசியல் சிறப்பைக் காட்டுகிறது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் டெல்ஃபி அதன் உச்ச நிலையில் கிரேக்க உலகின் சமய மையமாக விளங்கியது. கிறிஸ்தவ சமயம் தோன்றும் வரை டெல்ஃபி தெய்வ வாய்மொழியின் செல்வாக்கு நிலைபெற்றிருந்தது. புகழ்மிகு நகர்கள் தம் காணிக்கைகளை வைத்திருப்பதற்காகக் கட்டிய சிறிய ஆலயங்களான கருவூலங்கள் அப்போலோவின் ஆலயத்திற்குச் செல்லும் வளைவான புனித பாதையில் வரிசையாக உள்ளன. (கி.மு. 4ஆம் நூற்றாண்டு). ஆலயத்திற்கு உயரே நாடக அரங்கு, விளையாட்டரங்கு, காஸ்டலியன் ஊற்றுக்கருகே உடற்பயிற்சி அரங்கு ஆகியவை உள்ளன. ஊற்றுக்கப்பால் அத்தீனா புரோனாயாவின் ஆலயம் இருக்கின்றது. அதன் புகழ்மிகு கட்டிடம் பளிங்கு வட்டக்கூடம் (இடப்புறம்). இது கி.மு. 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆலயத்திற்கு உயரே மேட்டுநிலத்தில் ஒரு நகர் இருந்தது. அது நிலநடுக்கப் பகுதியின் நடுவில் இருப்பதால் இடருக்குட்பட்டுள்ளது. பலமுறையும், அண்மையில் 1981-லும் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. உறைபனியில் பாறைகள் விழுவதாலும், மழைநீர் வீழ்ச்சியினாலும், நீர்க்கசிவினாலும் அது ஓரளவு ஊறுபட்டுள்ளது. ஏராளமான சுற்றுலாப் பயணிகள் டெல்ஃபிக்குச் செல்வதால், கல் தரை தேயாதவாறு, ஆலயத்தைச் சுற்றிச் செல்வது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1987இல் டெல்ஃபியை உலக மரபுச் செல்வப் பட்டியலில் சேர்க்குமுன், உலக மரபுச்செல்வக் குழு அங்கு கட்டப்படுவதற்குத் திட்டமிடப்பெற்றிருந்த அலுமினிய பதன ஆலையை அங்கு கட்டக்கூடாதென்று வலியுறுத்தியது. அவ்வாலையை டெல்ஃபியிலிருந்து 55 கி.மீ. தள்ளிக் கட்ட கிரேக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தது

**உலக மரபுச்செல்வம் பற்றிய 10 தொகுதி கொண்ட நூலும் ஒரு வழிநூலும்**




யுனெஸ்கோவின் உதவியுடன் ஸ்பானிய பதிப்பகமான இன்காஃபோ (காஸ்டெலோ, 59 மாட்ரிட்) 10 பெருந்தொகுதிகள் கொண்ட அரிய நூலை வெளியிடுகின்றது. இவை உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றுள்ள எல்லா பண்பாட்டு, மற்றும் இயற்கைச் செல்வங்களை உலக மக்களுக்கு விளக்குகின்றன. இவற்றுள் 8 ஏற்கெனவே ஸ்பானிய மொழியில் (''எல் பாத்ரிமோனியோ தெல் முந்தோ'' எனும் தலைப்பில்) பிளாசா மற்றும் ஜேன்ஸ், பார்சிலோனா பதிப்பக வெளிவந்துள்ளன. இவற்றில் ஒவ்வொரு செல்வம்பற்றிய வரலாற்று, கலை, தொழில்நுட்பச் செய்திகளும் வண்ண ஒளிப்படங்களும் உள்ளன. இன்காஃபோவும் யுனெஸ்கோவும் ஒரே தொகுதியில் உலக மரபுச்செல்வம் பற்றி ''குயா தெல் பாத்ரிமோனியோ முந்தியால்'' எனும் தலைப்பில் ஒரு வழிநூலைத் தொகுத்து வெளியிட்டுள்ளன (இதில் வண்ண ஒளிப்படங்களுடன் 500 பக்கங்களுள்ளன).



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் யுனெஸ்கோ/காட்

சான்று பகர்கின்றன. டோலிடோ, ஃபுளாரன்ஸ், புடாபெஸ்ட், கிராக்கோ, மிதக்கும் நகரம் வெனிஸ் போன்ற ஐரோப்பிய நகரங்களுக்கும் இது பொருந்தும்.

சில அரசர்கள் அயல்நாட்டு மரபின் வழித்தோன்றல்களாக இருந்தார்கள். எனவே, அவர்கள் வேண்டுமென்றே அயல்நாட்டுப் பாணியில் கட்டிடங்களை எழுப்பினார்கள். மெக்சிகோவிலுள்ள ஓவாக்சாக்கா, பெருவிலுள்ள குஸ்கோ, பிரேசிலிலுள்ள சால்வடார் -டி- பாகியா, கனடாவின் கியூபெக் போன்ற நகரங்களில் குடியேற்ற ஆதிக்கத்தின்போது எழுப்பப்பட்ட கட்டிடங்கள் ஐரோப்பிய பாணியில் அமைந்திருக்கக் காணலாம். வேறு சில நகர்ப்புறங்கள், என்றும் மாறாத உள்நாட்டுச் சமூக-பண்பாட்டுச் சூழலைப் பிரதிபலிக்கின்றன. ஏமனிலுள்ள மதில் நகரம் ஷிபாம், எகிப்திலுள்ள கெய்ரோ ஆகியவை இதற்குச் சான்றாவன. இவை மெல்ல மெல்ல மறைந்துவரும் கடந்த கால வாழ்க்கை முறையையும் எடுத்துக் காட்டுகின்றன. அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெரும் மாறுதலடைந்துள்ளபோதிலும், இந்தக் கட்டிடங்களை அவர்களின் வாழ்விலிருந்து பிரித்துவிட முடியாது.

சில நினைவுச் சின்னங்கள், அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தைப் பொறுத்துப் போற்றப்படுகின்றன. அமெரிக்காவிலுள்ள சுதந்திரச் சிலை, அங்கு குடியேறிய கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையின் சின்னமாக விளங்குகிறது. போலந்திலுள்ள ஆஸ்விட்ஸ் அகதிகள் முகாம் போன்ற வேறு சின்னங்கள், தன்னையே அழித்துக் கொள்வதற்கு மனிதன் பெற்றிருக்கும் ஆற்றலை நினைவுபடுத்துகின்றன. எனினும், பெரும்பாலான பண்பாட்டு மனைகள், மனித வரலாற்றில் அவலத்தின் எல்லையைக் காட்டவில்லை. அவை ஒரு மாறிவரும் சூழலைச் சேர்ந்தவை; அந்தச் சூழலில் மாறுபட்ட மனிதத் தேவைகளும், கோட்பாடுகளும் உருவாகின.

கடந்தகாலத்துடன் தனது தொடர்பினை விடாமல் வலியுறுத்திக் கொண்டிருக்கும் பண்பாட்டு மனைகளும் உண்டு. இன்று இவை கைவிடப்பட்டு, சிதிலமடைந்து கிடக்கின்றன. எகிப்திலுள்ள மெம்பிஸ், கிரீசிலுள்ள டெல்ஃபி, ஈராக்கிலுள்ள ஹாட்ரா, பெருவிலுள்ள சான் சான் ஆகியவை இதற்குச் சான்றுகள். இவை மறைந்த நாகரிகங்களின் அற்புதக் கலை வேலைப்பாடுகளுக்குச் சான்று பகர்கின்றன. இவற்றின் சிதைவுகள் இன்று வரை நீடித்திருக்கின்றன என்றால், அதற்கு நவீன தொல்பொருள் ஆராய்ச்சிகளும், மனிதர்களின் சுற்றுலா நடமாட்டமுமே காரணம். வேறு சில சின்னங்கள், அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் கருதி விழிப்புணர்வோடு பாதுகாக்கப்படுவதால், சற்றே மாறிய வடிவத்திலும் இன்று வரை நீடித்து வாழ்கின்றன.

ஒரு பேரரசின் தலைநகராக 2,000 ஆண்டுகளுக்கு மேலாக சீரும் சிறப்புமாகத் திகழ்ந்துவந்த ரோம் நகரம் அதன் வரலாற்றில் ஏற்பட்ட எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளை எடுத்துரைக்கிறது. இலங்கையிலுள்ள அனுராதபுரம், ஜெருசலம், ஸ்பெயினிலுள்ள சாண்டியாகோ-டி-கம்போஸ்டெலா போன்ற மற்ற நகரங்களைப் போலவே ரோம் நகரமும் ஒரு புனித பூமியாக இருந்துவந்தது. அங்கு பல்

### பழைய நகர் அவிலா (ஸ்பெயின்)

*காஸ்டிலியர்கள் "புனிதர்கள் மற்றும் கற்களின் நகர்" என்றழைத்த அவிலா நகரைக் கெல்ட்டிக் குலத்தவர் நிறுவினர். பிறகு ரோமானியரின் புறக்காவல் நகராக இருந்த இந்நகரை விசிகாத் இனத்தவர் கைப்பற்றினர். முதலாம் நூற்றாண்டில் புனித செகுண்டோ அதைக் கிறிஸ்தவ நகராக்கி அதன் முதல் சமயத் தலைவரானார். 8-11ஆம் நூற்றாண்டுகளில் அது முஸ்லிம் நகராக இருந்தது. 1090இல் காஸ்டிலிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபின் அந்நகரைச் சுற்றி கல் அரண்கள் கட்டப்பெற்றன. இந்த 2.5 கி.மீ. நீளமுள்ள மதிலும் அதிலுள்ள 80 அரைவட்ட கோட்டைகளும், 9 பெரிய வாயில்களும் இன்றும் உள்ளன (ஒளிப்படம் பார்க்க). அவிலாவில் பல சமயக் கட்டிடங்கள் உள்ளன. குறிப்பாக (12-13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த) காத்திக் பேராலயப் பாடற்குழுப் பகுதிக்கு மேலுள்ள இடைவெளிகளுள்ள அரண் அந்நகர் ஓர் அரண் காப்பாக இருந்ததைக் காட்டுகிறது. ஸ்பானியக் கன்னித் துறவியும் மறைஞானியுமான புனித அவிலா தெரசாவின் (1515-1582) வீட்டுப் பகுதியில மனிதாவதாரக் கன்னிமடம் கட்டப்பெற்றது. சிலவற்றை எழுதினார்- நகருக்கு வெளியிலும் கோயில்களுள்ள பழைய நகரான அவிலா 1985இல் உலக மரபுச்செல்வப் பட்டியயில் இடம்பெற்றது.*

படிப்பகம்

www.padippakam.com

### வரலாற்றுச் சிறப்புள்ள கிராக்கோ (போலந்து)


விஸ்டுலா ஆற்றங்கரையிலுள்ள வேவல் மலையில் பழைய நகராக கிராக்கோ அமைந்துள்ளது. மேற்கு ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமிடையேயுள்ள வாணிகப் பாதையிலுள்ள கிராக்கோ 14 முதல் 16ஆம் நூற்றாண்டு வரை போலந்தின் செழிப்பான தலைநகராக இருந்தது. முன்னால் காத்திக் கலையியல்புடைய அரசகோட்டை 16ஆம் நூற்றாண்டில் இத்தாலிய இயல்பில் மறுமலர்ச்சிக் கால விடாக மாற்றப்பட்டது. ஐரோப்பாவிலே மிகப்பெரிய இடைகாலச் சதுக்கமாகிய அங்காடியில் (14-16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த) பெரிய துணி வணிக மன்றம் இருக்கின்றது. காத்திக் பேராலயத்தில் (வலப்புறம்) போலந்து மன்னர்களின் கல்வறைகள் உள்ளன. மா கசிமீர் 1364இல் நிறுவிய ஜாகிலோனியப் பல்கலைக் கழகம் 14 முதல் 17ஆம் நூற்றாண்டு கிழக்கு ஐரோப்பிய அறிவுத்துறை மையமாக விளங்கியது. புகை போக்குவரத்து அதிர்வு, உப்புநீர் ஆகியவற்றிலிருந்து இதனைக் காப்பதற்காக போலந்து அரசு முயன்று வருகிறது. கிராக்கோ 1978இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

### நெஸ்பார் (பல்கேரியா)

திரேசியர், கிரேக்கர், ரோமானியர், பைசாண்டியர் ஆகியோரின் கலையியல்புகளை நெஸ்பார் நகரில் காணலாம். இது கருங்கடலினுள் நீண்டுள்ள பாறைப் பகுதியிலுள்ளது. ஒரு குறுகிய நிலப் பகுதி இதைக் கரையுடன் இணைக்கின்றது இங்கு திரேசியரான மெனா முதல் குடியேற்றத்தை நிறுவினார் என்பது ஒரு பழங்கதை. ஆகவே முதலில் இது மெனப்ரியா எனப் பெயர் பெற்றது கி.மு. 6ஆம் நூற்றாண்டில் இத்திபகற்பத்தில் மெசம்பிரியா எனும் கிரேக்க குடியேற்றம் நிறுவப்பட்டது. இங்கு ஒரு கிரேக்க மன்றம், அரங்கு, அப்போலா ஆலயம் ஆகியவற்றின் அழிபாடுகளைத் தொல்பொருளாய்வாளர் கண்டனர். இவை ரோமானியர் அங்கு வாழ்ந்தபோது கட்டிய கட்டிடங்களினருகில் உள்ளன. கி.பி. 4ஆம் நூற்றாண்டின் இறுதியில் மெசம்பிரியா பைசாண்டியப் பேரரசின் அரண்காப்பாக விளங்கியது.. 1453இல் துருக்கியர் இதைக் கைப்பற்றினர். 1934இல் நெஸ்பார் எனப் பெயர்பெற்ற இந்நகர், மறைந்த பல நாகரிகங்களுக்குச் சான்று பகரும் அரிய பண்பாட்டுச் செல்வம் என்பதற்காக 1983இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. வலப்புறம்: பான் டோகிரேட்டர் ஆலயம்.



ஒளிப்படம்: ஜுவான் ச. ஃபெர்னாண்டஸ், © இன்காஸ்போ, மாட்ரிட்



ஒளிப்படம்: எஸ். குய்ல் மான்டர் © இன்காஸ்போ, மாட்ரிட்



படிப்பகம்

www.padippakam.com



## அங்கிரா தோ ஹெரோயிஸ்மோ (போர்ச்சுகல்)

அசோரஸில் டெர்செய்ரா தீவிலுள்ள இத்துறைமுகம் 300 ஆண்டுகளாக ஐரோப்பாவையும் ''புதிய உலகை'யும் இணைத்துவந்தது. 15ஆம் நூற்றாண்டிலேயே இது இந்தியத் தீவுகளிலிருந்து ஐரோப்பா திரும்பும் போர்ச்சுக்கீசிய கப்பல்கள் தங்குமிடமாக இருந்தது முற்கால அட்லாண்டிக் மாலுமிகள் தெரிந்தெடுத்த இவ்விடம் காற்றைத் தடுக்கும் மலைகளால் சூழப்பட்டுள்ளது. ஆங்கரேஜை போர்ச்சுக்கீசியர் 'அங்கிரா' என்றதால், இது அப்பெயர் பெற்றது. 1534இல் அந்நகர் அசோரஸ் பேராயரின் தலைமையகமானபின் அங்கு பல புதிய வகை கட்டிடங்கள் கட்டப்பெற்றன சாந்திசிமோ சல்வதோர் பேராலயம், மிசரிகோர்தியா சாந்தோ எஸபேரித்தோ ஆலயங்கள், பிரான்சிஸ்கன், சேசுசபைத் துறவிகள் கட்டிய கன்னிமடங்கள் இவற்றுள் சில 1980இல் இந்நகரைக் குலுக்கிய நிலநடுக்கம் பல பழைய கட்டிடங்களை ஊறுபடுத்தியது. 1983இல் இவ்வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. அது முதல் யுனெஸ்கோ பல வல்லுநர் குழுக்களை அங்கு அனுப்பிவருகின்றது. அவை நகர வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இதைப் பேணுவதற்காகத் திட்டம் வகுக்கத் துணைசெய்கின்றன. இத்திட்டம் நிலநடுக்கத்தினால் ஊறுபட்ட கட்டிடங்களையும் வீடுகளையும் புதுப்பித்து. அதே நேரத்தில் அவற்றின் டெர்செய்ரா கட்டடக் கலையையும் பேணி, நகரின் பழைய தோற்றத்தையும் பாதுகாக்க விழைகின்றது.

இடப்புறம்: ஒரு கட்டிட முகப்பு; கீழே: நகரின் பொதுத் தோற்றம்.



வேறு சமயப்பிரிவுகளுக்குரிய சமயச் சின்னங்கள் இருந்தன. இவற்றின் கட்டிடக் கலையும், இந்நகரின் அமைப்பைப் போலவே, காலந்தோறும் மாறிவந்துள்ளது. உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம பெற்றுள்ள மற்ற நகர்ப்புற மையங்கள், தங்கள் வரலாற்று முக்கியத்துவத்தை வருங்காலத்தில்தான் உருவாக்கிக் கொள்ளவேண்டும். இவற்றுள் குறிப்பிடத்தக்கது பிராசிலியா. இது 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தலைநகர்கள் அனைத்திலும் மிகச் சிறந்த முறையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டது என்பர்.

இறுதியாக, உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பண்பாட்டு மனைகள் அனைத்தும், கடந்தகால உலகை, எதிர்கால உலகுடன் இணைக்கும் பாலமாக விளங்குகின்றன.

---

**ஜார்ஜ் மிச்செல்** ஆஸ்திரேலியர்; இந்துக் கோயில் கட்டடக் கலை வல்லுநரான தொல்பொருளாய்வாளர். தி இஸ்லாமிக் ஹெரிட்டேஜ் ஆஃப் பெங்கால்'' (யுனெஸ்கோ, 1984) ''ஆர்க்கிடெக்சர் ஆஃப் தி இஸ்லாமிக் வோர்ல்டு'', ''தி பெங்குவின் கைடு டு தி மான்யுமெண்ட்ஸ் ஆஃப் இண்டியா'' போன்ற பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வந்துள்ளனர். இப்போது தென்னிந்தியாவிலுள்ள விஜயநகரில் ஆவணத் தொகுப்புத் திட்டத்தின் இணை இயக்குநராக இருக்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



ஓலக் கிராபர்

# புனித இடங்கள் பேணும் பண்புநெறிகள்

உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம் பெற்றுள்ள பல பண்பாட்டுச் செல்வங்கள் சமயக் கட்டிடங்களாகும். அவை நார்வேயிலுள்ள ஒரு சிறிய இடைக் கால மரக்கோயிலிலிருந்து இலங்கையிலுள்ள ஒரு புனித நகர் வரை பல் வேறு அளவுள்ளவை. சில வரலாற்றுச் சிறப்புள்ள நகரின் மையத்திலுள்ளன; வேறு சில ஒதுங்கிய கிராமங்களிலுள்ளன. இக்கட்டிடங்கள் தம் வேற்றுமையையும் விஞ்சும் பொதுவான பண்புநெறிகளால் இணைக்கப்பட்டுள்ளனவா? இன்னும் பயன்பட்டுவரும் சமயக் கட்டிடங்களின் சிறப்பை அங்கு வழிபடுவோர் மட்டும்தாம் உணர முடியுமா? நெடுங்காலத்திற்கு முன் மறைந்துவிட்ட சமயங்களின் ஆலயங்களையும் புனிதக் கட்டிடங்களையும் எவ்வாறு விளக்குவது? இக்கட்டுரையில் ஓர் அமெரிக்க அறிஞர் சமயக் கட்டிடங்களும் அவற்றின் பாதுகாப்பும் எழுப்பும் இச்சிக்கலான கேள்விகளை ஆராய்கின்றார்.

சில சமயச் சின்னங்களுக்குள்ள பெருமை அவற்றுக்கு மட்டுமே உரிய தனித்தன்மை வாய்ந்தவை. இந்தப் பெருமைகளில், ஆன்மிக, அழகியல், பண்பாட்டுப் பெருமைகள் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், இவை ஒவ்வொன்றும் இந்தச் சமயச் சின்னங்களைப் பார்க்கவும், அவற்றை அறிந்துகொள்ளவும் விரும்புகிறவர்களுக்கு அவற்றை விளக்கிக்கூறும் வழிமுறைகளைப் பாதிக்கிறது.

சமயச் சின்னங்கள் தொடர்பான ஆன்மிகச் சிறப்புகளைப் பற்றிப் பேசுவது, கூறியது கூறல் போன்றதாகாது. பண்டைய அண்மைக் கிழக்கிலிருந்த அல்லது தொல்பழங் கிரேக்க ரோமர் மாட்சிமைக் காலத்திலிருந்த மறைந்துபோன சமயங்களைச் சார்ந்த நினைவுச் சின்னங்களின் செயல்முறையான அல்லது தத்துவமுறையான அம்சங்களைப் புரிந்துகொள்வது எப்போதும் எளிதாக இராது. ஒரு பண்டைய எகிப்தியக் கோயிலின் தெய்விகச் சேய்மையினை உணர்ந்துகொள்வதற்கு, இந்த நினைவுச் சின்னங்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்து, மனித வாழ்விலிருந்து மறைந்துவிட்ட சடங்குகள், அருள் முறையீடுகள், கொள்கைகள், நம்பிக்கைகள் ஆகியவை குறித்து அறிந்துகொள்வது அவசியம்.

ஆன்மிகச் சிறப்பியல்புகள் பரிமாற்றம் செய்யத்தக்கவையும் அல்ல. புத்த ஆன்மிகத்தின் அடிப்படையில் ஒரு முஸ்லிம் புனித இடத்தை விளக்கிக் கூற முயல்வது அறிவுக்கு உகந்ததுமன்று; அறநெறிக்கு ஏற்றதுமன்று. கிரீசிலுள்ள டெல்ஃபி, தென்அமெரிக்காவிலுள்ள இயேசு சங்கக் கிராமங்கள் போன்ற வெவ்வேறு மனைகளை புரிந்துகொள்வதற்கு மிகவும் வேறுபட்ட ஆன்மிக அணுகுமுறைகள் தேவை.

ஒரு சமய நினைவுச் சின்னத்தின் ஆன்மிக ஒருமைப்பாடும், அதனைப் பற்றி அளிக்கப்படும் தகவல்கள் மூலம் அதன் வெளிப்பாடும் இங்கு விவாதத்திற்குரியனவாகும். கைவிட்டப்பட்ட சமயங்களைப் பொறுத்தவரையில் இத்தகைய தகவல்கள் இன்றியமையாத தேவை என்பதில் ஐயமில்லை. எனினும், வாழும் சமயங்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக நினைவுச் சின்னமும் உயிர் வாழும்போது, இந்தத் தேவை இன்னும் அதிகமாகிறது. இஸ்தான்புல்லிலுள்ள ஹாகியா சோஃபியா என்ற சின்னம் முதலில் அரச குடும்பத்தினரின் தேவாலயமாகக் கட்டப்பட்டது. பின்னர் அது ஒரு மசூதியாக மாற்றப்பட்டது. இப்போது ஒரு அருங்காட்சியகமாக இருந்து வருகிறது. இது போன்ற கட்டிடங்களுக்குக் கிறித்தவ ஆன்மிகத்தைச் சேர்ப்பதா? முஸ்லிம் ஆன்மிகத்தை இணைப்பதா? கோட்பாட்டில் முற்றிலும் வேறுபட்ட ஆன்மிகங்களை ஒரே சின்னத்திற்கு இணைத்துக்கூற இயலுமா? அதே சமயம், சமயக் கட்டிடங்கள் அனைத்தும், அவை சார்ந்துள்ள சமயத்தின் ஆன்மிகத்தை மட்டுமே வெளிப்படுத்துபவை என்று வரையறுத்துவிட முடியுமா? இந்த வினாக்கள் அனைத்தும், ஆன்மிக உடைமைகளின் அறிவியல் அம்சங்கள் குறித்த அடிப்படைச் சிக்கல்களை எழுப்புகின்றன. இந்தச் சிக்கல்கள் எனக்குத் தெரிந்தவரையில் இதுவரை விவாதிக்கப்படவில்லை.

அறவியல் சிறப்பியல்புகளை மட்டுமே கவனத்தில் கொண்டால் நாம் ஓரளவுக்கு ஏமாற்றமடையாமல் இருக்கலாம். ஏனெனில், ஒரு நினைவுச் சின்னத்தின் அழகியல் அம்சங்கள் குறித்து எளிதாக ஓர் உடன்பாட்டுக்கு வந்துவிடலாம். நினைவுக்கெட்டாத காலந்தொட்டே மனிதகுலத்தின் கலைப் பாரம்பரியம், மக்களின் பக்தி, நம்பிக்கைகள் ஆகியவற்றிலிருந்தே தோன்றியிருக்கிறது. பல்வேறு காலங்களில் தலைசிறந்த கலைஞர்கள், சமயச் சின்னங்களை உருவாக்கியிருக்கிறார்கள்; அல்லது அழகுபடுத்தியிருக்கிறார்கள். அழகியல் தரம்பற்றிய வரயறைகள் காலந்தோறும் மாறி வந்திருக்கின்றன. இந்த வரையறைகளைக் கொண்டு மட்டுமே அவ்வக் காலத்திய நினைவுச் சின்னங்களின் அழகியல் சிறப்பினை மதிப்பிட்டுவிட முடியாது. இந்தச் சின்னங்கள் எழுந்த காலத்தைப் பற்றி நேரடியாக நனகு அறிந்துகொள்வதன் மூலமே அழகியலைக் கணித்திட இயலும். ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்கியவர்கள் அதனை அவர்களது சந்ததியினர் போற்றிப் புகழவேண்டும் என்ற எண்ணத்தில் மிக உயர்ந்த தரத்துடனேயே அதனைக் கட்டியிருப்பார்கள்.

சமயக் கலைப்படைப்புகளிடையே ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிய முனையும்போது இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. உதாரணமாக, அனைத்துச் சமயங்களுமே ஏதேனுமொரு காலத்தில் கலையும் சமய நம்பிக்கையும் சகவாழ்வு நடத்தமுடியுமா என்ற வினாவை எழுப்பியிருக்கின்றன. இதற்கு வேறுபட்ட விடைகள் கூறப்பட்டுள்ளன. கிறித்தவத்தின் அல்லது புத்த சமயத்தின் கொள்கை

(தொடர்ச்சி 31ஆம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: ஜே.எம். ரேபரோ © இன்காஸ்போ, மாட்ரிட்

## மசூதி நகரான பாகர்ஹாத் (வங்காள தேசம்)

முன்னால் கலிஃபாத்தா பாத் எனப்பட்ட இந்நகரை 15ஆம் நூற்றாண்டில் வங்காள வளைகுடாவின் கரையருகிலுள்ள உலகின் மா பெரும் வடிகால் பகுதியின் தென் பகுதியில் தளபதி உலுக்கான் ஜஹான் நிறுவினார். கடவுட்பற்றுள்ள இத்தளபதி செங்கல்லில் மசூதிகளும், மாளிகைகளும், பொதுக் கட்டிடங்களும், பாலங்களும், கல்லறை மாடங்களும் கட்டினார்; உப்புநீருள்ள இப்பகுதிக்குத்தேவையான நன்னீர்த் தேக்கங்கள் மக்களுக்குப் பெரிதும் உதவின. பாகர்ஹாத் நகரின் அரிய அழிபாடுகளில் டில்லிப் பேரரசின் கட்டிடக் கலையும் முஸ்லிம் வங்காளக் கலையும் கலந்துள்ளன. மசூதிகள் எளிய அமைப்புடையன. ஷையதுகும்பாத் மசூதி இதற்கோர் எடுத்துக்காட்டு (வலப்புறம்) அதில் 77 கவிகை மாடங்களும் 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள மாபெரும் தொழுகை மன்றமும் உள்ளன. 1985இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இப்பகுதியை பருவமழை, பரவிவரும் செடிகள், மண்ணின் உப்புத்தன்மை, கட்டிடங்களையும் அவற்றின அடிப்படைகளையும் அரித்துவரும் காற்று ஆகியவை ஊறுபடுத்துகின்றன. 1985இல் யுனெஸ்கோ பாகர்ஹாத்தையும், வங்காள தேசத்திலுள்ள மற்றொரு உலக மரபுச்செல்வப் பகுதியான மஹார் பூரையும் பாதுகாக்கும் முயற்சியைத் தொடங்கியது. கட்டிடங்களின் வலுக்குறைந்த பகுதிகளை வலுப்படுத்துதலும், மழைநீர் உள்ளே கசிவதைத் தடுக்கும் வடிகால் அமைத்தலும், மக்கள் ஊறுபாடு செய்வதைத் தடுத்தலும் யுனெஸ்கோவின் தலையாய பணிகளாகும்.

## புனித கால் கன்னிமடம் (சுவிட்சர்லாந்து)

7ஆம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டுத் துறவியான காலஸ் தம் மடாலயத்தை நிறுவியிருந்த ஸ்டைனாக் நதிப் பள்ளத்தாக்கில் ஆட்மர் எனும் துறவி 747இல் பெனடிக்ட் சபை மடாலயத்தையும் ஒரு பள்ளிக்கூடத்தையும் நிறுவினார். 9, 10ஆம் நூற்றாண்டுகளில் புனித கால் மடம் ஐரோப்பாவின் முக்கிய பண்பாட்டு மையமானது. மடத்தலைவர் கோஸ்பெர்ட் காலத்தில் 9ஆம் நூற்றாண்டில்அம்மடம் உயர்புகழ் பெற்றது.அப்போது புதிய கரோலிஞ்சிய கட்டடக்கலைக்கேற்ப அது புதுப்பிக்கப்பட்டது. இன்று இக்கரோலிஞ்சிய மடாலயத்தில் எஞ்சியிருப்பதெல்லாம் அடிப்படைகளும், 1960களில் நடைபெற்ற அகழாய்வுகளின்போது கிடைத்த கட்டடப்பகுதிகளும்தாம். 16, 18ஆம் நூற்றாண்டுகளில் திரும்பவும் கட்டப்பெற்ற இம்மடாலயத்தில் புதிய கலையியல்புள்ள அரிய பேராலயமும் (மேலே) நூலகமும் உள்ளன. ஐரோப்பிய அறிவு, மற்றும் சமய வாழ்க்கை வரலாற்றின் முக்கிய நிலையைக் காட்டும் புனித கால் மடம் 1983இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.


## குவாரானிகளிடையே சேசுசபை துறவிகள் (அர்ஜெண்டினா, பிரேசில்)

குவாரானி இந்தியரைக் கிறிஸ்தவராக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக 17, 18ஆம் நூற்றாண்டுகளில் லத்தின் அமெரிக்காவிலிருந்த ஸ்பானிய சேசுசபைத் துறவிகள் இந்தியரை ஒன்றுசேர்த்து சமயக் கல்வி அளிக்கும் கிராமங்களை உருவாக்கினர். பிரேசிலுள்ளசாவ் மிகேல் தா மிசோஸ், அர்ஜெண்டினாவிலுள்ள சான் இஞ்ஞாசியோ மினி, சாந்தா ஆனா, நியூஸ்த்ரா செனோரா தெ லொரத்தோ சாந்தா மரியா லா மேயோர் ஆகிய இந்த 5 சேசுசபை மடங்களும் 1983, 1984இல் உலக மரபுச் செல்வப்பட்டியலில் இடம்பெற்றன. இவை எல்லாம் புதிய கலையியல்பில் கட்டப்பெற்றன. அங்கு ஆலயம், சேசு சபைக் குருக்களின் இல்லம், பள்ளி, இந்தியரின் இல்லங்கள், கல்லறை எல்லாம் பெரிய சதுக்கத்தைச் சுற்றி இருந்தன. பல ஆண்டுகளாக அர்ஜெண்டினாவும் பிரேசிலும் துறவி மடங்களை ஆராய்ந்து புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தன. அர்ஜெண்டினாவில் ஆய்வுகள், நிலப்படம் தயாரித்தல் ஆகிய பணிகள் சாந்தா ஆனாவில் நடைபெற்றன. சான் இஞ்ஞாசியோவில் சுற்றுலா வசதிகள் சீர்படுத்தப்பெற்றன. சேசுசபை மடங்களைப் பேணும் பெரும் பன்னாட்டு முயற்சியை யுனெஸ்கோ விரைவில் தொடங்கும். கட்டிடங்களைப் பேணும் வழிகள் பற்றி அறிவுரைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகின்றன. வருங்காலத் திட்டத்தை வகுக்கும் கூட்டங்களுக்கு நிதியுதவியளிப்பதுடன், அப்பகுதிக் கட்டிடப் பட்டியலைத் தயாரித்தும் சிறு நூலையும், திரைப்படத்தையும் தயாரித்தும் யுனெஸ்கோ பணியாற்றியுள்ளது. வலப்புறம்; சாவ் மிசோஸ் (பிரேசில்) ஆலயமும, சான் இஞ்ஞாசியோ மினியின் (அர்ஜெண்டினா) முகப்பிலுள்ள ஒரு பகுதியும்.




படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம்: எல். ருய்ஸ் பாஸ்டர் © இன்காஃபோ, மாட்ரிட்



ஒளிப்படம்: யுனெஸ்கோ/ஜே. ஹார்ட்லி



ஒளிப்படம்: யுனெஸ்கோ



ஒளிப்படம்: எஃப். எஃப். ஓர்ட்டிஸ் யுனெஸ்கோ

படிப்பகம்

www.padippakam.com





## ஃபோந்தனே சிஸ்டெர்சிய மடாலயம் (ஃபிரான்ஸ்)

வட பர்கண்டியிலுள்ள ஃபோந்தனே 1119இல் அக்காலத்தில் ஆற்றல்மிக்கவரான கிளேர்வோ நகர பேர்னார்டால் நிறுவப்பட்டது. புனித பெர்னார்டு சிஸ்டர்சிய சபையில் சேர்ந்தார். மேல்நாட்டு மடாலயங்களில் எளிமையையும் தவத்தையும் புதுப்பிக்க விரும்பிய ஒரு சீர்திருத்தவாதி அச்சபையை நிறுவினார். சிஸ்டர்சிய மடாலயங்களில் சிந்தனையைச் சிதறடிக்கும் ஓவியமும், எழில் சிற்பங்களும், எல்லா வகை அலங்காரமும் தடை செய்யப்பட்டிருந்தன ஃபோந்தனேயிலுள்ள ஆலயம் 1139-1147இல் கட்டப்பெற்றது. அதன் பக்கப்பகுதியில் கோபுரம் இல்லை. ஆலயம் கட்டப்பெற்ற போதே கட்டப்பெற்ற மடங்களும் குருக்கள் கூடுமிடமும் தவிர, குளிர்காயும் அறை, உணவருந்தும் அறை, நீண்ட அழகிய வளைவுகளுள்ள வரவேற்பறை, படுக்கையறை ஆகியவையும் இன்னும் உள்ளன. படுக்கையறையின் மரப்பொருள்கள் 15ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டன. அதன் பிறகு அவை பழுதடையவில்லை. உலைக்களம் (1180) ஐரோப்பாவிலுள்ள மிகப் பண்டைய தொழிற்கூடங்களுள் ஒன்றாகும். 18ஆம் நூற்றாண்டில் கைவிடப்பட்டு பிறகு விற்கப்பட்ட மடாலயம் அதிகமாக அழிபடவில்லை. 1902இல் அங்கு எல்லா அலுவல்களும் நின்றுவிட்டன. 4 ஆண்டுகள் கழித்து அதன் புதிய உரிமையாளர் அதைப் புதுப்பிக்கத் தொடங்கினார். அதில் வெற்றி பெற்றார். இன்று அம்மடாலயம் 1981இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்றது.

## திவ்ரிகியிலுள்ள பெரிய மசூதியும் மருத்துவமனையும் (துருக்கி)

கிழக்கு அனட்டோலியாவின் மலைப்பகுதியிலுள்ள கட்டிடத் தொகுதியை 1228-1229இல் துருக்கிய மெங்குஸ்கித் வம்சத்தைச் சேர்ந்த ஆளுநர் அஹமது ஷா நிறுவினார். பெரிய மசூதியில் 5 நடுக்கூடங்களும் கல் வளைவுகளும் உள்ளன. இவ்வளைவுகள் தொழில்நுட்பத் திறனையும் இடவெளி அமைப்பையும் காட்டுகின்றன. தொழுகை அறைக்குமேல் வெவ்வேறு அளவிலுள்ள இரு கவிகை மாடங்களுள்ளன. ஒன்று உட கழுவும் நீர்நிலைக்கு மேலுள்ளது. மற்ற முக்கிய குவிமாடம் மெக்காவின் திசை நோக்கியுள்ள அலங்கார மாடத்தின் மேலுள்ளது. (இடப்புறம்). இவற்றிலுள்ள பூ, பிறவடிவியல் வேலைப் பாடுகள் அக்கால அர்மீனிய அல்லது ஜார்ஜிய வடிவங்களை நினைவூட்டுகின்றன. இம்மசூதியும் மருத்துவமனையும் 1985இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றன.

படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் பி. ஸ்ட்ருகர் © இன்காஃபோ, மாட்ரிட்

**ஸ்டுடென்சியா மடாலயம்**
**(யூகோஸ்லாவியா)**

1183இல் செர்பிய அரசர் ஸ்டெஃபன், நெமாஞ்சா நிறுவிய இந்த ஸ்டுடென்சியா மடாலயத்தை அவருடைய புத்திரர்கள் வளர்த்தனர். இது நெமாஞ்சிய வம்சத்தின் இடுகாடாகி, பல நூற்றாண்டுகளாக செர்பிய வரலாற்றின் மையமாக இருந்தது. அம்மடாலயத்தினுள் ஆலயம் உட்பட பல கருவறைகளும் கட்டப்பெற்றன. அவற்றை இடைக்காலக் கிறிஸ்தவக் கலைஞர்கள் அழகிய பளிங்குச் சிற்பங்களாலும், எழிலார்ந்த சுவரோவியங்களாலும் அலங்கரித்தனர். புனித அன்னாள் மற்றும் புனித ஜோக்கியின் புகழ்மிகு அரசர் ஆலயத்திலுள்ள ''கன்னிமரியின் பிறப்பு'' (மேலே) எனும் சுவரோவியம் 1314இல் முடிக்கப்பெற்றது. கன்னிமரி ஆலயத்திலுள்ள ஓவியர்கள் (1208-1209) மனித உணர்வுகளையும். இடத்தையும் புதிய கோணத்தில் காட்டுகின்றன. இவை பைசாண்டிய, மற்றும் மேல்நாட்டு ஓவிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். 13ஆம் நூற்றாண்டு இத்தாலிய ஓவியர்களான சிமாப்யூ, தூசியோ, கியோத்தோ ஆகியோர் இப்புதிய உணர்வைக் காட்டுகின்றனர். 1986இல் உலக மரபுச்செல்வப் பட்டியலில் இடம்பெற்ற இம்மடாலயம் நன்கு பேணப்பட்டுள்ளது. ஆயினும், அதனருகில் ஓர் அணைகட்டி ஸ்டுடென்சியா ஆற்றின் போக்கை மாற்றும் திட்டத்தைப்பற்றி அதிகாரிகள் கவலைப்படுகின்றனர். 1988 இலையுதிர் காலத்தில் யுனெஸ்கோ வல்லுநர்கள் அங்கு சென்று இத்திட்டத்தின் விளைவுகள்பற்றி ஆராய்வார்கள்.

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறாக இருந்துள்ளன. ஆனால், இஸ்லாம் அல்லது யூத சமயத்தின் கொள்கை பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே இருந்து வந்திருக்கிறது.

இந்தக் கொள்கை மாறுபாடுகள், காட்சிப் படைப்பாற்றலுக்கு வெவ்வேறான முக்கியத்துவத்தையும் அணுகுமுறைகளையும் அளித்து வந்துள்ளன. எல்லாச் சமயங்களுமே, கூட்டு வழிபாட்டுக்கும், தனி வழிபாட்டுக்கும் நெறிமுறைகளைக் கொண்டிருக்கின்றன. இதனால், இஸ்லாமியம் மிகப் பெரிய கூட்டு வழிபாட்டு மசூதிகளை எழுப்பியுள்ளது. அதேசமயம், தனிநபர்களின் தனிமை வழிபாட்டுக்கான தொழுகைக் கூடங்களும், வழிபாட்டு இல்லங்களும், பீடங்களும் கட்டப்பட்டிருக்கின்றன.

அழகியல் மற்றும் ஆன்மிக அம்சங்கள் பற்றிய இந்த ஆராய்ச்சி நம்மை நேரடியாக மூன்றாம் வகையைச் சேர்ந்த பண்பாட்டு அம்சங்கள்பற்றிய ஆராய்ச்சிக்கு இட்டுச்செல்கிறது. தனிநபர்களின் அல்லது ஒரு குழுமத்தினரின் கடந்த காலம் பற்றிய தன்னுணர்வினைத் தூண்டி வலுப்படுத்தக்கூடிய அம்சங்களையே இங்கு பண்பாட்டு அம்சங்கள் என்கிறோம்.

ஒருவரின் தற்பண்பினை வரையறுப்பதில், அவருடைய தோற்றம் பற்றிய தகவல் ஓர் இன்றியமையாத அம்சமாகும். எனவே, இலக்கியங்கள், மரபுகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படும் சமய நம்பிக்கைகள் ஒவ்வொருவருடைய பாரம்பரியத்தின் ஓர் அங்கம் என்பதில் ஐயமில்லை. எனினும், வரலாற்றின் விசித்திரப் போக்குகளின் போது, சில இனங்களுக்கு அல்லது தேசியக் குழுமங்களுக்கு, தங்களின் சொந்தச் சமயத்தைச் சாராத வேறு நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் ஏற்பட்டிருக்கிறது. அப்படி வேற்றுச் சமயத்தவரால் பாதுகாக்கப்பட்ட பிற சமயச் சின்னங்களுக்கு எத்தகைய சமய விளக்கங்கள் கொடுப்பது என்ற இக்கட்டான சிக்கலும் தோன்றுகிறது.

இந்தச் சிக்கல் அண்மைக்காலத்தில்தான் தோன்றியுள்ளது. ஏனெனில் பண்டைக்காலத்தில், புதிய சமயங்கள் அல்லது புதிய அரசுகள், பழைய சமயங்களின் சின்னங்களைத் தயக்கமின்றி அடியோடு அழித்துவிட்டன; அல்லது அவற்றைத் தங்கள் சமயத்திற்கு ஏற்றபடி மாற்றியமைத்துக் கொண்டன. எகிப்திலிருந்த பண்டையக் கோயிலும், ரோமிலிருந்த பாந்தியன் கோயிலும் தேவாலயங்களாக மாற்றப்பட்டன. இஸ்தான்புல்லிலிருந்த ஹாகியா சோஃபியா என்ற தேவாலயம் மசூதியாக மாற்றப்பட்டது.

இன்று நாம் வேற்றுமையில் ஒற்றுமையுடன் வாழ முற்பட்டிருக்கிறோம். மாற்றுச் சமயங்களையும், பண்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு அவற்றுடன் சகவாழ்வு நடத்த முனைந்திருக்கிறோம். எல்லா நினைவுச் சின்னங்களிலும் ஒருமைப்பாடு இழையோடுவதை இன்று நாம் காண்கின்றோம். இந்த ஒருமைப்பாட்டினைப் பேணிக் காக்கக் காப்பாளர்கள், கல்வியாளர்கள் பாடுபட்டு வருகிறார்கள். ஒரு சமயச் சின்னத்தைப் பாதுகாப்பதால் இன்னொரு சமயத்தவரின் கோயிலின் முக்கியத்துவம் பறிபோய் விடும் என்று யாரும் எண்ணவில்லை. அந்தச் சின்னத்தின் அழகியல் வேலைப்பாடுகளை அனைவரும் உணர்ந்து போற்றுகிறார்கள்.

சமயச் சின்னங்கள் அனைத்தும் எளிதில் அணுகத் தக்கவையாகவும், எல்லோருக்கும் பயன்தருவனவாகவும் விளங்கவேண்டும் என்பதை உணரச் செய்வதற்குக் கனிசமான அறிவூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளும் போது இங்கு எழுப்பிய வினாக்களுக்கு விடை கிடைத்துவிடும். இந்த அறிவூட்டுதல் வெறுந் தகவல்களை அளிப்பதாக மட்டும் இருக்கலாகாது. அனைத்துச் சமய நம்பிக்கைகளையும் மதித்துப் போற்றி, அனைத்துக் கலைஞர்களின் பண்டையப் படைப்புகளையும் பெருமைக்குரியனவாகக் கருதி, அவற்றின் அழகியலை உணர்வுபூர்வமாகப் பாராட்டும் மனப்பான்மையை உருவாக்குவதாக இந்த அறிவூட்டுதல் அமையவேண்டும்.

தமிழில்: இரா. நடராசன்.

**ஓலக் கிராபர்:** அமெரிக்கர்; புகழ்மிகு கலை வரலாற்றறிஞர்; 1980 முதல் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய ஓவியம், மற்றும் கட்டடக்கலை ஆகாகான் பேராசிரியராக இருக்கிறார். அங்கு 1977 முதல் 1982 வரை நுண்கலைத் துறைத் தலைவராக இருந்தார்; 1978-1987இல் ஆகாகான் கட்டிடக்கலைப் பரிசுக் குழுவின் உறுப்பினராக இருந்தார்; 1978 முதல் அமெரிக்க கலை, அறிவியல் கழக உறுப்பினராக இருக்கிறார்; அண்மையில் பிரிட்டிஷ் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இஸ்லாமிய-ஓவியம், கட்டடக்கலை பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார். ''இஸ்லாமிக் ஆர்ட் அன்டில் 1260'' (காலஞ்சென்ற ஆர். எட்டிங் கோசனுடன் சேர்ந்து எழுதிய நூல்), பெலிக்கான், லண்டன் 1987 இவருடைய அண்மை நூல்.



படிப்பகம்

www.padippakam.com

# உலக மரபுச்செல்வம் எனும் கருத்து

மிஷெல் பாரந்த்

"உலகப் பாரம்பரியப் பட்டியல்" என்பதை வெறும் ஏட்டுச் சுரைக்காய் என்று புறக்கணித்துவிட இயலாது. உலகிலுள்ள பண்பாட்டு மற்றும் இயற்கைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக வகுக்கப்பட்ட சட்டமுறையான, தொழில்நுட்பம் சார்ந்த, நடைமுறையில் இயன்ற திட்டங்களின் ஒரு பன்னாட்டளவுத் தொகுப்பே இப்பட்டியல் ஆகும்.

வளர்ச்சிக் குறைபாடு அல்லது தவறான வளர்ச்சி முறை காரணமாக இந்தப் பாரம்பரியம் இடையறாத ஆபத்துக்குள்ளாகியுள்ளது. மறைந்துபோன பண்பாடுகளின் சுவடுகளையும், வாழும் பண்பாடுகளின் வளமான சின்னங்களையும் பேணிக்காப்பதற்கும், வாழும் உயிரினங்கள் அற்றுப்போகாமல் காப்பதற்கும், இயற்கை வளங்கள் குன்றிவிடாமல் புதுப்பிப்பதற்கும், உயிரினமண்டலத்துச் சமநிலையைப் பேணுவதற்கும் பன்னாட்டு ஒத்துழைப்பு இன்றியமையாது தேவை. இந்த முயற்சியின் முன்னோடியாக விளங்குவதுதான் 1972 உடன்படிக்கையின் செயலாக்கமாகும்.

உலகளாவிய பெருமதிப்புடைய உடைமைகளின் பட்டியலைத் தயாரிப்பது கிளர்ச்சியூட்டும் முயற்சியாகும் எனினும், இதற்குப் பாரம்பரியம் பற்றிய ஒரு வரன்முறை தேவைப்படுகிறது. ஏனெனில், இன்றைய அறிவியல் முன்னேற்றத்தினாலும், வரலாறு மற்றும் பண்பாடு பற்றிய கோட்பாடுகளின் விரிவாக்கத்தினாலும், பாரம்பரியத்தில் அனைத்தையுமே உள்ளடக்கத் தோன்றுகிறது. ஒவ்வொன்றுமே வரலாற்றுக்குச் சொந்தம்; இயற்கை முழுவதும், மனிதனின் கலைப் பொருள்கள் அனைத்தும் கைவினைகள் எல்லாம் ஆய்வுக்குரியவை என்பது உண்மைதான். ஆனால், இந்த உலகம் மிக விரைவாக மாறி வருகிறது; உண்மையான பாரம்பரியச் சுவடுகளுக்கு உரிய தனி முக்கியத்துவம் அளிக்கத் தவறினால், அவற்றையுங்கூட மாறுதல் வெள்ளம் அடித்துச் சென்றுவிடும்.

உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் அருங்கலைச் சின்னங்கள், பேணிக்காப்பதற்குத் தகுதியுடையவை மட்டுமல்ல. சுற்றுப்புறச்சூழல் முழுவதையும் பாதுகாப்பதற்காகத் தேசிய அல்லது உள்ளூர் அளவில் கொள்கைகளை வகுப்பதற்கு உதவக்கூடியவை என்ற அடிப்படையிலும் இந்தத் தேர்வு நடைபெறுகிறது. இவ்வாறு, இந்த உடன்படிக்கையின் நோக்கம் குறிக்கோள் சார்ந்ததாகவும் நம்பகமானதாகவும் அமைந்துள்ளது. எதிர்பாராத இயற்கை உற்பாதங்களிலிருந்து இந்தப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்கு இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் குறிப்பிட்ட உதவிகள் அளிக்க இந்த உடன்படிக்கை வழிசெய்கிறது. மிகவும் முன்னேறியதாகவும், மிக உயர்ந்த சாதனங்களைக் கொண்டதாகவும் விளங்கும் நாடுகூட இயற்கை உற்பாதங்களை முன்னறிய முடியாதாகையால் அதற்குங்கூட இந்த உதவி கிடைக்கிறது.

எல்லா நாடுகளிலுமே போற்றத்தக்க பண்பாட்டு மற்றும் இயற்கைப் பாரம்பரியங்கள் உண்டு. இந்த உடன்படிக்கையின் தரப்பினராகவுள்ள 102 நாடுகளில் பெரும்பாலானவை, உலகப் பாரம்பரியக் குழுவிடம் தங்கள் பாரம்பரியங்கள்பற்றிய ஆவணங்களை அளித்து, அவற்றுள் பல சின்னங்களை இப்பட்டியலில் சேர்த்திடச் செய்திருக்கின்றன. எல்லா நாடுகளும் இதை ஏன் செய்யவில்லை? இந்த உடன்படிக்கையில் 102 நாடுகள் மட்டுமே கையெழுத்திட்டிருப்பது ஏன்? 1972 உடன்படிக்கை ஒருமனதான உலகளாவிய ஆதரவினை ஏன் பெறவில்லை? இந்த வினாக்கள் இங்கு எழலாம். பன்னாட்டு ஒத்துழைப்புக்கான துறைகளை வரையறுப்பதற்கு தரப்பு நாடுகளும், யுனெஸ்கோவும், நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் மனைகள் பாதுகாப்புக்கான பன்னாட்டு மன்றமும் மேற்கொண்ட கூட்டு முயற்சிகள், நாட்டுப்படங்களில் காணப்படும் வெற்றிடங்களினால் தோல்வியுறுகின்றன.

நாடுகளின் வடிவளவு, மக்கள் அடர்த்தி, அவற்றின் பண்பாட்டின் தொன்மை, அவற்றின் வரலாற்றில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், தங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அவை செலுத்தி வந்துள்ள கவனம் ஆகியவற்றைப் பொறுத்து, நாடுகளிடையே பெரும் ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. அதேபோன்று, இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள அருங்கலைச் சின்னங்களில், இயற்கைச் சின்னங்களைவிடப் பண்பாட்டுச் சின்னங்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஒரு பண்பாட்டுச் சின்னம், ஒரு சிறிய அல்லது ஒரு தனிக் கட்டிடமாக இருக்கலாம்; அல்லது ஒரு தொல்பொருள் சுவடு ஒரு காட்டின் நடுவே அமைந்திருக்கலாம். ஓர் இயற்கைச் சின்னமானது, சில நாடுகளைவிட மிகப் பெரியதான ஒரு தேசியப் பூங்காவாக இருக்கக்கூடும்.

இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கான துறைகள் படிப்படியாக வரையறுக்கப்பட்டபோது இதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருள் வசதிகள், உலகப் பாரம்பரியக் குழுவின் நிதியாதாரங்களைவிட மிக அதிகமாக இருப்பது தெளிவாகியது. அவசரப் பணிகளைச் செய்தல், நுட்பஆய்வுகள்,

### தாசிலி நாஜர் (அல்ஜீரியா)






தென்கிழக்கு அல்ஜீரியாவில் மத்திய சகாராவிலுள்ள இப்பரந்தமேட்டு நிலம் (பார்பரி மொழியில் 'தாசிலி) 72 000 கி.மீ.² பரப்புள்ளது இது ஒருவகை இயற்கையரண் இதில் ஒரு ஆழப் பிளவுகள் உண்டு. மேற்கில் (சராசரி 1,500 மீ. உயரமுள்ள) இம்மேட்டு நிலம் 700 கி.மீ. நீளமுள்ள 500 மீ. உயரச் சரிவாக முடிகின்றது. உட்பகுதியில் பள்ளத்தாக்குகள் உள்ளன. சிலவற்றில் குளங்களும், ஊற்றுகளும், கரைகளில் மரங்களுள்ள நிலையான ஓடைகளும் உள்ளன. இப்பாலைவனச் சோலைகளில் குவாரக் இனத்தவர் நீண்டகாலமாக வாழ்கின்றனர் குவாரக் நாடோடிகள் மேட்டு நிலத்தில், பிற பகுதிகளில் திரிகின்றனர். அவர்களும் வறட்சியினாலும் தாவர நலிவினாலும் நிலையாகக் குடியேற விழைகின்றனர். இதனால் நுட்பமான சூழல் சமநிலைக்கு ஊறுவிளையக்கூடும். தாசிலி நாஜர் ஆயிரக்கணக்கான பாறை ஓவியங்களுக்கும் பொறிப்புகளுக்கும் புகழ்பெற்றது. இதை உலகின் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய மாபெரும் திறந்தவெளி அருங்காட்சியகம் எனலாம். இப்புதிய கற்காலப் (கி.மு. 6000—2000) பாறைக் கலையும் பிற தொல்பொருள்களும், தாவரங்களும் விலங்குகளும் அங்குவாழ்ந்த குறைவான வறட்சிக் காலத்தில் மக்கள் அப்பகுதியில் வாழ்ந்தனரெனக் காட்டுகின்றன. பண்பாட்டுச் செல்வங்களுக்காகவும் இயற்கைச் சிறப்புக்காகவும் இப்பகுதி உலக மரபுச்செல்வப் பட்டியலில் 1982இல் இடம்பெற்றது. யுனெஸ்கோவின் உதவியுடன் இதைப் பேணும் திட்டம் வகுக்கப்பட்டு வருகின்றது. வலப்புறம்: ட்ஜானட் அருகிலுள்ள டெகார் கார்ட்டில் எருதுகளின் சிற்பம். கீழே வலப்புறம்: எசந்திலேனிலுள்ள புதர்.



படிப்பகம்



ஒளிப்படம் © தில்லோத் ஏ.பி.ஐ., பிர்து


செய்தல், நிதுப பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள நீண்டகாலத் திட்டங்களுக்கு நிதியுதவியளித்தல், அருங்கலைச் சின்னங்கள் மேலும் பதனழிந்து போகாமல் பாதுகாத்தல் போன்ற பணிகளுக்கு மட்டுமே இக்குழுவினால் நிதியுதவியளிக்க முடிந்தது.

உலகப்பாரம்பரியம் பற்றிய தகவல்களைச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் வாயிலாக வெளியிடுவதால், முக்கியமான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் ஊக்கம் கிடைக்கும்.

(தொடர்ச்சி ||| பககம் பார்க்க)

---

**மிஷெல் பாரந்த்** ஃபிரெஞ்சு நாட்டவர்; 1981-1987இல் நினைவுக் கட்டிடங்கள், மற்றும் பகுதிகள்பற்றிய பன்னாட்டு அவைத் தலைவர். உலக மரபுச்செல்வ ஒப்பந்தத்தைத் தீட்டிய குழுவின் உறுப்பினர்; உலக மரபுச்செல்வக் குழுவின் அறிக்கையாளராகவும், பிறகு தலைவராகவும் இருந்தார். இவர் உலக மப்புச்செல்வம் எனும் கருத்து தோன்றி வளர்வதற்குப் பெரிதும் உதவினார்.



ஒளிப்படம் © பூள்குலே



படிப்பகம்

www.padippakam.com

# செயல்படும் கருத்து

## உலக மரபுச்செல்வ ஒப்பந்தமும் அது செயல்படும் வகையும்

**உலகப் பாரம்பரிய இயக்கமுறையில் யார் யார் பங்கு கொள்கிறார்கள்?**

அந்தந்த நாடுகளின் தேசிய நடைமுறைகளையொட்டி, "உலகப் பண்பாட்டு மற்றும் இயற்கைப் பாரம்பரியப் பாதுகாப்புக்கான உடன்படிக்கை"யினை நாடுகள் ஏற்கின்றன அல்லது ஏற்றுமதி செய்கின்றன. இந்த நாடுகள் "தரப்பு நாடுகள்" என அழைக்கப்படுகின்றன. இந்நாடுகள், இந்த உடன்படிக்கையின் இயக்கமுறையில் முழுப் பங்கேற்பாளர்களாகின்றன. இந்த உடன்படிக்கையை யுனெஸ்கோவின் பேரவை 1975 நவம்பரில் ஏற்றுக்கொண்டது; 1975-இல் இது செயலுக்கு வந்தது. அப்போது இதில் 20 நாடுகள் மட்டுமே சேர்ந்திருந்தன. முதன் முதலில் அமெரிக்கா 1978 டிசம்பர் 7இல் இதில் சேர்ந்தது. தொடர்ந்து, எகிப்து, ஈராக், பல்கேரியா, சூடான், அல்ஜீரியா, ஆஸ்திரேலியா, ஸாய்ர், நைஜீரியா, நைஜர், ஈரான், துனீசியா, ஜோர்டான், யூகோஸ்லாவியா, ஈக்குவடார், ஃபிரான்ஸ், கானா, சிரியா, சைப்பிரஸ், சுவிட்சர்லாந்து ஆகிய 18 நாடுகளும் சேர்ந்தன.

1988 ஜூன் 1 அன்று இருந்தபடி, உலகின் அனைத்து மண்டலங்களையும் சேர்ந்த 102 நாடுகள் இதில் சேர்ந்துள்ளன. யுனெஸ்கோவின் மொத்த உறுப்பு நாடுகளில் இன்னும் 58 நாடுகள் மட்டுமே இதில் சேர வேண்டியுள்ளது. இது பன்னாட்டளவில் மிகப் பெரும்பான்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட யுனெஸ்கோ உடன்படிக்கையாக மட்டுமின்றி, பாரம்பரியப் பாதுகாப்பு குறித்துப் பெரும்பான்மையான உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட ஓர் ஆவணமாகவும் விளங்குகிறது. "மனிதகுலம் முழுவதன் பாரம்பரியமும் இந்த உடன்படிக்கையால் பாதுகாக்கப்படவேண்டும்" என்பது இதனை வகுத்தவர்களின் நோக்கமாக இருந்தது. அந்த நாள் வெகு தூரம் இல்லை.

1, இவ்வொப்பந்தம் இடம்பெயராச் செல்வங்களுக்குப் பொருந்தும். ஆகவே பண்பாட்டுச் செல்வம் என்பது "கட்டிடங்கள் கட்டிடத் தொகுதிகள், பகுதிகள்" எனவும், இயற்கைச் செல்வம் என்பது "இயற்கையமைப்பு (இயற்கை, உயிரியல் அமைப்புகள்), புவியமைப்பியல், இயற்கையமைப்பியல், மற்றும் இயற்கைப் பகுதிகள்" எனவும் விளக்கப்படுகின்றன.

இந்த உடன்படிக்கையின் தரப்பு நாடுகளின் பேரவைக்கூட்டம் ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. அதில், 21 உறுப்பினர்கள் உலகப் பாரம்பரியக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த உறுப்பினர்கள் ஆறாண்டுகள் பதவி வகிப்பர். முதலாவது குழு 1976 நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்குழுவின் முதற்கூட்டம் 1977 ஜூனில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செயல்முறைக்கான நெறிகளும், முறைகளும் வகுத்தேற்கப்பட்டன. அடுத்த ஆண்டில், உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்க முதல் 21 அருங்கலைச் சின்னங்களைத் தேர்ந்தெடுத்து இக்குழு செயற்படத் தொடங்கியது. இந்தக் குழுவில் தற்போது இந்தியா, அல்ஜீரியா, ஆஸ்திரேலியா, பிரேசில், பல்கேரியா, கனடா, கியூபா, ஃபிரான்ஸ், கிரீஸ், இத்தாலி, லெபனான், மாளாவி, மெக்சிக்கோ, நார்வே, பாகிஸ்தான், இலங்கை, துனீசியா, துருக்கி, தான்சானியா, அமெரிக்கா, ஏமன் ஆகிய 21 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இக்குழுவின் முடிவுகளைச் செயற்படுத்துவதற்கான செயலக வசதிகளை யுனெஸ்கோவின் பாரம்பரியப் பாதுகாப்புத் திட்ட அதிகாரிகள் வழங்கி வருகிறார்கள். பண்பாட்டு மற்றும் இயற்கைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் பன்னாட்டளவில் தீவிரமாகப் பணியாற்றி வரும் அரசுச் சார்பற்ற அமைவனங்களைச் சேர்ந்த வல்லுநர்கள் உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்கான அருங்கலைச் சின்னங்களைத் தேர்ந்தெடுப்பதில் இக்குழுவிற்கு ஆலோசனைகள் கூறி வருகின்றனர். நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் மனைகளுக்கான பன்னாட்டு மன்றம் (ICOMOS), இயற்கை மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியம் (IUCN) ஆகியவை இவற்றுள் முக்கியமானவை. இவ்விரு அமைவனங்களும் உலகப் பாரம்பரிய மனைகளைப் பாதுகாப்பதற்கான தொழில்நுட்ப உதவியினையும் அளிக்கின்றன. ரோமிலுள்ள பண்பாட்டு அருங்கலைச் சின்னங்கள் பாதுகாப்பு மற்றும் மீட்டாக்க ஆய்வு மையம் (ICCROM) யுனெஸ்கோவினால் நிறுவப்பட்டுள்ளது. இதுவும் இந்த உதவியினை வழங்குகிறது.

**புனித மரியன்னை பேராலயமும் புனித மிக்கேல் ஆலயமும், ஹில்டஷீம் (ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசு)**



இவ்விரு கட்டிடங்களின் அமைப்பும் உள் வேலைப்பாடுகளும் ரோமானிய வழிக் கலை ஊழியில் புனித ரோமானியப் பேரரசின் சமயக் கலை வரலாற்றில் ஒரு முக்கிய பருவத்தைப்பற்றி விளக்குகின்றன. 9ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டு, 11ஆம் நூற்றாண்டில் புதுப்பிக்கப்பெற்ற புனித மரியன்னை ஆலயத்தில் (வலப்புறம்) பல முக்கிய கலைப்படைப்புகள் உள்ளன. இரு கட்டிடங்களையும் கட்டுமாறு செய்தவர் 3ஆம் ஆட்டோ பேரரசரின் முக்கிய அறிவுரையாளரும், ஆவல்மிகு கலை ஆர்வலருமான ஆயர் பெர்ன்வார்டு (993-1022) ஆவார். பண்டைய பெனடிக்ட் சபை மடாலயத்திலுள்ள புனித மிக்கேல் ஆலயத்தை (11-12ஆம் நூற்றாண்டு) நிறுவியவர் புனித பெர்னார்டு ஆவார். புனித மிக்கேல் ஆலயம் ஆட்டோனிய-ஜெர்மானியக் கட்டடக்கலையின் அரும் படைப்பாகும். அதன் ஒழுங்கான அமைப்பும், கனஅளவுப் பரிமாணமும், 4 அழகிய வட்ட தூபிகளுக்கும் இரு பெரிய விளக்குக் கோபுரங்களுக்குமுள்ள முரண்பாடு தோற்றமும் குறிப்பிடத்தக்கவை. நடுக்கூட மரக்கூரையில் மாபெரும் ஜெசேயின் மரமும்கிறிஸ்துநாதரின் வாழ்க்கைக் காட்சிகளும் தீட்டப்பெற்றுள்ளன. இவ்விரு கட்டிடங்களும் 1985இல் உலகச் மரபுசெல்வப் பட்டியலில் இடம்பெற்றன.

**கரம்பா தேசியப் பூங்கா (ஸாயர்)**




வடகிழக்கு ஸாய்ரிலுள்ள பரந்த புல்வெளியில் திரியும் பெரிய பாலூட்டிகளுள் ஆஃப்ரிக்காவிலே மிக அரிதானது வடபகுதியிலுள்ள வெள்ளை காண்டாமிருகம். இது அழியும் நிலையிலுள்ளது. கறுப்பு காண்டாமிருகத்தைவிடப் பெரிதான இதன் தாடை நீண்ட சதுரமானது. 'ஒயிட்' (வெள்ளை) எனும் ஆங்கிலச் சொல் 'வைத் எனும் (பெரிய எனப் பொருள்படும்) ஆஃப்ரிக்கச் சொல்லின் திபாகும். இவ்வெள்ளை மிருகம்ரி செம்மண்ணில் } புரளாதபோது.. கருஞ்சாம்பல் ,நிறமுடையது. இவ்விலங்கைக் காப்பதற்காக 1938 இல் நிறுவப்பட்ட கரம்பா தேசியப் பூங்கா 1980இல் உலக மரபுச் செல்வப் பட்டியலில் இடம்பெற்றது. 12ஆக குறைந்துவிட்ட வெள்ளைக் காண்டாமிருகத்தின் தொகை இப்போது 20 ஆக உயர்ந்துவிட்டது. இவ்விலங்குகள் தொகை, அழிவிலிருந்து காப்பாற்றப்படும் அளவிற்கு உயரும் வரை பல ஆண்டுகளுக்கு தொடரும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். இவ்விலங்கை வேட்டையாடுவதைத் தடுப்பதாகும்.




படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் ஏ. பிரதால் © இன்காஃபோ மாட்ரிட்



ஒளிப்படம் வபாத © ஜாக்கானா, பாரிஸ்

**உலகப் பாரம்பரிய அருங்கலைச் சின்னங்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றன?**

இதற்கான செயல்முறையைத் தரப்பு நாடுகள் தொடங்கி வைக்கின்றன. அவை தங்கள் பகுதிகளிலுள்ள உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்குத் தகுதியுடைய உலகளாவிய தனிச்சிறப்புள்ள அருங்கலைச் சின்னங்களை இக்குழுவிற்குப் பரிந்துரைக்கின்றன. அவை தகுதியுடையவை என இக்குழு கருதினால் அவற்றை இப்பட்டியலில் சேர்க்கிறது. இதற்கான வகைமுறை மிகக் கவனமாக வகுக்கப்பட்டுள்ளது.

பரிந்துரைக்கப்பட்டுள்ள அருங்கலைச் சின்னங்களை இப்பட்டியலில் சேர்ப்பதற்காக இக்குழு ஒவ்வோராண்டும் கூடுகிறது. இந்தப் பணியில் ICOMOS. IUCN போன்ற அமைவனங்கள் இதற்கு உதவுகின்றன. 1978 முதல் ஆண்டுதோறும் 30-க்குக் குறையாத சின்னங்கள் இப்பட்டியலில் சேர்க்கப்படுகின்றன. இப்பட்டியலிலுள்ள எண்ணிக்கை மிக விரைவாகப் பெருகியுள்ளது. இது சேர்க்கப்பட்டுள்ள 288 சின்னங்களில், 211 பண்பாடு சார்ந்தவை; 68 இயற்கை சார்ந்தவை; இரண்டும் கலந்தவை 9; குவாட்டமாலாவிலுள்ள தைக்கால் தேசியப் பூங்கா, சீனாவிலுள்ள தைஷான் குன்று ஆகியவை இந்தக் "கலப்பு" வகையைச் சேர்ந்தவை. இவற்றுள் 133 சின்னங்கள் ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் உள்ளன; லத்தீன் அமெரிக்காவிலும் கரீபியனிலும் 36; ஆசியாவிலும் பசிபிக்கிலும் 48; ஆஃப்ரிக்காவில் 32; அரபு நாடுகளில் 39.

இப்போதுள்ள பட்டியல் உலகளாவியதாக இல்லை. உலக முக்கியத்துவம் வாய்ந்தவை எனப் பாமரன்கூட

www.padippakam.com

**மாகாவ் குகைகள் (சீனா)**

இப் பௌத்த குகைக் கோயில் தொகுதி வட மேற்கு சீனாவில் கான்சு மாநிலத்தில் டக்லமாக் கான் பாலை நிலத்தின் ஓரத்தில் உள்ளது. துறவிகள்முதன்முதலாக 4ஆம் நூற்றாண்டில் இக்குகை களில் வேலை தொடங்கினர் ஒரு துறவி ஆயிரம் புத்தர்களைக் காட்சி கண்டதாகப் புராணம் கூறு மிடத்தில் இதைத் தொடங்கினர். வழியிலிருந்த இப்பகுதியில் 14ஆம் நூற்றாண்டு வரை பணி தொடர்ந் தது. அதற்குள்ளாக பாறைகளில் நூற்றுக்கணக்கான குகைகள் வெட்டப்பெற்று, பல்வேறு மரபு களைச் சேர்ந்த கலைஞர்களால் அங்கு சுவரோவியங்களும் (வலப் புறம்), சிற்பங்களும் படைக்கப்பெற் றன; இன்று 496 குகைகள் அங்கு உள்ளன. கிரேக்க-பௌத்த கலை யும் புத்தரின் முன் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ''ஜாதக' கதைகளின் படக்கலையும் உயர்ந்து விளங்கிய (4-5ஆம் நூற்றாண்டுகள்) காலத் திற்குப் பின் 6 9ஆம் நூற்றாண்டு களில் மாகாவ் கலை உச்சநிலை யடைந்தது. அப்போது பௌத்த சமய நூல்களான 'சூத்திரங்கள்', அன்றாட வாழ்க்கைக் காட்சிகள், வரலாற்றுப் பொருள்கள் சித்தரிக் கப்பெற்றன 10 - 14ஆம் நூற் றாண்டுகளில். பட்டு வழி நலி வுற்று, குகைகளை அலங்கரிக்க ஓவியப் பணியாளர் அமர்த்தப்பட்ட போது, ஒருவகை கோட்பாடடுக் கலைமரபு தோன்றியது. 1987இல் மாகாவ் உலக மரபுச் செல்வப் பட் டியலில் இடப்பெற்றது.



அறிந்துள்ள சில சின்னங்கள் இதில் இடம்பெறவில்லை. உலக சமுதாயத் தின் மூன்றில் ஒரு பகுதி நாடுகளில் இந்த உடன்படிக்கையில் சேரா மலிருப்பதே இதற்குக் காரணம்,

**இந்தப் பட்டியலில் சேர்க்கப்படுவதால் நடைமுறையில் ஏற்படும் நலன்கள் யாவை?**

உலகப் பாரம்பரிய அருங்கலைச் சின்னங்களை இன்னும் சிறந்த முறை யில் பாதுகாப்பதே இந்த உடன் படிக்கையின் தலையாய நோக்கம். எனவே, இந்தப் பட்டியலில் அவை சேர்க்கப்படுவதால், அவற்றைப் பாதுகாப்பதிலும் அனுபவிப்பதில் ஈடு பாடு கொண்டுள்ளவர்களுக்கு உட னடியாக ஊக்கமும் உதவியும் கிடைக் கின்றன. தொல்பொருள்களையும் பூங்காக்களையும் தேசிய அளவில் பாதுகாக்கும் அதிகாரிகள் இருப்பார் கள்; இந்தப் பணியில் ஆர்வங் கொண்ட தனியார் அமைவனங்களும் இருக்கும். இவர்கள் தங்கள் பணி களுக்கான நிதிக்காகத் தங்கள் அரசு களுடன் போராடிக் கொண்டிருக்க லாம். அவர்களுக்குக் கைகொடுக்க இது உதவும்.

குறைந்த பொருள் வசதியுடைய நாடுகளுக்கு நிதியுதவியும், தொழில் நுட்ப உதவியும் அளிக்கும் நோக்கத் துடன், இந்த உடன்படிக்கையின்படி உலகப் பாரம்பரிய நிதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கு தரப்பு நாடு கள் அனைத்தும் பங்களித்துள்ளன. அவை யுனெஸ்கோவுக்குத் தங்கள் அளிக்கும் பங்குத்தொகையில் குறைந் தது ஒரு விழுக்காட்டுத் தொகையை இந்நிதிக்கு அளிக்கின்றன. தனியார் நிறுவனங்களும், அறநிறுவனங்களும் இதற்கு நன்கொடைகள் வழங்கியுள் ளன.

இக் குழு ஆண்டுதோறும் பல்வேறு நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கு கிறது. 1988ஆம் ஆண்டுக்காக இக் குழு ஒதுக்கியுள்ள தொகை 27லட்சம் டாலர். உலகப் பாரம்பரிய அருங் கலைச் சின்னங்களை அடையாளங் காணுதல், அவற்றின் நிலையை அறிந்து பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளுதல், போன்ற பணிகளுக்காக 1988இல் 1,00,000 டாலரும். பாதுகாப்புக்கான தொழில் நுட்ப ஆலோசனை, சாதனங்கள் போன்றவற்றுக்காக 7,00,000 டால ரும் பாதுகாப்புப் பணியில் பயிற்சி யளிப்பதற்காக 5,00,000 டாலரும், இயற்கை உற்பாதங்களினால் திடீ ரெனச் சேதமுறும் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான அவசர நிதிக்காக 2,00,000 டாலரும் ஒதுக்கப்பட்டுள் ளது.

''அபாய நிலையிலுள்ள உலகப் பாரம்பரியப் பட்டியலில்'' சேர்ப்பதற் கான இடங்களையும் இக்குழு தேர்ந் தெடுக்கிறது. இந்தப் பட்டியல், இச் சின்னங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற் கும், அதற்கான நிதி வசதிகளைத் திரட்டுவதற்கு உதவுகிறது. இதுவரை ஏழு இயற்கை மற்றும் பண்பாட்டு மனைகள் இப்பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.

எல்லா நேர்வுகளிலும், பன்னாட்டுச் சமுதாயம் வழங்கியுள்ள நிதியின் அதே அளவுக்கு நினைவுச் சின்னங் கள் உள்ள நாடுகளின் அரசுகளும் நிதியளிக்க வேண்டும் என்ற பொறுப் பினையும் இந்த உடன்படிக்கை சுமத் தியுள்ளது. ஒவ்வோராண்டும் மேன் மேலும் அருங்கலைச் சின்னங்களை இந்தப் பட்டியலில் சேர்ப்பதுடன் இக் குழு நின்றுவிடவில்லை. இந்தச் சின்னங்கள் பாதுகாக்கப்படும் நில வரத்தை அவ்வப்போது அறிந்து கொள்ளவும், உள்ளூர் நிதிவசதிகள் போதிய அளவில் இல்லையென்றால் தலையிட்டு ஒழுங்குபடுத்தவும் இந்தக் குழு ஓர் அமைப்பு முறையை ஏற் படுத்தியுள்ளது.

இந்த நிதியிலிருந்து 1978 முதல் மொத்தம் 50 இலட்சம் டாலர் வழங் கப்பட்டுள்ளது. உலகளாவிய தேவை களைக் கணக்கிடும்போது இது மிகச் சொற்பம். அழிவு ஆயுதங்களைச் செய்து குவிப்பதற்குச் சில நாடுகள் ஆண்டுதோறும் செலவிடும் தொகை யில் இது மிக அற்பம். எனினும், பொதுவான பாரம்பரியத்தைப் பாது காப்பதற்கான உலகளாவிய மற்றும் தேசிய முயற்சிகளுக்கு இந்த நிதி பேருதவியாக இருந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# உலக மரபுச்செல்வப் பட்டியல்



ஒளிப்படம் © ரினி டாங், பாரிஸ்

எடுத்துக்காட்டாக, ஹைட்டியில், வரலாற்றுப் புகழ்வாய்ந்த சிட்டாடல், சான் சூகி அரண்மனை, ரேமியர்ஸ் ஆகிய சின்னங்கள் அமைந்துள்ள மனையினைப் பாதுகாப்பதற்காக 40 லட்சம் டாலர் செலவு பிடிக்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்நிதியிலிருந்து 1,00,000 டாலரும் ஐ.நா. மேம்பாட்டுத் திட்டநிதியிலிருந்து 12 இலட்சம் டாலரும் வழங்கப்பட்டது. ஆஸ்திரியா, கனடா, சிலி, ஃபிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இதற்கு நிதியுதவி கிடைத்தது. உலக நினைவுச் சின்னங்கள் காப்பு நிதி, அமெரிக்க அறக்கொடையாளர்களிடமிருந்து இதற்கு 2,00,000 டாலர் திரட்டியிருக்கிறது. இதேபோன்று, ஸ்ாய்ர் நாட்டில் வெள்ளைக்காண்டாமிருகத்தின் கடைசிப் புகலிடமாகவுள்ள காரம்பா தேசிய பூங்காவைப் பாதுகாப்பதற்கு உலக நாடுகளின் உதவியைப் பெறுவதற்கு உலகப் பாரம்பரிய நிதியின் ஆதரவு பெருந்துணைபுரிந்துள்ளது.

தமிழில்: இரா. நடராசன்

**டிசம்பர் 31, 1987இல் 288 செல்வங்கள்**

(211 பண்பாட்டுப் பகுதிகள், இயற்கைப் பகுதிகள், 9 கலப்புப் பகுதிகள்)

**அல்ஜீரியா**

அல்ஹலா: பெனி ஹம்மாத், தாசிலி நாஜர், முசாப் பள்ளத்தாக்கு. திஜெமிலா, திப்பாசா, திம்காட்.

**அர்ஜெண்டினா**

லாஸ் கினேசியர்ஸ், இகுவாசுதேசியப் பூங்கா

**அர்ஜெண்டினா, பிரேசில்**

குவரானில் சேசுசபை மடங்கள்: சான் இஞ்ஞாசியோ மினி, சாந்தா ஆனா, நியூஸ்த்ரா செனோரா தெ லொரத்தோ, சாந்தா மரியா லா மேயோர் (அர்ஜெண்டினா); சாவ் மிகேல் தா மிசோஎஸின் அழிபாடுகள் (பிரேசில்).

**ஆஸ்திரேலியா**

காக்காடு தேசியப் பூங்கா, பெரும் பவளத்திட்டு. விலாண்ட்ரா ஏரிப் பகுதி. மேற்கு தாஸ்மேனியப் பாலைத் தேசியப் பூங்காக்கள். லார்டு ஹோவ் தீவுத் தொகுதி. ஆஸ்திரேலிய கிழக்கு கரை மிதவெப்ப, வெப்பம் குறைந்த மழைக் காட்டுப் பூங்காக்கள். உலுரு தேசியப் பூங்கா.

**வங்காளதேசம்**

பாகர்ஹாத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள மசூதி நகர்: பஹார்பூரிலுள்ள பௌத்த ஆலய அழிபாடுகள்.

**பெனின்**

அபோமே அரண்மனைகள்

**பொலீவியா**

போட்டோசி நகர்

**பிரேசில்**

ஊரோ பிரேட்டோ எனும் வரலாற்றுச் சிறப்புமிகு நகர். ஒலிண்டா நகரின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம். சால்வதோர் தெ பாஹியாவின் வரலாற்றுச் சிறப்புமிகு மையம். போம்ஜீசஸ் தோ காங்கோன்ஹாஸ் ஆலயம்; இகுவாசு தேசியப் பூங்கா, பிரசீலியா

**பல்கேரியா**

போயானா ஆலயம். மடாரா ரைடர். காசன்லாக்கிலுள்ள திரேசியக் கல்லறை. இவானோவோ பாறைக் கோயில்கள். நெஸ்பார் பண்டைய நகர். ரிலா மடாலயம். சிரபார்னா இயற்கைப் புகலிடம். பிரின் தேசியப் பூங்கா. ஸ்வெஷ்டாரியின் திரேசியக் கல்லறை.

**காமரூன்**

திஜா தாவரப் புகலிடம்.

**கனடா**

லான்ஸ் சமவெளி தேசிய வரலாற்றுச் சிறப்புள்ள பூங்கா. நாஹானி தேசியப் பூங்கா. டினோசார் மாநிலப் பூங்கா. அந்தனி தீவு. கஹட்-ஸ்மாஷ்ட்-பைசன் ஜம்ப் தொகுதி. காட்டெருமை தேசியப் பூங்கா. கனடா ராக்கி மலைப் பூங்காக்கள்,* குவெபெக் (வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி). குரோஸ் மோர்ன் தேசியப் பூங்கா.

**கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

குளுவான் தேசியப் பூங்கா/விராங்கல் செயின்ட் எலியாஸ் தேசியப் பூங்காவும் புகலிடமும்.

**சீனா**

தாய்ஷான் மலை. பெருஞ்சுவர், மிங் கிங் வம்ச அரண்மனை, மோகாங் குகைகள், முதல் கின் பேரரசரின் கல்லறை மாடம். ஸுக்கூடியனிலுள்ள பீக்கிங் மனிதன் பகுதி.

**கொலம்பியா**

துறைமுகம், கோட்டைகள், கட்டிடத் தொகுதி, கார்த்தஜீனா.

**கோஸ்டா ரீக்கா**

தலமாங்கா தொடர் - லா அமிஸ்டாடு புகலிடங்கள்.

**கோத் திவார்**

தாய் தேசியப் பூங்கா. கோமோ தேசியப் பூங்கா.

**கியூபா**

பழைய ஹவானாவும் அதன் மதிலரண்களும்.

**சைப்ரஸ்**

பாஃபோஸ். ட்ரூடோஸ் பகுதியிலுள்ள ஓவியந் தீட்டப்பெற்ற கோயில்கள்.

**குடியாட்சி ஏமன்**

ஷிபாம் மதில் சூழ்ந்த பழைய நகர்.

**ஈக்குவடார்**

கால்பகாஸ் தீவுகள். குயிட்டோ (பழைய நகர்) சாங்கே தேசியப் பூங்கா.

**எகிப்து**

மெம்ஃபிஸ், அதன் கல்லறை. கிசா முதல் தாஹ்ஷுர் வரையுள்ள பிரமிடுகள். பண்டைய தீப்ஸும் அதன் கல்லறையும், அபு சிம்பல் முதல் ஃபிலே வரையுள்ள நியூபிய கல்லறைகள், இஸ்லாமிய கெய்ரோ. அபு/மேனா.

**எத்தியோப்பியா**

சிமென் தேசியப் பூங்கா. பாறைக் கோயில்கள், லலிபெலா. ஃபாசில் கெபி, கோண்டார் பகுதி. அவாஷ் கீழ் பள்ளத்தாக்கு. தியா அக்ஸம்

*முன்னால் உலக மரபுச்செல்வப் பட்டியலிலிருந்த பர்கஸ் ஷேல் பகுதி இப்போது கனடா ராக்கி மலைப் பூங்காக்களின் ஒரு பகுதியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஓமோ கீழ் பள்ளத்தாக்கு.

**ஃபிரான்ஸ்**

புனித மிக்கேல் மலையும் அதன் வளைகுடாவும்; சார்த்தர் பேராலயம். வெர்செய்ஸ் மாளிகையும் பூங்காவும்; வேசலே, ஆலயமும் மலையும். வேசேர் பள்ளத்தாக்கிலுள்ள அலங் காரக்/குகைகள். ஃபோந்தேன்புளோ விலுள்ள அரண்மனையும் பூங்காவும். ஷாம்போர் அரண்மனையும் பிற சொத்துகளும். ஆமியன் பேராலயம். ரோமானிய அரங்கும் வெற்றி வளை வும், ஆரஞ்சு. ரோமானிய, ரோமா னிய வழிக்கலைக் கட்டிடங்கள், ஆர்ல். ஃபோந்தனேயிலுள்ள சிஸ்டர் சிய மடாலயம். ஆர்க்-எ-செனானின் அரச உப்பளங்கள். லா காரியர், தாலியான்ஸ் இடங்கள், நான்சி. கார்த்தெம்ப் கரையிலுள்ள புனித சாவன் ஆலயம். கிரோலாத்தா முனை, போர்த்தோ முனை, ஸ்காந் தோலா இயற்கைப் புகலிடம், கார் சிக்கா. போந் தியூ கார் (ரோமானியக் கால்வாய்).

**ஜெர்மனி (கூட்டாட்சிக் குடியரசு)**

ஆக்கென் பேராலயம். ஸ்பேயர் பேரா லயம். வெர்ஸ்பர்க் இல்லமும், அரசத் தோட்டமும், இல்லச் சதுக்கமும். வீஸ் திருப்பயணக் கோயில் அகஸ் டஸ் பர்க், ஃபாக்கன் லஸ்ட் கோட் டைகள், ப்ரஹல்: புனித மரியன்னைப் பேராலயமும், புனித மிக்கேல் ஆலய மும், ஹில்டஷீம் ட்ரையர் கட்டிடங் கள், லூபெக்கிலுள்ள ஹான்சியாட்டிக் நகர்.

**கானா**

அரண்களும் கோட்டைகளும் வோல்ட்டா, கிரேட்டர், அக்ரா, மத்திய, மேற்குப் பகுதிகள். அஷாந்த் மரபான கட்டிடங்கள்.

**கிரீஸ்**

பாசேயிலுள்ள அப்போலோ எப்பிக் கியூரியஸ் ஆலயம். டெல்ஃபியின் தொல்பொருளாய்வுப் பகுதி. உள்ள ரண், ஏதென்ஸ்.

**குவாட்டமாலா**

டிக்கால் தேசியப் பூங்கா. அண்டி குவா குவாட்டமாலா. தொல்பொரு ளாய்வுப் பூங்காவும் குய்ரிகுவாவின் அழிபாடுகளும்.

**கினி, கோத் திவார்**

நிம்பா மலை இயற்கைப் புகலிடம்.

**ஹைட்டி**

தேசிய வரலாற்றுச் சிறப்புள்ள பூங்கா -சிட்டாடல், சான் சூசி, ராமியர்.

**போப்பாண்டவரின் அரசு**

வத்திக்கான் நகர்.

**ஹோண்டுராஸ்**

கோப்பனிலுள்ள மாயர் பகுதி. ரியோ பிளேட்டானோ உயிர்மண்டலப் புக லிடம்.

**ஹங்கேரி**

புடாபெஸ்ட்: டான்யூப் கரையிலுள்ள புடா காசில், ஹொலோக்கோ.

**இந்தியா**

அஜந்தா குகைகள். எல்லோரா குகை கள். ஆக்ரா கோட்டை, தாஜ்மஹல். கதிரவன் ஆலயம், கோனாரக். மாமல்லபுரச் சின்னங்கள். காசிரங்க தேசியப் பூங்கா. மானஸ் வனவிலங்கு சரணாலயம். கியோலாதெயோ தேசி யப் பூங்கா. கோவாவிலுள்ள ஆலயங் களும் கன்னிமடங்களும். கஜுரா ஹோ சின்னங்கள். ஹம்பி கட்டிடங் கள். ஃபத்தேஹ்பூர் சிக்ரி. பட்டடக் கால் சின்னங்கள். எலிஃபெண்டா குகைகள். பிரஹதீஸ்வரர் ஆலயம், தஞ்சாவூர். சுந்தரவனத் தேசியப் பூங்கா.

**ஈராக்**

ஹத்ரா

**ஈரான் இஸ்லாமியக் குடியரசு**

த்சோகா சான்பில். பெர்சப்போலிஸ், மெய்தான் இமாம், எஸ்ஃபஹான்.

**இத்தாலி**

பாறை ஓவியங்கள், வால்கமோனிக் கா. ரோமில் வரலாற்றுச் சிறப்புள்ள மையம். ஆலயமும் லியோனார்டோ டா வின்சியின் ''இறுதி இரவுணவு'' இருக்கும் சாந்த மரியா தெல் கிராசி டொமினிக்கன் கன்னிமடமும். ஃபிளாரன்ஸின் வரலாற்றுச் சிறப் புள்ள மையம். வெனிஸும் அதன் கடற்கழியும். பியாசா தெல் துவோ மோ, பிசா.

**ஜோர்டன்**

ஜெருசலேம் பழைய நகரும் அதன் மதில்களும். பெட்ரா. குவசீர் அம்ரா.

**லெபனான்**

அஞ்சார், பால்பெக், பிப்ளோஸ், டைர்.

**லிபிய அராபிய ஜமாஹிரியா**

லெப்டிஸ் மாக்னாவிலுள்ள தொல் பொருளாய்வுப் பகுதி. சப்ராத்தாவின் தொல்பொருளாய்வுப் பகுதி, சைரீ னின் தொல்பொருளாய்வுப் பகுதி, டன்ட்ரார்ட் அகாகஸிலுள்ள பாறை ஓவியப் பகுதிகள், காடாமெஸ் பழைய நகர்.

**மாளாவி**

மாளாவி ஏரித் தேசியப் பூங்கா.

**மால்ட்டா**

ஹால் சாஃப்லியெனி ஹைப்போஜி யம், வலட்டா நகர், காண்டிஜா ஆலயங்கள்.

**மெக்சிகோ**

சியான் கான். ஸ்பானிய ஆட்சிக்கு முந்திய நகரும் பாலெங் தேசியப் பூங் காவும்: மெக்சிகோ நகர், மற்றும் க்ஸோசிமில்கோவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம், டியோட்டிஹூ வாகான் எனும் ஸ்பானிய ஆட்சிக்கு முந்திய நகர், ஓக்ஸாக்காவின் வர லாற்றுச் சிறப்புள்ள மையமும், ஆல் பன்மலை தொல்பொருளாய்வுப் பகுதி யம். பியூப்ளாவின் வரலாற்றுச் சிறப் புள்ள மையம்.

**மொராக்கோ**

ஃபெஸ் மெதினா. மராக்கெஷ் மெதி னா. அய்த்-பென்-ஹடுவின் க்ஸார்.

**நேப்பாளம்**

சாகர்மாதா தேசியப் பூங்கா. காட் மாண்டு பள்ளத்தாக்கு. அரச சிட் வான் தேசியப் பூங்கா.

**நியூஸிலந்து**

சவுஸ்ட்லாண்டு கூக் மலைத் தேசியப் பூங்கா. ஃபியோர்ட்லாண்டு தேசியப் பூங்கா.

**நார்வே**

அர்ன்ஸ் ஸ்டேவ் ஆலயம். பிரிகன். ரோரஸ். ஆல்ட்டா பாறை ஓவியங் கள்.

**ஓமான்**

பாஹ்லா கோட்டை

**பாகிஸ்தான்**

மொகஞ்சதாரோ அழிபாடுகள். தட்ச சீலம். தக்த் - இ - பாஹியிலுள்ள பௌத்த அழிபாடுகளும், சாஹர்-இ- பாஹ்லோலிலுள்ள அண்மை நகர அழிபாடுகளும், தாட்டாவின் வரலாற் றுச் சிறப்புள்ள கட்டிடங்கள், கோட் டையும், ஷலாமார் தோட்டங்களும், லாகூர்.

**பனாமா**

போர்ட்டோபெல்லோ-சான் லோரன் சோவின் கரீபியப் பகுதியிலுள்ள அரண்கள். டேரியன் தேசியப்பூங்கா.

**உலக மரபுச்செல்வ ஒப்பந்தத்தில் பங்குபெறும் அரசுகள்**

மேலேயுள்ள பட்டியலிலுள்ள அரசு கள் தவிர கீழ்க்கண்டவையும் உல கப் பண்பாட்டு இயற்கைச்செல்வங் களைப் பாதுகாப்பதில்இவ்வொப்பந் தத்தில் பங்குபெறுகின்றன: ஆப் கானிஸ்தான், அண்டிகுவா பார் புடா, புர்கினா, பருண்டி, வெர்டு முனை மத்திய ஆப்ரிக்க குடி யரசு, சிலி, காங்கோ, டென்மார்க், டொமினிக்கன் குடியரசு, ஃபின் லாந்து, காபேன், காம்பியா. கயா னா ஜமாய்க்கா, லாவோ மக்கள் குடியாட்சிக் குடியரசு, லக்ஸம்பர்க், மடகாஸ்கர், மால்டிவ் தீவுகள், மாலி, மாரிட்டானியா, மொனாக் கோ, மொசாம்பிக், நிக்காராகுவா, நைஜர், நைஜீயா, பராகுவே, பிலிப் பைன் தீவுகள், கத்தார், செயின்ட் கிறிஸ்டஃபரும் நேவிஸும் சவூதி அரேபியா, சூடான், சுவீடன், தாய் லாந்து, உகாண்டா, வியட்நாம், ஸாம்பியா.

உலக மரபுசெல்வப் ஒப்பந்தச் சின்னம் பண்பாட்டு, இயற்கைச் செல்வங்களின் கூட்டுச்சார்பைக் குறிக்கின்றது. நடுச் சதுரம் மனிதன் உருவாக்கிய வடிவம்; வட்டம் இயற்கையைக் குறிக்கிறது. இரண்டும் நெருங்கி இணைந்துள் ளன சின்னம் உலகம்போல் வட்ட மாக உள்ளது. அதே நேரத்தில் அது பாதுகாப்பையும் குறிக்கின்றது



Edited and Published by M. Mohammed Mustafa (Manavai Mustafa) for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras-600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras-600026

படிப்பகம்

www.padippakam.com

(பதினோராம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாப் பயணிகளும், வணிகர்களும் இயற்கைவள ஆராய்ச்சியாளர்களும் இந்தத் தீவுகளுக்கு வரலானார்கள். இங்கு ஒரு பள்ளியும், ஒரு மருத்துவமனையும் கட்டப்பட்டன. கடற்பறவைகளையும், பார்லியையும் உண்டு உயிர்வாழும் முறை மறக்கப்பட்டது. இந்தத் தீவுகளிலிருந்த கடைசி ஆள்கூட 1930 ஆகஸ்ட் 30 அன்று ஸ்காத்லாந்துத் தலைநிலத்திற்குச் சென்றுவிட்டார். இன்று இங்கு ஓர் இராணுவதளமும், ஒரு வானிலை நிலையமும், ஏராளமான கடற்பறவைகளும், காட்டுச் செம்மறியாடுகளும் மட்டுமே உள்ளன.

புனித கில்டா தீவுவாசிகள் மாறிவரும் சமூக நிலைமைகளுக்கேற்ப தங்கள் வாழ்க்கையை மாற்றிக்கொண்டார்கள். அல்ஜீரியாவிலுள்ள தசிலிப் பீடபூமி தட்பவெப்ப மாறுதலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சகாரா மணல்வெளியில் தனித்துக் கிடக்கும் தசிலி-என்-ஆஜர் ஒரு மலைப்பாங்கான மண்டலம். இதன் அகலம் 100 கி. மீ; அகலம் 700 கி.மீ. இங்குள்ள பாறைக் கூட்டங்களின் குவடுகள் மலை முகட்டுத் திரளிலிருந்து எழுந்து நிற்கின்றன. ஒரு சில "படிமநீர்க்" குட்டைகளும் உண்டு. எரிமலைச் சூட்டினால் வெப்பமூட்டப்பட்ட சில வெந்நீர் ஊற்றுகளும் உள்ளன. சகாராவின் "நீலமனிதர்கள்" எனப்படும் "துவாரக்" என்ற நாடோடிகள் சில நூறு பேர் இங்கு வாழ்கின்றனர். இவர்கள், நீலச்சாயமிட்ட ஆடைகளை அணிகின்றனர். பாலைவனச்சோலைகளுக்கு இவர்கள் தங்கள் கால்நடைகளுடன் செல்கின்றனர்.

இந்தப் பாலைவன அருங்காட்சியகத்தில், காணப்படும் 8,000 ஆண்டுகளுக்கு முந்திய பாறை ஓவியங்களில் ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, யானை, நீர்யானை, காண்டா மிருகம் ஆகியவற்றின் உருவங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. 6,000 ஆண்டுகளுக்கு முந்திய பாறை ஓவியங்களில் பல வண்ண, வெள்ளை, மஞ்சள் நிறக் கால்நடை உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவை அந்தக் காலத்தில் வீட்டு விலங்குகளாக இருந்திருக்கவேண்டும்.3,000 ஆண்டுகளுக்கு முந்திய பாறை ஓவியங்கள் குதிரை உருவங்களைச் சித்திரிக்கின்றன. கி. பி. 200-ஐச் சேர்ந்த ஒட்டகக் கூட்டங்கள் காணப்படுகின்றன. இன்று இங்குள்ள இடுக்குப் பாறைகளில் ஒருசில 'சிப்ரஸ்' மரங்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவற்றின் தூர் 5 மீட்டர் விட்டமுடையது. இங்கு சில முதலைகளும் இருந்தன. ஆனால் இவற்றில் கடைசியாக எஞ்சியிருந்தவை 1940களில் கொல்லப்பட்டுவிட்டன.

தலமான்காதொடர்-லா ஆமிஸ்டாட். இது கோஸ்டா ரீக்காவிலுள்ள உயிர் மண்டல ஒதுக்கிடம். இது இரு நாடுகளையும், இரு பெருங்கடல்களையும், இரு கண்டங்களையும்இணைக்கிறது. "ஆமிஸ்டாட்" என்றால் 'நட்பு' என்று பொருள். கோஸ்டா ரீக்காவுக்கும் பனாமாவுக்குமிடையே அறிவிக்கப்பட்ட ஒரு "நட்பு மண்டலத்தை" யொட்டி இப்பெயர் வந்தது. இதன் பரப்பளவு 8,000 ச.கி.மீ. இந்த உயிர் மண்டல ஒதுக்கிடம் அட்லாண்டிக்கிலிருந்து பசிபிக் வரை 150 கி.மீ. தூரம் பரந்துள்ளது. உலகிலேயே மிக வேறுபட்ட உயிர்மண்டலங்கள் இதில் அடங்கியுள்ளன. இங்குதான் வட அமெரிக்காவின் தாவரங்களும், விலங்குகளும். எரிமலை எழுச்சியினால் இரு கண்டங்களும் இணைந்தபோது, தென் அமெரிக்கத் தாவரங்களுடனும், விலங்குகளுடனும் உறவு கொண்டன. நிலநடுக்கங்களும், எரிமலை வெடிப்புகளும் இங்குள்ள மிக உயர்ந்த சிகரங்களை 3500 மீட்டர் உயரத்திற்கு உயர்த்தின. பசிபிக் கடலோரத்தில் வறண்ட காட்டு நிலமும், அட்லாண்டிக் கடலோரம் உண்மையான காடுகளும் உள்ளன. உயர்ந்த பகுதிகளில் தேவதாரு மரக்காடுகள் அடர்ந்திருக்கின்றன. லா ஆமிஸ்டாடின் உள் பள்ளத்தாக்குகளில் மனிதனின் காலடி படவே இல்லை எனலாம். அங்கு ஏராளமான உயிரினங்கள் உள்ளனவாகவே தோன்றுகிறது.

கோஸ்டா ரீக்காவின் பரப்பளவில் 10% லா ஆமிஸ்டாட் பகுதியேயாகும். கோஸ்டா ரீக்கா செவ்விந்தியர்களில் 40% பேரின் தாயகம் இதுவேயாகும். ஒதுக்கிடத்தினுள் பிரிப்ரி. காபிகார், புருன்கா, குவாய்மி ஆகிய மரபுக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். இங்கு செவ்விந்தியர்கள், மேலைநாட்டு வாழ்க்கை முறைகளை நன்கறிந்திருக்கிறார்கள். மேலைநாட்டு உடைகளையே அணிகிறார்கள். மேலை நாடுகளிலிருந்து விமானத்தில் வரும் செங்கலினால் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள்.

ஒவ்வொரு மண்டலத்திலும் வாழும் மக்களின் நலப்பற்றுகளை உலகச் சமுதாயத்தின் நலப்பற்றுகளுடன் இணைப்பதற்கான ஒரு வழியே உலகப் பாரம்பரிய மாநாடு ஆகும். இது அத்துணை எளிதானதன்று. எனினும், உலகின் வனப்பகுதிகளைக் கடந்தகாலச் சின்னங்களாக மட்டுமன்றி, எதிர்காலத்துடன் இணைக்கும் பாலங்களாகப் பாதுகாக்க நாம் விரும்பினால், அதற்கு இது இன்றியமையாது தேவை என்பது உறுதி.

---

(பதினைந்தாம் பக்கத் தொடர்ச்சி)

அழிந்துபட்ட கட்டுமானங்களைப் பொது மக்கள் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் மறுகட்டுமானம் அல்லது மீட்டாக்கம் செய்வதை எந்த அளவுக்கு அனுமதிக்கலாம். உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்குத் தனிச்சிறப்புடைய தொல்பொருள் மனைகள் பற்றி எழும் சிக்கல்கள், மனப்போக்குகளின் மாற்றத்திற்கும், புதிய அணுகுமுறைகளுக்கும் வழி வகுக்கின்றன. இறுதியாக, தொல்பொருள் மனைகளைப்பற்றி அதிக மக்கள் அறிந்திடச் செய்வதும், அவற்றை அவர்கள் பார்க்கும்படி செய்வதுமே அவற்றைப் பேணிக்காப்பதற்கான கொள்கையைச் செயற்படுத்துவதற்குச் சிறந்த வழியாகும். முக்கியமாக, இளைஞர்கள் இதில் ஆர்வங்கொள்ளச் செய்யவேண்டும். இதற்குச் செய்தித்தொடர்புச் சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அறிஞர் ஆண்ட்ரே மால்ரோ பொதுவாகக் கடந்த காலம் பற்றிக் கூறும்போது, "நமது கடந்த காலத்திடம் நாம் ஏன் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருக்கிறோம். என்பது நமக்குத் தெரியவில்லை. எனினும், நாம் அனைவரும், இன்று நாடுகள் அனைத்தும் நமது கடந்த காலத்திடம் பற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் நாம் நன்கு அறிந்து கொண்டிருக்கிறோம்" என்று கூறினார். இந்தக் கூற்று, தொல்பொருள் மனைகளுக்கும் பொருந்தும்.

**கூரியர்**

**அடுத்த**

**நவம்பர் '88 இதழ்**

**உலக நாகரிகத் தொட்டிலான எகிப்தின் பண்டைய கலை, பண்பாட்டுச் சிறப்புக்களை அதற்குக் காரணமாயமைந்த ஃபாரோ மன்னர்களின் பெருமையை, வியக்கத்தக்க செயற்பாடுகளை அரிய படங்களோடு விளக்குகிறது.**

**என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டிய கலைப் பெட்டகமாக மலர்கிறது நவம்பர் இதழ்.**

(முப்பத்திமூன்றாம்பக்கத்தொடர்ச்சி)

ஆனால், இந்தப் பட்டியல் தயாரிப்பதிலும் அதனை நம்பகமானதாகச் செய்வதிலும் செலுத்தப்படும் கவனம் தான், இந்தச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் வாயிலான முயற்சிகளுக்கு வெற்றி தேடித்தரும். இறுதியாக, இந்த உடன்படிக்கை தொடர்ந்தும் மதிக்கப்படவேண்டும். நிதியுதவிகள் சீராகப் பயன்படுத்தப்படவேண்டும். இதற்கு உலகப் பாரம்பரிய அருங்சுலைச் சின்னங்களின் நிலைமையை அவ்வப்போது தெரிவித்து வருவதற்கு ஒரு நிரந்தர ஒருங்கிணைந்த அமைப்பு தேவை. தகுதியற்ற சின்னங்கள் இந்தப் பட்டியலில் இதுவரை சேர்க்கப்படவில்லை. எனினும், உலகப் பாரம்பரியத்தின் விரிவாக்கத்திற்கும் வெற்றிக்கும் குன்றாத விழிப்புணர்வு தேவை. ஒரு பன்னாட்டு மேற்பார்வையின் நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்திருந்த பின்னரே இந்த உடன்படிக்கையில் நாடுகள் சேர்ந்துள்ளன. எனவே, இந்தப் பன்னாட்டளவிலான கட்டுப்பாடு, தங்கள் இறையாண்மையை மீறுவதாகத் தரப்பு நாடுகள் கருதலாகாது.

உலகிலுள்ள எந்த ஒரு சமுதாயமும் தங்கள் பண்பாட்டுத் தற்பண்பைப் பாதுகாப்பதற்கான உதவியை இந்த உடன்படிக்கை மூலம் பெறலாம். இந்த உதவி பொருள் உதவியாக மட்டுமின்றி, அதன் பாரம்பரியத்தை மதிக்காதவர்கள் அதனைத் திருட்டுத்தனமாக அழிப்பதைத் தடுப்பதற்கான உதவியாகவும் கிடைக்கும்.

தமிழில்: இரா. நடராசன்



படிப்பகம்

www.padippakam.com

(88ஆம் பக்கத் தொடர்ச்சி)

**பெரு**

குஸ்கோ நகர். மச்சு பிச்சுவின் வரலாற்றுச் சிறப்புமிகு சரணாலயம், ஷாவின் தொல்பொருளாய்வுப் பகுதி. ஹுவாஸ்கரன் தேசியப் பூங்கா. சான் சான் தொல்பொருளாய்வுப் பகுதி, மானு தேசியப் பூங்கா.

**போலந்து**

கிராக்கோவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம். விலிக்ஸ்கா உப்பளம், ஒஸ்விட்ஸ் சிறைக்கூடம், பயலோவீசா தேசியப் பூங்கா. வார்சாவின் வரலாற்றுச் சிறப்புமிகு மையம்.

**போர்ச்சுக்கல்**

அங்ரா தோ ஹெரோய்ஸ்மோ நகரின் மையப் பகுதி, அசோரஸ் ஹிரோனிமஸ் சபை மடாலயமும், பெலம் கோபுரமும், லிஸ்பன். பத்தால்ஹா மடாலயம், கிறிஸ்து கன்னிமடம், தோமார், எபோராவின் வரலாற்றுச் சிறப்புள்ள மையம்.

**செனகல்**

கோரே தீவு. நியோக்கோலோ - கோபா தேசியப் பூங்கா. த்ஷுஜ் தேசியப் பறவைகள் சரணாலயம்.

**சீசெல்ஸ்**

அல்தாப்ரா திட்டு வாலே தெ மாய் இயற்கைப் புகலிடம்.

**ஸ்பெயின்**

கோர்டோபா மசூதி, அல்ஹாம்ப்ராவும் ஜெனரா லிஃபும், கிரானடா. பர்கோஸ் பேராலயம், எஸ்கூரியல் மடாலயமும் அப்பகுதியும், மாட்ரிட், பார்க்குவெல், பலாசியோ குவெல், காசா மிலா, பார்சிலோனா. அல்ட்டாமிரா குகை, செகோவியா எனும் பழைய நகரும் அதன் கால்வாயும், அஸ்டூரியாஸ் அரசுக் கோயில்கள். சாந்தியாகோ தெ கொம்போஸ்தலா (பழைய நகர்), பழைய அவிலா நகரும் அதற்கு வெளியேயுள்ள கோயில்களும், டெருவெலின் முட்ஜார் கட்டடக்கலையும். வரலாற்றுச் சிறப்புள்ள டோலடோ நகர். காராஜோனே தேசியப் பூங்கா. பழைய காசரஸ் நகர், பேராலயம், அல்காசர், ஆர்சிவோ தெ இந்தியாஸ், செவில்.

**இலங்கை**

புனித அனுராதபுர நகர், பண்டைய போலனருவா நகர், பண்டைய சிகிரியா நகர்.

**சுவிட்சர்லாந்து**

புனித கால மடம். புனித ஜான் பெனடிக்ட் சபைக் கன்னிமடம், முஸ்தேர். பழைய பெர்ன் நகர்.

**சிரிய அராபியக் குடியரசு**

பண்டைய டமாஸ்கஸ் நகர். பண்டைய போஸ்ரா நகர். பல்மைரா பகுதி. பண்டைய அலெப்போ நகர்.

**துனீசியா**

துனீஸிலுள்ள மெதினா. கார்த்தேஜ் பகுதி. எல் டீம் அரங்கு. இச்கூல் தேசியப் பூங்கா. கெர்குவான் கார்த்தேஜ் நகரும் அதன் இடுகாடும்.

**துருக்கி**

இஸ்தான்புலின் வரலாற்றுச் சிறப்புள்ள பகுதிகள். கோரம் தேசியப் பூங்காவும் கப்படோசியாவின் பாறைப் பகுதிகளும். பெரிய மசூதியும் திவ்ரிகி மருத்துவமனையும். ஹட்டுஷா நெம்ருட் டாக்.

**இங்கிலாந்து**

பெரும் கரைப் பாலமும், கடப்புவழிக் கடற்கரையும். டர்ஹாம் கோட்டையும் பேராலயமும் இரும்புப்பாலப் பிளவு. ஃபௌண்டன்ஸ் மடாலய அழிபாடுகள் உட்பட ஸ்டட்லி அரசப் பூங்கா. ஸ்டோன்ஹென்ஜ், ஏவ்பரி, பிற பகுதிகள். கிவினெடிலுள்ள எட்வர்டு அரசரின் கோட்டைகளும் நகர மதில்களும். செயின்ட் கில்டா, பிளன்ஹீம் மாளிகை. பாத் நகர். ஹேட்ரியனின் சுவர். வெஸ்ட்மின்ஸ்டர் மாளிகை, வெஸ்ட்மின்ஸ்டர் மடாலயம், புனித மார்கரெட் ஆலயம்.

**தான்ஸானிய ஐக்கிய குடியரசு**

நுகோரங்கோரோ பாதுகாப்புப் பகுதி. கில்வா கிசிவானி அழிபாடுகள். சோங்கோ பனாரா அழிபாடுகள். செரங்கெட்டி தேசியப் பூங்கா. செலூஸ் வன விலங்குப் புகலிடம். கிளிமஞ்சாரோ தேசியப் பூங்கா.

**அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

மெசா வெர்டு. எல்லோஸ்டோன். கிராண்டு கேன்யன் தேசியப் பூங்கா. எவர்கிளேட்ஸ் தேசியப் பூங்கா. சுதந்தர மன்றம். ரெட்வுட் தேசியப் பூங்கா பெருங்குகை தேசியப் பூங்கா. ஒலிம்பிக் தேசியப் பூங்கா. காஹோக்கியா மவுண்ட்ஸ் ஸ்டேட் வரலாற்றுச் சிறப்புமிகு பகுதி. கிரேட் ஸ்மோக்கி மலைத் தேசியப் பூங்கா. லா ஃபோர்டாலெசா சான் ஜுவான் வரலாற்றுச் சிறப்புள்ள பகுதி, பியூர்ட்டோ ரிக்கோ. சுதந்தரச் சிலை. யோஸ்மைட் தேசியப் பூங்கா. சாக்கோ பண்பாட்டுத் தேசிய வரலாற்றுச் சிறப்புள்ள பூங்கா, மாண்டிசெல்லோ, மற்றும் வெர்ஜீனியா பல்கலைக்கழகம், சார்லட்ஸ்வில் ஹவாய் எரிமலைத் தேசியப் பூங்கா.

**ஏமன் அராபியக் குடியரசு**

பழைய சானா நகர்

**யூகோஸ்லாவியா**

பழைய டுப்ரவ்னிக் நகர். ஸ்டாரி ராஸ், சோப்பக்கானி. டயக்ளேசியன் அரண்மனையுள்ள வரலாற்றுச் சிறப்புள்ள ஸ்பிலிட் தொகுதி. ப்ளிட்விஸ் ஏரிகளின் தேசியப் பூங்கா. ஓஹ்ரிட் பகுதியும் அதன் ஏரியும். கோட்டோரும் அதன் வளைகுடாவும். டுர்மிட்டர் தேசியப் பூங்கா. ஸ்டுடன்சியா மடாலயம். ஸ்கோக்ஜன் குகைகள்.

**ஸாய்ர்**

விருங்கா தேசியப் பூங்கா. கரம்பா தேசியப் பூங்கா. காஹுசி-பீகா தேசியப் பூங்கா. சலோங்கா தேசியப் பூங்கா.

**ஸிம்பாப்வே**

மானா குளத் தேசியப் பூங்கா, சாப்பி மற்றும் செவோர் பகுதி. பெரும் ஸிம்பாப்வே தேசியக் கட்டிடம். காமி அழிபாட்டுத் தேசியக் கட்டிடம்.

---

(!ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேரள நாட்டு சிற்றூர் ஆன காலடியில் பிறந்த ஆதிசங்கரர் பாரதத்தின் வடகோடி வரை சென்று தம் மதப்பிரசாரத்தை செய்து மக்களை ஆன்மீக வழிக்கு அழைத்துச் சென்று இருப்பதும், அதே போன்று தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த வைணவப் பெரியார் இராமானுஜர் கர்நாடகப்பகுதி வரை சென்று போசள அரசன் அவையில் இருந்து தொண்டு செய்திருப்பதும் தமிழ்நாட்டுக் கலாச்சாரம் தக்கண பகுதியிலும், வடநாட்டுப் பகுதியிலும் ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. இது மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே உரியது என்று கருதப்படும் பரதநாட்டியம் நமது தாய்த்திருநாட்டில் வடகோடியில் உள்ள காஷ்மீர் தேசத்திலும் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று அறிகின்றபோது தமிழ் நாட்டுக் கலாச்சாரம் எந்த அளவுக்கு வடநாட்டில் தாக்குதலை ஏற்படுத்தியுள்ளது என்பதை எண்ணி இறுமாப்பு எய்த முடிகிறது.

தமிழகத்தில் சமயப் பிரசாரம்செய்த அடியவர்களான நாயன்மார்களில் சிலர் காசி போன்ற வடநாட்டுத் தலங்களுக்குச் சென்று அங்குள்ள இறைவர்களைத் தரிசித்திருப்பது தமிழகத்தின் கலாச்சார வளர்ச்சியைக்காட்டுகிறது. தமிழகத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய அஸ்தியைக் கங்கை நீரில் கரைத்தல் வேண்டும் என்ற ஒரு நியதி தொடர்ந்து நிலவியிருக்கிறது. கி.பி. 14ஆம் நூற்றாண்டளவில் தமிழ் நாட்டில் ஆட்சி புரிந்த சம்புவராய மன்னர்களில் ஒருவன் தன் தந்தையின் அஸ்தியை கங்கையில் கரைப்பதற்காக தன் அதிகாரி ஒருவரை அனுப்பிய செய்தியையும், அவ்வதிகாரிக்கு நிலம் தானமாக அளித்துள்ள செய்தியையும் கல்வெட்டு புலப்படுத்துகிறது. அதில் இருந்து இற்றைக்குச் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழக மக்கள் கங்கைக்குச் சென்று புனித நீராடினார்கள் என்றும் கங்கை நீரில் இறந்தவர்களின் அஸ்தியைக் கரைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதும் அறிய முடிகிறது. தமிழ்நாட்டுக் கலாச்சாரமும், வடபகுதியில் உள்ள கலாச்சாரமும் ஒருங்கிணைந்து இருந்தன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. அது மட்டுமல்லாமல் கங்கை கரைக்குச் சென்று அங்கு கோதானம், பூதானம் போன்ற தானங்கள் செய்வது சிறப்புடையது என்று தமிழக மக்கள் கருதியிருப்பதும், கலாச்சார தொடர்பான அடிப்படைக் காரணத்தினால் என்பதை நாம் உய்த்து உணரலாம். தமிழக மக்களுக்கு காசி மாநகரம் எவ்வளவு புனிதமான தலமோ, அது போன்று வட இந்திய மக்களுக்கு இராமேசுவரம் புனிதமான தலமாகக் கருதப்பட்டது. இது வட இந்திய மக்களின் கலாச்சாரத்தில் தமிழகக் கலாச்சாரம் எந்த அளவுக்கு பங்கு வகித்துள்ளது என்பதை நமக்குப் புலப்படுத்துவதாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## பின் அட்டை

### செரங்கெட்டி தேசியப் பூங்காவும், நுகராங்கரோ பாதுகாப்பிடமும் (தான்ஸானிய ஐக்கிய குடியரசு)

15 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள புல்வெளியும் திறந்த காடுகளுமுள்ள செரங்கெட்டி தேசியப பூங்காவில் உலகிலே மிகுதியான மேய்ச்சல் விலங்குகள் உள்ளன. மே, ஜூன் திங்கள்களில் காட்டு எருதுகளும், மான்களும் நடுப் புல்வெளிகளிலிருந்து வரிக்குதிரைகளும்பூங்காவின்மேற்கிலுள்ள நீர்நிலைகளுக்கு இடம்பெயர்த்து செல்லுதல் இணையற்றகாட்சி விருந்தாகும். சிலவேளை 10கி மீ. தூரம் வரை விலங்குகள் கூட்டமாகச் செல்வதையும், அவற்றைக் கொல்லும் விலங்குகள் பின்தொடர்வதையும் காணலாம். இப்பூங்காவும் நுகராங்கரோ பாதுகாப்பிடமும் உலகிலே மிகப் பெரிய வனவிலங்குப் புகலிடமாகும். இதன் நடுவில் மாபெரும் நுகராங்கரோ எரிமலை வாய் உள்ளது. அணைந்துபோன இந்த எரிமலை விளிம்பு கடல் மட்டத்திலிருந்து 22,86மீ. உயரத்திலுள்ளது; குறுக்கே 15 முதல் 20 கி.மீ; 600மீ. ஆழம். இப்பகுதியில் பல தலைமுறைகளாக மசாய் ஆயர் வாழ்கின்றனர். அவர்களுடைய ஆடு மாடுகளும் பிற வனவிலங்குகளுடன் இங்கு புல்மேய்ந்து நீர் பருகுகின்றன. நுகராங்கரோ எரிமலை வாய்க்கு மேற்கில் ஒல்டுவை பிளவில் நடைபெற்ற அகழாய்வின்போது, விலங்கு மற்றும் மனித உடல்களின் பழம் படிவங்கள் கிடைத்தன. குறிப்பாக மனிதனின் உருமலர்ச்சி வரலாற்றிற்கு முக்கிய சான்று பகரும் " ஹோமோ ஹாபிலிஸ்" நிலைப் படிவங்கள் அங்கு கிடைத்தன.

### சான் சான் (பெரு)

சிமு அரசின் இப்பண்டைய தலைநகரின் அரிய அழிபாடுகள் மறைந்த இந்நாகரிகத்தின் எழிலைக் காட்டுகிறது. ஏறக்குறைய கி.பி. 1200இல் மோச் பள்ளத்தாக்கில் மோச்சிக்கா பண்பாட்டிற்குப் பிறகு சிமு நாகரிகம் தோன்றியது. அப்பள்ளத்தாக்கு ஒரு பரந்த பேரரசின் மையமாக இருந்தது. அவ்வரசு வடக்கே குவாயாகுவில் வளைகுடாமுதல் தெற்கே பாராமோங்கா வரை பரவியிருந்தது. இவ்வறண்ட பகுதியில் 80 கி.மீ. நீளமுள்ள கால்வாய் மூலம் ஆற்றுநீர் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனால் சான் சான் ஓரளவு வளம் பெற்றது. 20 கி.மீ. பரப்புள்ள சான் சான் கொலம்பஸ் காலத்திற்கு முந்திய அமெரிக்காவின் மிகப் பெரிய நகராக இருந்தது. அதன் நடுப்பகுதி 9 பெரிய நீள் சதுர வளாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது: இணையான தெருக்களை மண்மேடுகள் சூழ்ந்திருந்தன. அரச குடும்பத்தினர் அல்லது உயர்குடி மக்கள் வாழ்ந்த இவ்வளாகங்களில் ஆலயங்களும், வீடுகளும், தோட்டங்களும் கல்லறைகளும் நிறைந்திருந்தன. வீட்டுச் சுவர்களில் கடல் தெய்வங்களின் புடைப்போவியங்கள் இருந்தன சிமு கைவினைஞர் மரத்திலும், பொன், வெள்ளி, செம்பு உலோகங்களிலும் துணியிலும் அரும் பொருள்களைப் படைத்தனர். சான் சான் இரு பெரும் இடர்களுக்கு உட்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக அது கொள்ளையிடப்பட்டுள்ளது. மெல்லிய வீட்டுச் சுவர்கள் இயற்கை அரிப்புக்குள்ளாகியுள்ளன. சுவரோவியங்களும். இரு அரண்மனைகளும் இப்போது பாதுகாக்கப்பட்டுவருகின்றன. ஆனால் அந்நகரைப் பாதுகாப்பதற்கு முறையாக கட்டடங்களை உறுதிப்படுத்தவேண்டும். சான் சான் பகுதி இடருக்குள்ளான உலக மரபுச் செல்வங்களின் பட்டியலில் 1986இல் இடம்பெற்றது.

## உலக மரபுச்செல்வத்தைக் காப்பதற்கு நீங்களும் உதவலாம்

உலக மரபுச் செல்வ நிதிக்கு அரசுகள் உதவியளித்தபோதிலும், தனிமனிதரும் தனி நிறுவனங்களும் பொதுமக்களும் நிதி நன்கொடை வழங்கலாம். நீங்களும் இந்நிதிக்கு உதவியளித்து இவ்வரிய பணியில் பங்கு பெறலாம். நிதியுதவியை கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்பலாம்.

- செயலகம்.
  உலக மரபுச்செல்வக் குழு
  யுனெஸ்கோ,
  7 பிளேஸ் தெ ஃபோந்தெனோ
  75700 பாரிஸ்

  அல்லது

- ஃபிரெஞ்சு ஃபிராங்குகளில்:
  யுனெஸ்கோ நிதி (எண். 0330-1/5-770.002-4
  பொதுச் சங்கம்
  ஏஜி வட்டாரம், FB பிரிவு
  45, கிளேபர் தெரு
  75784 பாரிஸ் 16

- அமெரிக்காவில்:

  (1) யுனெஸ்கோ நிதி (எண். 949-1-191558)
  சேஸ் மான்ஹாட்டன் வங்கி, என்.ஏ.
  பன்னாட்டுப் பணமாற்றுப் பிரிவு
  1 நியூயார்க் பிளாசா
  நியூயார்க், N.Y. 10015

  (2) காசோலை மூலம்:
  (நிதி எண் 949-1-191558)
  சேஸ் மான்ஹாட்டன் வங்கி, என்.ஏ.
  பன்னாட்டு வங்கி நிறுவனம்
  380 மாடிசன் தெரு
  நியூயார்க். N.Y. 10017

நன்கொடை அனுப்பும்போது உலக மரபுச்செல்வ நிதிக்கெனத் தெளிவாகக் குறிப்பிடவும்.

---

## யுனெஸ்கோ உலக மரபுச்செல்வ மேசைக் குறிப்பேடு 1989 இப்போது கிடைக்கின்றது

- மூன்று மொழிகளில்: ஆங்கிலம், ஃபிரெஞ்சு ஸ்பானிஷ்
- உலக மரபுச்செல்வப் பட்டியலிலுள்ள இடங்கள், மற்றும் கட்டிடங்களின் 54 ஒளிப்படங்கள் விலை 64 ஃபிரெஞ்சு ஃபிராங்கு, 10 அமெரிக்க டாலர்

இதன் விற்பனைத் தொகை உலக மரபுச்செல்வ நிதிக்கு வழங்கப்படும், வேண்டுவோர் யுனெஸ்கோ வெளியீடுகளின் விற்பனை நிலையங்களுக்கு அல்லது யுனெஸ்கோ அச்சகம், 7, பிளேஸ் தெ ஃபோந்தெனோ, 75700 பாரிஸ் எனும் முகவரிக்கு எழுதலாம்.





## யுனெஸ்கோ கூரியர்

உலகைக் காட்டும் பலகணி

ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ மாதந்தோறும் 35 மொழிகளில் வெளியிடும் இதழ்.

ஆசிரியத் தலைமையகம்:

யுனெஸ்கோ, 7 பிளேஸ் தெ போந்தனே, பாரிஸ் 75700.

நிர்வாக ஆசிரியர்கள் :

ஆங்கிலம் : ரோய் மால்கின் கரோலின் லாரன்ஸ் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: பிரான்சிஸ்கோ பெர்ணான்டெ-ஸாண்டோ (பாரிஸ்)
ரஷ்யன்: தமரா சலாவ்யோவா மெமதோவா (மாஸ்கோ)
ஜெர்மன்: வெர்னர் மெர்க்ளி, (பெர்ன்)
அராபிக் : அப்தல் ரசீத் எல்சாதக் மஹ்மூதி
ஜப்பானி : செய்சிரோ கோஜிமா (டோக்கியோ)
இத்தாலியன் : மரியோ கெய்டோட்டி (ரோம்)
ஹிந்தி: ராம் பாபு சர்மா (டெல்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் ப்ரோய்டோ (டெல் - அவிவ்)
பெர்சியன்: சதோ வெனினி (டெஹ்ரான்)
டச்சு: பால் மோரென் (ஆண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கிஸ்: மெஃப்ரா இல்காஸர் (இஸ்தான்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)
கட்டலான்: ஜோன் கார்ரெராஸி மார்ட்டி (பார்சிலோனா)
மலேசியா: அப்துல் மானஃப் சாத் (கோலாலம்பூர்)
கொரியன்: பைக் சியாங்-கில் (சியோல்)
சுவாஹிலி: டெமினோ ருத்தாயே பெசிப்வா (தார் - எஸ். ஸலாம்)
கிரேடோ-செர்ப், மாசிடோனியன், செர்போ-கிராட்
ஸ்லோவேன்: பஸிடர் பெர்க்கோவிக் (பெல்கிரேட்)
சீனம்: ஷென் குவோஃபென் (பெய்ஜிங்)
பல்கேரியன்: கோரன் கோட்சேவ் (சோஃபியா)
கிரீக்: நிக்கோலஸ் பாபாஜியார்ஜியோ (ஏதென்ஸ்)
சிங்களம்: எ. ஜே. சுமனசேகரா பண்டா (கொழும்பு)
ஃபின்னிஷ்: மார்ஜட்டா அக்சேனன் (ஹெல்சிங்கி)
ஸ்வீடிஷ் : லினா ஸ்வென்சன் (டாக்ஹோம்)
பாஸக்: குருட்ஸ லாரனகா (சான் செபாஸ்டியன்)
தாய்: சாவித்திரி சுவன சத்ஹித் (பாங்காங்)
வியத்னாமிஸ: தாவோ துங் (ஹனாய்)
பாஸடோ: நஸீர் செஹாம் (காபூல்)
ஹௌசா: ஹபீப் அல்ஹசன் சோகோடோ


எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியருக்கே எழுதப்படவேண்டும்.

யுனெஸ்கோ கூரியர். மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ கூரிய'ரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்று அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் வெளியிடலாம். அவ்வாறுவெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும், ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம்பெறவேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்கப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர்' ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

REGD. NO. M. 8276



மேலே: தான்ஸானிய ஐக்கிய குடியரசிலுள்ள நுகராங்கரோ எரிமலை வாய்.
கீழே: பெருவிலுள்ள சான் சானின் அழிபாடுகள்
(39ஆம் பக்க விளக்கக் காண்க)



படிப்பகம்